
# நிராசை



திக்குவல்லை கமால்

# நிராசை

(ஒலி நாடகங்கள்)

# ஆசிரியரின் பிற நூல்கள்

சிறுகதை :

1. கோடையும் வரம்புகளை உடைக்கும்
2. குருட்டு வெளிச்சம்
3. விடுதலை
4. விடை பிழைத்த கணக்கு
5. புதிய பாதை
6. வரண்டுபோன மேகங்கள்

நாவல் :

1. ஒளி பரவுகிறது
2. நச்சு மரமும் நறுமலர்களும்
3. பாதை தெரியாத பயணம்

நாடகம்

1. புகையில் கருகிய பூ

கட்டுரை

1. மல்லிகை ஜீவா மனப்பதிவுகள்.

சிறுவர் இலக்கியம்:

1. பிறந்த நாள்
2. உதயபுரம்

# நிராசை

திக்குவல்லை கமால்

ஃபரீதா பிரசுரம்

இந்நூலானது தேசிய நூலக ஆவணவாக்கல் சபையின் உதவியுடன் வெளியிடப்பட்டுள்ள போதும், இந்நூலின் உள்ளடக்கமானது தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் கருத்துக்களைப் பிரதிபலிக்கவில்லை.

நிராசை

- ஒலி நாடகங்கள் -

உரிமை

- திக்குவல்லை கமால் -

முதற்பதிப்பு

- நவம்பர் 2005 -


இலங்கை தேசிய நூலகம் - வெளியீட்டில் உள்ள பட்டியல் தரவு

திக்குவல்லை கமால்

நிராசை / திக்குவல்லை கமால்- பண்டாரகம- ஆசிரியர் 2005 . ப. 140 : ச. மீ. 21.

ISBN : 955-95926-8-8 விலை : 150.00

i 894.8112 டிடிசி 22. ii தலைப்பு.

iii நாடகம்.

● NIRASAI (RADIO DRAMAS) ● COPY RIGHT - DIKWELLA KAMAL ● FIRST EDITION - NOVEMBER 2005 ● PAGES IIIV+132=140 ● COVER DESIGNED BY - PUSHPA ● ISBN : 955-95926-8-8 ● PRINTED BY Q.G.CRAPHICS 110-1/4, MALIBAN STREET, COLOMBO - 11 ● PRICE - RS 150 /=

சமர்ப்பணம்

---

சகோதரி

எம். ஜே. எஸ். மஹ்ஸூமா

அவர்களுக்கு.

# திறவுகோல்

தொலைக் காட்சியின் வரவால் வானொலி நாடகங்களுக் கேற்பட்ட தாக்க வீழ்ச்சி எவரும் அறிந்ததே.

ஒலி நாடகங்கள் கொடிகட்டிப் பறந்த காலத்தில் எழுதப்பட்ட ஏழு நாடகங்களின் தொகுப்பே இது.

ஒலி நாடகங்களுக்குரிய சிறப்பம்சங்களை அனு சரித்து இந்த நாடகங்கள் எழுதப்பட்டுள்ளன.

சமூக நாடகங்களுக்கென்று தனியானதொரு மொழி நடை நீண்டகாலமாகப் பேணப்பட்டு வந்தது. வானொலி நாடகக் கலைஞர்கள் பெரும்பாலும் கொழும்பு வட்டாரத் தைச் சேர்ந்தவர்களாக இருந்ததும் இதற்கொரு காரண மாகலாம்.

பிரதியாக்க எழுத்தாளர்கள் எங்கிருந்து எழுதினா லும் இதனை அனுசரிக்க வேண்டிய நிலை. ஒரு சில பரீட் சார்த்த முயற்சிகளை நான் குறிப்பிட வில்லை.

எனது சிறுகதை, நாவல்களில் இடம்பெறும் பிரதேச மொழி நடையை எவரும் இதனோடு போட்டுக் குழப்பிக் கொள்ள வேண்டியதில்லை.

இந்நூலாக்கத்தில் ஒத்துழைத்த சகலருக்கும் நன்றி.

இலக்கிய தாகமே இமயதாகம்


104. கஸ்ஸாலி மாவத
அட்டுலுகம
பண்டாரகம (இலங்கை).
038-2292118

அன்புடன்
திக்குவல்லை கமால்

# கதவுகள்

1

*நிராசை*

2

சத்தியங்கள் சாவதில்லை

3

நண்பர்கள்

4

விடிவுக்காக ஒரு முடிவு

5

கண்ணாடி மாளிகை

6

மயக்கங்கள்

7

பைத்தியம்

# நிராசை

## காட்சி — 1

பாத்திரங்கள் : நஸீரா, மரியம், டீச்சர், அதிபர்

இடம் : வீடு, பாடசாலை

நஸீரா - லெ.ஃ.ப்ட்..ரைட்...லெ.ஃ.ப்ட்.. ரைட்..

மரியம் - (வியப்போடு) ஆ..இதென்ன மகள்... ஸ்கூல்லிருந்து வந்ததும் வராததுமா...

நஸீரா - (சிரிப்பு) லெ.ஃ.ப்ட்...ரைட்... லெ.ஃ.ப்ட்...

மரியம் - மக.. மக.. இதென்ன... யா அல்லாஹ் என்ன அநியாயம்.

நஸீரா - அநியாயமில்லும்மா... இதுதான் மாச்பாஸ்ட்.

மரியம் - (வியப்போடு) அப்டீன்னா...

நஸீரா - இன்னக்கி எங்க ஸ்கூல்ல பழக்கித் தந்தாங் கும்மா.

மரியம் - ஸ்கூல்ல இப்படியெல்லாம் சொல்லித்

தருவாங்களா... ம்... கையையும் காலையும் ஆட்டியாட்டி புரியாத பாசையில் ஏதேதோ வெல்லாம் சொல்றதப் பார்த்தா என்ற தலையே சுத்த ஆரம்பிச்சிருச்சி...

நஸீரா - (சிரிப்பு) உம்மா நம்ம ஸ்கூல்ல பெரிய விழா எடுக்கப் போறாங்களாம்.

மரியம் - அதுக்கு..

நஸீரா - பெரிய பெரிய ஆக்களெல்லாம் வரப் போறாங்களாம்.

மரியம் - பெரிய பெரிய ஆக்களென்னா...

நஸீரா - இந்த உம்மாக்கு ஒன்னுமே வெளங்காது.

மரியம் - நானும் இந்த ஸ்கூல்லதாம்மா மூனு வகுப்புப் படித்தன். இதுவரைக்கும் இப்பிடியொன் னுமே நடக்கல்லியே. அதனால தான் மகள் கேட்டன்.

நஸீரா - எங்கட மந்திரி வாராரும்மா.

மரியம் - அடடா...

நஸீரா - கல்வி அதிகாரிகளெல்லாம் வாறாங்க.. அவங்கள வரவேற்கத்தான் இப்படி மாச் பாஸ்ட் பழக்கிறாங்க.

மரியம் - அப்படியா...

நஸீரா - அதுக்கு எல்லாரையும் எடுக்கல்லும்மா... ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் ரெண்ணு மூனு பேரத்தான் எடுத்தாங்க.

மரியம் - அப்ப அதில நஸீராவும் ஒருத்தியில்லயா.. ம்.. முதலாம் பிள்ளயா வார உன்ன எடுக்காம வேற யாரத்தான் எடுப்பாங்க.

நஸீரா - அப்பிடிச் சொல்லாதீங்க... எங்கட டீச்சர் இருக்காவே பொல்லாத டீச்சர்.

மரியம் - ஆபிதா டீச்சரத்தானே சொல்றீங்க.. அப்பிடி என்னம்மா நடந்திச்சி...

நஸீரா - சொல்றேம்மா... சொல்றன்

## -முன் நினைவு-

(பாடசாலை சூழ்நிலை... பிள்ளைகளின் கலகலப்பு)

டீச்சர் - (அதட்டலாக) பிள்ளைங்களெல்லாம் வந்து உங்க இடங்களில இருங்கோ.. ஆ.. அங்க என்ன கதைத்துக் கொண்டிருக்கீங்க... இன்னக்கி உங்களுக்கெல்லாம் முக்கிய மானதொரு விஷயம் சொல்லப்போறன். (மீண்டும் கலகலப்பு. அதனிடையே)

நஸீரா - என்ன டீச்சர் சொல்லுங்க டீச்சர்.

டீச்சர் - என்னென்டா எங்க ஸ்கூல்ல பெரிய கொண்டாட்டமொன்னு நடக்கப் போகுது... அதுக்கு பெரிய பெரிய ஆக்களெல்லாம் வாறாங்க... அதில மாச்பாஸ்ட்டெல்லா மிருக்கு.

நஸீரா - அப்டீன்னா என்ன டீச்சர்?

டீச்சர் - நம்ம விளயாட்டு ஸேர் இருக்காரே.. அவர் அதெல்லாம் அழகா பழக்குவார்.. சரி இதில பங்குபற்ற விருப்பமானவங்க கைய உயர்த் துங்க பாப்பம். (மீண்டும் கலகலப்பு)

ஆ.. ஆ... சத்தம் போடாதீங்க... கைய மட்டுந்தானே உயர்த்தச் சொன்னன். (அமைதி) இதென்ன எல்லாருமே கைய

உயர்த்திட்டீங்க.. நாலஞ்சி பேரத்தான் பிரின்ஸிபல் எடுக்கச் சொல்லியிருக்கார்.

நஸீரா - (கெஞ்சலாக) டீச்சர் என்னயும் எடுங்க டீச்சர்.

டீச்சர் - (கோபமாக) யார எடுக்கணுமென்னு எனக்குத் தெரியும்.. சும்மா விளையாட்டில்ல... அப்புறம் நெறையச் செலவிருக்கு.. அதயெல் லாம் செய்யக் கூடியவங்களத்தான் எடுக் கணும்.

நஸீரா - (கெஞ்சி) என்னையும் எடுங்க டீச்சர்.. எங்க வாப்பா எல்லாம் வாங்கித் தருவாங்க.

டீச்சர் - (கிண்டலாக) ஓ.. கட்டாயம் வாங்கித் தருவாங்க. அந்த மனிசன் படுற பாட்டுக்கு இது வேற.. ஆ... பிரின்ஸிபல் வாறார் எல்லாரும் ஒழுங்கா இருங்க. (கலகலப்பு)

நஸீரா - நான் கொஞ்சம் பேரத் தெரிவுசெய்திருக்கன் ஸேர்.

அதிபர் - அப்படியா.. அதவிட பீட்டீ ஸேரே தெரிவு செய்தா நல்லதில்லயா.. மற்ற வகுப்புகளில் அப்பிடித்தான் நடக்குது.. சரி அதிருக்கட்டும் உங்களுக்கும் முக்கியமான பொறுப்பிருக்கு.

டீச்சர் - முதல் விழா ரொம்ப அழகா செய்யணும் ஸேர்.

அதிபர் - ஆமா.. விழா மண்டபத்த அலங்கரிக்கிற பொறுப்பு உங்களுக்குத்தான். எப்பிடிச் செய்றது.. எவ்வளவு செலவு வரும்... ம்.. இந்த விபரங்களத் தந்தீங்கென்னா.

டீச்சர் - இதுக்கெல்லாம் அப்பிடி என்ன செலவு வரப்போகுது ஸேர்.. முடிந்தளவு செலவ

குறைத்துக்கொண்டால் நல்லதுதானே..

அதிபர் - அதாவது சிறப்பாகவும் சிக்கனமாகவும் செய்யணுமென்னு சொல்றீங்க.. ரொம்ப நல்லது.. ஆ... பிள்ளைகள் வாறாங்க.. அவங்கள கவனிங்க... (கலகலப்பு)

நஸீரா - (மகிழ்ச்சியோடு) என்னயும் எடுத்திட்டாங்க டீச்சர். இந்தாங்க ஸேர் தந்தாங்க... பெயரெல்லாம் இருக்கு.

டீச்சர் - அப்படியா பாப்பம்... அனீஸா... ஃபரீதா... ரஃபீக்கா... ருகையா... ரஹுமா... (தனக்குள்) நம்ம மகள் யஸீராவ எடுக்கல்லியே...

## - நினைவு நிறைவு -

மரியம் - ம்... பிரின்ஸிபல் தொர வராமலிருந்தா நஸீராவ எடுத்திருக்கமாட்டா இல்லியா.

நஸீரா - ஆமா.. அதுசரி இப்ப எனக்கு வெள்ளச் சட்ட சப்பாத்தெல்லாம் வேணுமும்மா... வாங்க முடியாத ஆக்கள நாளக்கே வந்து சொல் லட்டாம்.. எனக்கு வாப்பா வாங்கித் தருவார் தானேம்மா..

மரியம் - நிச்சயமா வாங்கித் தருவார் மகள்.. உங்கள ஒழுங்கா படிக்க வைக்கணுமென்னுதானே வாப்பா இவ்வளவு கஷ்டப்படுறார்.

நஸீரா - இன்னும் ரெண்டு கிழமதாம்மா இருக்கு... அதுக்குள்ள எப்பிடியும் வாங்கித் தரணும்... இன்னக்கே வாப்பாவோட சொல்லிப் போடுங்க.

மரியம் - கண்டிப்பா சொல்றன் மகள்.

நஸீரா - வாப்பா வரும்வரையில நான் இன்னக்கி தூங்க மாட்டன்..

மரியம் - சரிசரி.. மற்ற நாட்களில பசியோடதான் வீட்டுக்கு வாரது.. இன்னக்கென்னமோ அந்தக் கதையே இல்ல.. ம்...

## காட்சி — 2

பாத்திரங்கள் : ஸல்மான், டீச்சர், நஸீரா.
இடம் : பாடசாலை.

ஸல்மான் - ஆ... டீச்சர் உங்களத்தான்.

டீச்சர் - வாங்க வாங்க... நீங்க..

ஸல்மான் - நான் வந்து... உங்க வகுப்பில படிக்கிற நஸீராட

டீச்சர் - வாப்பா தானே..

ஸல்மான் - ஆமா ஆமா..

டீச்சர் - என்ன விஷயமா வந்தீங்க?

ஸல்மான் - ஏதோ கொண்டாட்டமென்னு மகள் சென்னா.. அதுக்கு சப்பாத்து வேற வேணுமாம்..

டீச்சர் - இல்லயில்ல.. அப்படியொன்னும் கட்டாய மில்ல. உங்கள கஷ்டப்படுத்த நாம விரும் பல்ல.. உங்களால முடியாதென்னா.. அதுக்கு பதிலா வேற யாரயும் போடலாம்.

ஸல்மான் - இல்ல டீச்சர் என்னால முடியும்.. அப்பிடி

அவசரமா இன்னக்கோ நாளைக்கோ வாங்கிக் கொடுக்க முடியாதென்னு சொல்லத்தான் வந்தன்.... சின்னப் பிள்ளைங்கட ஆச இல்லயா....

டீச்சர் - ம்... சரி சரி.

ஸல்மான் - வாரன் டீச்சர்.

டீச்சர் - (தனக்குள்) ம்... காசிக்கி வழியுமில்ல... ஆசைக்கு குறைச்சலுமில்ல....

(தூரத்தே லெ.ஃப்ட்.. ரைட்.. லெ.ஃப்ட்.. படிப்படியாகக் குறைதல்.. மாணவர் கலகலப்பு) ஆ.. பழகி முடிச்சிட்டீங்களா.. இனி வகுப்பில வந்திருங்க... ம்... இன்னும் சப்பாத்து வாங்காத ஆக்கள் எழும்புங்க.. ஆ.. நஸீரா மாத்திரந்தான் இன்னும் வாங்கல்ல...

நஸீரா - டீச்சர் எங்க வாப்பா வாங்கித் தர்ரதா சொல்லியிருக்கார்.

டீச்சர் - (எரிச்சலோடு) சும்மா எதுக்கு நீ வாப்பாவ கஷ்டப்படுத்தணும்... சப்பாத்து வாங்கச் சொல்லி பத்து நாளாச்சி.. ரஹ்மாட வாப்பா அடுத்த நாளே வாங்கிக் கொடுத்திட்டார்.... ம்... இப்பிடியில்லயா இருக்கணும்.

நஸீரா - (கெஞ்சலாக) டீச்சர் கண்டிப்பா எங்க வாப்பாவும் வாங்கித் தருவார் டீச்சர்.. என்ன விலக்கிப் போடாதீங்க டீச்சர்.

டீச்சர் - (தனக்குள்) ம்... கைல மடீல இல்லாத வங்க பிள்ளைங்களப் போட்டா இப்பிடித்தான்... கடைசி நேரம் வரையில இழுத்தடிச்சிக்கிட்டிருப்பாங்க... ம்... பிரின்ஸிபலுக்கு இதெல்லாம் விளங்கினாத்தானே.... (சத்தமாக) சரி

நஸீரா இன்னும் மூனுநாள் தானிருக்கு.. அதுக்குள்ள வாங்கிடணும்.. என்ன சரிதானே?

நஸீரா - சரி டீச்சர் (தனக்குள்) அல்லாவே வாப்பா இன்னக்காவது வாங்கிட்டு வருவா ரென்னா... ம்... எங்க வாப்பாவும் ரஹ்மாட வாப்பாவப் போல கடவெச்சிருந்தா பிரச் சினயே இல்லயே.

## காட்சி — 3

பாத்திரங்கள்: நஸீரா, மரியம், ஸல்மான்
இடம் : வீடு.

(இரவின் ஒலிக்குறிப்புகள்)

நஸீரா - வாப்பாவ காணல்லயே.. இன்னும் ஒரேயொரு நாள்தான்.

மரியம் - அதுதானே நானும் பாக்கிறன்....

நஸீரா - எனக்கு தூக்கமா இருக்கும்மா... இன் னக்கி எப்படியும் வாப்பா கொண்டு வருவார் தானேம்மா

மரியம் - ம்... இன்னக்கி சொணங்கிறதப் பார்த்தா கொண்டுவருவார் போலிருக்கு.. எதுக்கும் நீங்க தூங்குங்க மகள்

நஸீரா - டீச்சர் இன்னக்கும் கேட்டாங்கும்மா.

மரியம் - (தனக்குள்) பாவம் இவளுக்குத்தான் எவ்வளவு ஆசை... அவரும்தான் என்ன

செய்ய... நாளாந்தச் செலவுகளச் சமாளிக்கிறதே கஷ்டமா இருக்கிறப்போ...

ஸல்மான் - (வந்தபடி) என்ன மரியம் பெரிய யோசனையோட

மரியம் - ஆ.. வாங்க... பாத்துக்கொண்டிருந்திட்டு இப்பதான் மகள் தூங்கினாள்.

ஸல்மான் - ஆ... அப்பிடியா.. அந்த தேங்கா கறிகாய்கள எடுத்துவைங்க

மரியம் - இதெல்லாம் என்னத்துக்கு சப்பாத்து கொண்டு வந்தீங்களா...

ஸல்மான் - (அதிர்ந்து) நஸீராதான் சப்பாத்து சப்பாத்தென்னு உயிர வாங்கிறாள்.. இன்னக்கி

மரியம் - நானும் சேர்ந்துக்கிட்டன் என்னுதானே சொல்லப்போறீங்க.. கேட்காமலிருக்க முடியுமா பாருங்க (இதமாக) பிள்ளைங்கட சின்னச்சின்ன ஆசைகள நிறைவேற்ற முடியாதென்னா... நாம இருக்கிறதில என்ன அர்த்தம்.

ஸல்மான் - அதுக்காகத்தானே நானும் ஒவ்வொரு நாளும் துடிக்கிறன்.... ஆனா...

மரியம் - அவள் சின்னப் பிள்ளயா இருந்தாலும் எங்க நிலைய யோசித்து சப்பாத்து மாத்திரந் தானே கேட்டவள்.

நஸீரா - (தூக்கத்தில்) லெஃப்ட்... ரைட்... லெப்ட்...

மரியம் - (சிரித்து) தூக்கத்திலயும் வாய் பிதற்றல் பாருங்க.

நஸீரா - (தூக்கத்தில்) எங்க வாப்பா இன்னக்கி எப்பிடியும் கொண்டுவந்து தருவார்... டீச்சர்

என்ன விலக்கிடாதீங்க... நான் நாளக்கி சப்பாத்தோடதான் ஸ்கூலுக்கு வருவன் பாருங்க.

ஸல்மான் - ம்.. இவளுக்கு தூக்கத்திலயும் இதே நினைப்புத்தான் போலிருக்கு.

மரியம் - அதுதானே பாருங்க... நாலஞ்சி பேரத்தான் வகுப்பால எடுத்திருக்காங்க.. அப்பிடியிருக்க வாய்ப்புக் கிடைக்காமப் போனா...

ஸல்மான் - உண்மைதான் மரியம்.. இது எனக்குப் புரியிது... ஒவ்வொரு நாளும் கிடைக்கிற லாபம் வீட்டுச் செலவுக்குச் சரி.. இந்த நிலையில சப்பாத்து வாங்கிறதென்னா...

மரியம் - இனியென்ன செய்றது.. கடன்பட்டாவது..

ஸல்மான் - (பெருமூச்சு) எங்கள நம்பி யார்தான் கடன் தர இருக்காங்க... இடையில ஒரேயொரு நாள்... நாளைக்கு எப்படியாவது வாங்கிட்டு வாரன்..

மரியம் - அல்லாதான் மொகம் பார்க்கணும்... பெரிய பெரிய ஆக்களெல்லாம் விழாவுக்கு பண உதவி செய்திருக்காங்க.. அவங்க பிள்ளைகளிருக்க நஸீராவ எடுத்திருக்காங்களென்னா..

ஸல்மான் - கெட்டித்தனமுள்ள பிள்ளைங்களத் தானே எடுப்பாங்க.. நம்ம சனங்களுக்கு இதெல்லாம் எங்க புரியப்போகுது.

மரியம் - பொறாமையில பொங்கிறாங்க... சரிசரி வாங்க சாப்பிடுவம்.

## காட்சி — 4

பாத்திரங்கள் : மரியம், நஸீரா, அதிபர், டீச்சர், ஸல்மான்
இடம் : வீடு

மரியம் - என்ன மகள் இப்பிடி யோசிச்சுக்கிட்டே இருக்கீங்க.

நஸீரா - நாளக்கி இந்நேரம் விழாவெல்லாம் முடிந்திருக்குமில்ல .

மரியம் - பேப்பர்லயெல்லாம் போட்டிருக்கிறதா சொன்னாங்க உண்மையா...

நஸீரா - ஆமா... நோட்டீஸ், போஸ்டரெல்லாம் அடிச்சிருக்காங்க...

மரியம் - இன்னக்கி வாப்பா நேரத்தோட வருவார் பாருங்க.

நஸீரா - அதுமட்டுமில்லும்மா... பேப்பர்காரர்... டீவிக்காரரெல்லாம் வந்து போடோ பிடிப்பாங்களாம்

மரியம் - அடடா..

நஸீரா - மாச்பாஸ்ட்ல முன்வரிசயில நானிருக்கிறன்.. அப்ப ஃபோடோவில நானும் படுவன்.

மரியம் - ஆமா... அடுத்த நாள் பேப்பர்லயும் போடுவாங்க தானே... அத வெட்டியெடுத்து பத்திரமா வைக்கணும்.

நஸீரா - (கவலையோடு) உம்மா... இன்னைக்காவது வாப்பா சப்பாத்து கொண்டு வருவா

ராம்மா....

மரியம் - (சிரிப்பு) வாப்பா நேற்றே வாங்கிட்டாராமே..

நஸீரா - அப்டீன்னா...

மரியம் - வரும்போது எடுத்துக்கலாமென்னு கடையில வெச்சிட்டு யாவாரத்தில போயிருக்கார்.. வரும்போது சுணங்கிட்டுதாம்...

நஸீரா - இன்னக்கும் பூட்டியிருந்தா...

மரியம் - (தனக்குள்) யா அல்லா இன்னைக்காவது சப்பாத்தோட வரக் கிருப செய்.. மகள்ட மனச சரிபண்ணத்தான் இப்ப இப்பிடிச் சொன்னன்... என்ன மன்னிச்சிரு யா அல்லா.

நஸீரா - உம்மா... இன்னக்கி மட்டும் எனக்கு சப்பாத்து கிடைக்கல்லேன்னா இனி மேல நான் ஸ்கூலுக்கே போகமாட்டேன்.

மரியம் - அப்படியெல்லாம் நடக்காது நஸீரா.

நஸீரா - உம்மா... இன்னக்கி ஸ்கூல் விடுற நேரம் பிரின்ஸிபல் வகுப்புக்கு வந்தாரு.

மரியம் - வந்து....

## -முன் நினைவு-

அதிபர் - அன்புள்ள பிள்ளைகளே! எங்களுடைய பெற்றார் தினவிழாவை சிறப்பாக நடாத்த எல்லா ஏற்பாடுகளையும் பூர்த்தி செய்திருக்கிறோம். நிகழ்ச்சிகளில் பங்குகொள்றவங்க சொல்லப்பட்டுள்ள விதமான உடுப்புகளோடு எட்டுமணிக்கு முன்பதாக ஸ்கூலுக்கு வந்துசேரணும்.. பிரமுகர்கள்

வரும்போது அவர்கள வரவேற்க நாங்க தயாராக இருக்கணும்... உங்கட பெற்றார்களயும் கட்டாயமா வரச்சொல் லுங்க (கலகலப்பு... அதனிடையே)

டீச்சர் - இங்க நஸீரா.... என்ன சப்பாத்தெல்லாம் வாங்கிட்டியா.. என்ன பேசாம நிக்கிற... சப்பாத்து வாங்கிட்டியான்னு கேக்கிறன்.

நஸீரா - (தயங்கி) இன்னக்கி வாங்கிட்டு வாரதா வாப்பா சொன்னாங்க.

டீச்சர் - ம் (கோபமாக) கடைசி நேரத்தில என்ன தான் செய்யப் போறியோ தெரியல்ல.

## -நினைவு நிறைவு-

மரியம் - ம்... அந்தச் டீச்சர்தான்.

நஸீரா - விடமாட்டாம்மா... ஒவ்வொருநாளும் என்ற உயிர வாங்கிறா.... எல்லார்ர முன்னாலயும் வைத்துத்தான் குத்திக்காட்டினாம்மா.

மரியம் - ம்.... நாளக்கி நீங்க சப்பாத்துப் போட்டு அழகாப் போற நேரத்திலதான் அந்த டீச்சருக்கு வெளங்கும்.

நஸீரா - (சந்தோஷமாக) அங்க பாரும்மா.. வாப்பா.. வாப்பாதான் வாறார்.. சப்பாத்துப் பொட்டியுமிருக்கும்மா..

ஸல்மான் - மகள்.. மகள் நஸீரா... இந்தாம்மா சப்பாத்து...

நஸீரா - என்ற தங்க வாப்பா.... எவ்வளவு வாப்பா இது...

ஸல்மான் - வில இருக்கட்டும்.. காலுக்கு சரியா இருக்கான்னு முதல்ல பாருங்க... இங்க

மரியம் அதப்போட்டுப் பாருங்க.

மரியம் - அப்பிடி இருந்து கால நீட்டு புள்ள... ஆ..

நஸீரா - கணக்கா இருக்கு... கொஞ்சம் விடுங்க... நான் நடந்து பாக்கிறன்... சரிம்மா சரிசரி (சிரிப்பு).

ஸல்மான் - அல்ஹம்துலில்லா...

நஸீரா - வாப்பா நீங்க நாளக்கி யாவாரத்துக்கு போகக்கூடாது... கட்டாயம் வாப்பாமாரயும் கூட்டிட்டுத்தான் வரச்சொன்னாங்க.

மரியம் - வாப்பா எப்பிடிப் போனாலும் நானென்னா இப்பவே ரெடிதான்.

நஸீரா - அப்டீன்னா ரெண்ணு பேருமா வாங்களன். (எல்லோருமாகச் சிரிப்பு)

## காட்சி — 5

பாத்திரங்கள் : நஸீரா, டீச்சர், அதிபர்
இடம் : பாடசாலை மைதானம்

(லெ.ஃப்ட்... ரைட்.. தூரத்தே அணிநடை இசை)

நஸீரா - (இளைத்தபடி) குளித்துவிட்டு வரப்போனதில கொஞ்சம் சுணங்கிட்டுது.. ஒத்திக ஆரம்பிச்சிட்டாங்களோ தெரியல்ல... (இளைத்தல்) ஓ... லெ.ஃப்ட்.. ரைட் சத்தம் கேக்கிது... ஓ.. எல்லோரும் கிரௌண்டில தான் நிக்கிறாங்க...

டீச்சர் - (சத்தமாக) நஸீரா.. இங்க நஸீரா...

நஸீரா - என்ன டீச்சர் ?

டீச்சர் - (அதட்டலாக) அப்பிடி நில்.... இப்பதானா வாரது... எட்டுமணிக்கு முன்னால வரச் சொன்னா இதுதானா வாரநேரம்?

நஸீரா - நான் போய்ச் சேர்ந்துகொள்றன் டீச்சர்

டீச்சர் - ஒத்திக ஆரம்பிச்சிட்டாங்க... சனங்கள் நெறஞ்சிருக்காங்க.. குறுக்கால ஓடப் போறியா... கொஞ்சம் அப்பிடி நில்லு... நேரகாலத்துக்கு வரத்தெரியல்ல...

(லெ.ஃப்ட்... ரைட்... படிப்படியாகக் குறைதல்).

அதிபர் - ஆ.... யாரோ மயங்கி விழுந்திட்டாங்க போல.. ஓ... தூக்கிட்டுப் போறாங்களே.. (மாணவர்களின் இரைச்சல்) ஆ... விலகுங்க விலகுங்க.. நஸீராவா.. இப்பிடி எல்லாரும் சூழ்ந்து நின்னா எப்பிடி... விலகுங்க விலகுங்க.... மாச் பாஸ்ட்ல பங்குபற்றிர பிள்ளதானே எப்பிடி இந்தப் பக்கம் நின்றா டீச்சர்.

டீச்சர் - (தடுமாற்றம்) ஸேர் வந்து... ம்.. நஸீரா வந்து.. சொணங்கித்தான் வந்தாள்.

அதிபர் - அதுக்கென்ன இப்ப ஒத்திகதானே நடக்கிது.

டீச்சர் - வந்து நஸீரா வரமாட்டான்னு நெனச்சன்.. அதுக்குப் பதிலா...

அதிபர் - உங்க மகள அனுப்பினீங்கில்லயா... (கோப மாக) டீச்சர்... குழந்தைகளோட பழகிற உங்களுக்கு குழந்தைகளின்ற மனோ நிலைய சொல்லித்தரத் தேவயில்ல.. நீங்க

செய்த வேல எவ்வளவு தூரம் அவள் மனத தாக்கியிருக்கு பாத்தீங்களா? (பிள்ளைக ளின் கலகலப்பு)

ஏன் ஏன் இங்க எல்லாரும் சுத்தி வளைக்கிறீங்க... அந்தப் பக்கமா போங்க.

நஸீரா - ஆ.... ஆ...

அதிபர் - மாஸ்டர் மயக்கம் தெளிஞ்சிட்டு வருது.. ட்ரீட்மென்ட கொடுத்து எப்பிடியாவது ரெடிபண்ணி எடுங்க.. இன்னும் அரமணித் தியாலம் இருக்குதானே....

நஸீரா - (பிதற்றல்) ஆ... ஆ... சப்பாத்து.. நான்... டீச்சர் .. லெ.்.ப்ட்.... டீச்சர் ....

# சத்தியங்கள் சாவதில்லை.

## காட்சி—1

பாத்திரங்கள் : ராஸியா, ரகீம் ஹாஜி
இடம் : வீடு

ராஸியா - (கோபத்தோடு) இதுக்கு மாத்திரம் நான் விட்டுக் கொடுக்கப் போறதில்ல. உங்க வாப்பா காலத்திலிருந்தே இந்த வீட்டில செய்துவந்த விஷயத்துக்கு நீங்க முற்றுப் புள்ளி வைக்கிறீங்க. இது நான் சொல்றதா மட்டும் நினைக்காதீங்க. ஊரே சொல்ற விஷயம் (இளைத்தல்)

ரகீம் ஹாஜி- (அமைதியாக) ஊர் சொல்லட்டும் உலகம் சொல்லட்டும். எல்லாவற்றயும் விட அல்லா சொல்ற ஒன்றிருக்கே அதுக்கு மாற்றமா யார் சொன்னாலும் அத விட்டுவிட வேண்டியதுதான்.

ராஸியா - (கடுமையாக) இங்க பாருங்க புதுசா உங்களுக்கு ஒன்னும் நான் சொல்ல வரயில்ல. வருஷா வருஷம் நீங்களே செய்துவந்த விஷயத்த திடீர்னு நிறுத்தாதீங்கென்னு சொல்றன்.

ரகீம் ஹாஜி - உண்மதான் வருஷா வருஷம் அப்படிச் செய்திருக்கக்கூடாதுதான்.... செய்தது தப்பென்னு இப்பதானே தெரியிது. தப்பென்னு தெரிந்த பின்னாலும் தொடர்ந்து அதையே செய்றதென்னா..

ராஸியா - சிரிப்பாங்க... கைகொட்டிச் சிரிப்பாங்க. ஒரு கூட்டம் திட்டித் தீர்ப்பாங்க.. இன்னொரு கூட்டம்...

ரகீம் ஹாஜி- அத ஒன்னும் நான் மறுக்கல்லியே... வரட்டு கௌரவத்தால மனிசர திருப்திப்படுத்த லாம்... அல்லவா...

ராஸியா - (பதறி) ம்.... வருஷத்தில ஒரு நாளில இந்த வீட்டு முற்றத்தில ஊர் மக்களெல்லாம் வந்துகூடி... அவங்க செய்ற துஆ பறக்கத்த இல்லாமச் செய்யப் போறீங்க.

ரகீம் ஹாஜி- (அமைதியாக) இங்க மட்டுமில்ல ராஸியா.. எங்கயுமே இந்த நிலம மாறித்தான் போச்சு. அல்லாட பேரில நாங்க கொடுக்கக்கூடியத பிரயோசனமா செய்யனுமென்னு எல்லா ருமே உணர்ந்திட்டாங்க... அதுக்கு நான் மாத்திரம் விதிவிலக்காக முடியுமா...?

ராஸியா - (தனக்குள்) இந்த மனிசனுக்கு என்ன தான் சொன்னாலும் விளங்குதில்ல. நாலுபேரக் கூப்பிட்டு யாருக்கும் தெரியாம அள்ளிக்

கொடுக்கிறதால அவங்க பயனடைவாங்க தான்.. ம்.. இனி நம்மல யாரு மதிக்கப் போறங்க.

ரகீம் ஹாஜி– ஒரு மனிதன்ற ஒரு நேரச் சாப்பாட்டுப் பிரச்சினய தீர்க்கிறதவிட அவங்கட அடிப் படைப் பிரச்சினயொன்ன தீர்க்க முடியு மென்னா எவ்வளவு பெரிய விஷயம்! நீங்க ஒன்னுக்கும் யோசிக்காதீங்க. அல்லா எங்களுக்கு ரஹ்மத் செய்வான்.

ராஸியா – ம்.. (பெருமூச்சு)

## காட்சி — 2

பாத்திரங்கள் : நியாஸ், மரியம்
இடம் : வீடு

நியாஸ் – (வந்தபடி) உம்மா.

மரியம் – என்ன இன்னக்கி இம்மட்டுச் சுணக்கம்?

நியாஸ் – ஒன்னுமில்லும்மா (பெருமூச்சு) சும்மா கதச்சுக்கிட்டிருந்தன்... நேரம் போச்சு

மரியம் – அதென்னப்பா அப்படிப் பெரிய கத.. பிள்ளைங்க வாப்பா வாப்பான்னு தேடிக் கிட்டே தூங்கிட்டாங்க.

நியாஸ் – அதுதானே பாத்தன் வீடு ரொம்ப அமை தியா கிடக்கே.

மரியம் – முகத்தில ஏதோ சந்தோஷம் தெரியிறாப் போல..

நியாஸ் - உண்மதாம்மா (உற்சாகமாக) சந்தோஷம், சொல்ல முடியாத சந்தோஷம்.

மரியம் - சரிசரி அந்த சந்தோஷத்த எனக்கு சொல் லக் கூடாது.

நியாஸ் - உங்களிட்ட சொல்லாம வேற யாரிட்ட சொல்றது.

மரியம் - சரீப்பா சொல்லன்.

நியாஸ் - இந்த முற ரகீம்ஹாஜி சல்லி பங்கிட மாட்டாராமே.

மரியம் - (வியந்து) அப்பிடியா.. அதிசயமா இருக்கே.

நியாஸ் - ஆனா உண்ம.

மரியம் - ஊரெல்லாம் கவலப்படப் போறாங்க... அதுக் குள்ள சந்தோஷம் வேற.

நியாஸ் - காலம் கடந்த ஞானம்.

மரியம் - ஆனா... என்னாலேன்னா இத நம்ப முடியாது பாரு.

நியாஸ் - ஏம்மா அப்பிடிச் சொல்றீங்க.

மரியம் - ஏன்னா... ஒருவேள ரகீம்ஹாஜி இதுக்கு விரும்பினாலும் அவங்க மனைவியாக்கள்...

நியாஸ் - அவங்களாலதான் இவ்வளவு காலமும் அவர்கூட இழுபறிப் பட்டுக்கிட்டிருந்திருக் கார்போல.

மரியம் - அவங்கள சமாளிக்கக்கூடிய தைரியம் அவருக்கிருக்காதே.

நியாஸ் - காலம் அவர நிர்ப்பந்தப்படுத்தியிருக்கு.

மரியம் - பேப்பர்லகூட இருந்ததாகக் கதச்சிக்கிட் டாங்க. யாரோ ஒரு ஹாஜி ஒரு காணி வாங்கி வீடு கட்டிக் கொடுத்து ஒரு குடியிருப்பயே உருவாக்கிட்டாராமே.

நியாஸ் - உண்மதாம்மா... இது மட்டுமில்ல சில இடங்களில ஃபெக்டரிகள அமச்சி கொஞ்சப்பேர அதுக்கு உரிமையாளர் களாக்கி..

மரியம் - எவ்வளவு நல்ல விஷயம் பாரு.

நியாஸ் - இன்னும் சில இடங்களில் சொந்தமா யாவாரம் பண்ண போதுமான பணம் கொடுக்கிறாங்க.. ஏழைப் பிள்ளைங்களுக்கு படிப்புக்கு வசதிசெய்து கொடுக்கிறாங்க.

மரியம் - நம்ம ஆக்கள் இதுவரையில கியூவில நிறுத்தி ஐம்பது நூறு கொடுத்ததத் தவிர வேற எதுவுமே சாதித்ததில்ல.

நியாஸ் - இப்பிடிச் சொல்லாதீங்க உருப்படியா ஏதா வது செய்ங்களென்னு இருபது வருஷத் துக்கு முன்னாலயே நாங்க சொல்லிட்டம்.

மரியம் - (மகிழ்ச்சி) அடடா இப்பதானே புரியிது.. இருபது வருஷத்துக்கு பிறகாவது உன்ற யோசனய ஏத்துக்கிட்டது சந்தோஷ மில்லயா.

## காட்சி — 3

பாத்திரங்கள் : மரியம், சாகிர், நியாஸ், ரகீம் ஹாஜி, ராஸியா
இடம் : வீடு

மரியம் - (தனக்குள்) யாரோ வர்ராங்க... ம்.. யாரென்னு...

சாகிர் - (வந்தபடி) மரியம் தாத்தா... என்ன ஒரு மாதிரியா பாக்கிறீங்க?

மரியம் - நீங்க நீங்க சாகிர் இல்லயா...

சாகிர் - ஆமா...

மரியம் - என்ன இது ரொம்பத்தான் உடஞ்சு போயிட்டீங்களே.

சாகிர் - உடலால மட்டுடல்ல... உள்ளத்தாலயும்...

மரியம் - அப்பிடி இருங்களன். ம்... ரொம்பக் காலத்துக்குப் பிறகு இந்தப் பக்கம்.

சாகிர் - இருபது வருஷத்துக்கு மேலிருக்குமென்னு நெனக்கிறன்.

மரியம் - பாத்தீங்களா ஒரே ஊருக்குள்ள இருந்துக்கிட்டு இவ்வளவு இடைவெளி.

சாகிர் - (பெருமூச்சு) அந்த இடைவெளி இனியும் தொடரக் கூடாது பாருங்க.

மரியம் - பிள்ளைங்களெல்லாம் எப்பிடி இருக்காங்க.

சாகிர் - சொகமா இருக்காங்க... கல்யாண வயஸில

ரெண்டு கொமருப் புள்ளைங்க... ஸ்கூல் போற பொடியங்க ரெண்ணு.

மரியம் - பார்க்கவே கவல... ரொம்ப நொந்து போயிட்டீங்க.

சாகிர் - (கவலையோடு) மனைவி நோயில விழுந்து... ரெண்டு வருஷமா ஹொஸ்பிடலும் கையுமா அலஞ்சி... அவங்க மௌத்தானதோட எல்லாமே போச்சு (பெருமூச்சு)

மரியம் - ம்... நோய்துன்பம் கஷ்டநஷ்டம் யாருக்குத் தானில்ல .

சாகிர் - என்னப்போல யாருக்குமே இல்ல மரியம் தாத்தா.

மரியம் - பொறுமையோட சகித்துக்கொண்டு வாழ்றதிலதான் அல்லாவுடய நெருக்கமிருக் கில்லயா.

சாகிர் - ஏதோ வாழ்ந்துக்கிட்டிருக்கன். அதுக்குப் பிறகு தொழில் துறவிலகூட தல தூக்க முடியாமப் போச்சு.

மரியம் - சரிப்பா... நானும் ஏதேதோ சொல்லிக் கிட்டிருக்கன். என்னத்துக்கு வந்ததென்னு கூட கேக்கமறந்திட்டன்.

சாகிர் - பரவாயில்ல. உங்க மகன ஒருக்கா கண்டு கதைக்கலாமென்னுதான் வந்தன்.

மரியம் - இப்பதான் வெளிய போனவன்... வந்திரு வான்... அதுசரி வீடுவாசலெல்லாம் ஒழுங்கா இருக்கில்லயா... வித்துக்கித்துப் போடல லியே.

சாகிர் - அதொன்னுதான் இப்போதைக்கு இருக் கிற சொத்து.

மரியம் - பொம்புளப் புள்ளைங்க இரண்டு பேர்.. ஏதோ வீடு இருக்கிறதே பெரிய காரியம்

சாகிர் - ஆமா அவங்க வாழ்க்கயாவது சந்தோஷமா அமஞ்சிட்டாச் சரிதான்.

மரியம் - அந்தா மகனும் வாரார்போல...

சாகிர் - ஆமா ஆமா வரட்டும்.

மரியம் - (வெளியே பார்த்து) இங்க சீக்கிரம் வாப்பா... சாகிர் உன்னத் தேடிக்கிட்டு வந்து நிக்கிறான்.

நியாஸ் - ஆ... சாகிர் நானவா.. ரொம்ப காலத்துக்குப் பிறகு.

சாகிர் - ஆமா... இதுக்கு மேலயும் என்னால பொறுக்க முடியல்ல... அதனால ஓடோடி வந்திட்டன்.

நியாஸ் - (வியந்து) சாகிர் நானா நீங்க என்ன சொல்றீங்க.

சாகிர் - நீங்க மற்ந்து போயிருக்கலாம்... ஆனா நான் மறந்து போகல்ல அதனாலதான்.

மரியம் - சரிசரி சுத்தி வலச்சுக்கிட்டிருக்காம விஷயத்த..

நியாஸ் - (தனக்குள்) ஏதோ பழைய விஷயங்க அவர் மனச உறுத்திது போலிருக்கு.

சாகிர் - (கம்மிய குரலில்) நியாஸ் நீங்க என்ன மன்னிக்கணும் நியாஸ்... ஏதோ புத்தியில் லாத்தனத்தில உங்க மனச நோவிச் சிட்டன்.

மரியம் - (தனக்குள்) இதென்ன குழந்தபிள்ள மாதிரி

அழுகிறாரே...

சாகிர் - (அழுதபடி) என் மனசு கேக்கல... அதனாலதான் ஓடோடி வந்தன் பாருங்க.

நியாஸ் - (நிதானமாக) சாகிர்நானா இங்க பாருங்க. தவறுசெய்யாத மனிசன் யாரிருக்காங் கென்னு கேக்கிறன்... தவற உணர்ரப்போ பிடிவாதமா இருக்காம திருந்திக் கொள்றது பெரிய விஷயம் பாருங்க.

சாகிர் - இருபது வருஷத்துக்கு முன்னால்...

நியாஸ் - ஆமா இருபது வருஷத்துக்கு முன்னால நடந்த விஷயம் ஒன்றக் கூட நான் மறக்கல்ல... இன்னக்கிப் போல எல்லாமே ஞாபகமிருக்கு...

## - முன் நினைவுக் காட்சி -

நியாஸ் - (கம்பீரமாக) வாலிப நண்பர்களே. (செருமல்) இவ்வளவு நேரமாக ஒவ்வொருவரும் தெரிவித்த அபிப்பிராயங்களை கேட்டுக் கொண்டிருந்தேன். அபிப்பிராய சுதந்திரம் தாராளமாக இங்குண்டு... ஒரு விடயம் சம்பந்தமாக பல கருத்துக்கள் முன்வைக்கப் படுவது ஒவ்வொருவரதும் சிந்தனை வளர்ச்சியைக் காட்டுகிறதே தவிர அதனை முரண்பாடுகளாகவோ பகைமையாகவோ நாங்கள் எடுத்துக்கொள்ளக் கூடாது.

குரல் - ஆமா சரீயாச் சொல்லிட்டார் (கலகலப்பு)

நியாஸ் - (செருமல்) நாங்கள் வாலிபர்கள்... ஒரு பெரும் சமுதாயக் கடமை எங்கள்மீது சுமத்தப்பட்டுள்ளது... சமுதாயத்தைக்

கூர்ந்து நோக்கி பிரச்சினைகளை உரை கல்லிலிட்டுப் பார்ப்பது எமது தலையாய கடமை.. மகாகவி அல்லாமா இக்பால் இப்படிச் சொன்னார்... எந்த இளைஞர்களின் இதயம் இரும்பைப்போல் உறுதியுடையதாக இருக்கிறதோ அந்த சமுதாயத்துக்கு வாள் தேவையில்லை என்றார்.

குரல் - ஆஹா அற்புதம் அற்புதம் (கலகலப்பு)

நியாஸ் - ஒரு சமுதாயத்தின் வசதியீனத்தையும் வறுமையையும் வேரோடு அழிக்கும் அருமருந்தாக ஸக்காத் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது... அந்த ஸக்காத்தை கடமை கழிப்பாகவும் மேற்பூச்சாகவும் வைத்து விளையாட்டுக் காட்டுவதை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்க முடியாது... ஸக்காத் கொடுக்காதவர் மீது அபூபக்கர் ஸித்தீக் ரழியல்லாஹு அன்ஹு போர்ப் பிரகடனம் செய்ததை நாம் லேசாக எடுத்துக் கொள்ளக் கூடாது.

குரல் - சுப்ஹானல்லா (கலகலப்பு)

நியாஸ் - (செருமல்) இந்த வகையில் எமது கிராமத்தின் நிலைமை மிகமிகக் கவலைக்கிடமாகவுள்ளது. சம்பந்தப்பட்டவர்களுக்கு உண்மையை உணர்த்தாமல் முகத்துக்காகவும் முகஸ்துதியாகவும் மௌனம் சாதித்தால் எங்களுடைய நெற்றியிலே முனா∴பிக் என்ற முத்திரைதான் குத்தப்படும். ஏதோ கொஞ்சம் படித்தவர்கள்... சிந்திப்பவர்கள் என்ற வகையில் நாளை அல்லாவின் கேள்விக்கு நாங்கள் பதில் சொல்ல வேண்டியவர்கள்.

குரல் - உண்மைதான் உண்மைதான் (கலகலப்பு)

நியாஸ் - வாலிப நண்பர்களே... இந்த சங்கத்தின் அமீர் என்றவகையில் உங்கள் மஷூறாவை மனதில் கொண்டு நான் எடுத்த முடிவு இதுதான்.

குரல் - சொல்லுங்க சொல்லுங்க.

நியாஸ் - வெள்ளிக்கிழமை ஒரு நோட்டீஸ் வெளியிட வேண்டும்.

பலர் - இன்ஷா அல்லாஹ்.

## - முன்நினைவு: இன்னொரு காட்சி -

**(கலகலப்பான சூழ்நிலை)**

நியாஸ் - வாங்க வாங்க... புர்கான், நிஸ்தார், அஸீஸ் இந்தாங்க பிடிங்க... மூனு பக்கமாப் போங்க... சின்னப் பொடியங்களுக்கு கொடுத்து வீணாக்காதீங்க. ... நான் இதில நிக்கிறன் (கலகலப்பு).

சாகிர் - (யோசித்தபடி) ம்... என்ன நோட்டீஸ் பங்கிடுறாங்க. ம்... இங்க இங்க எனக்கொன்னு.. டேய் போங்கடா... இந்தச் சின்னதுகளால ஒன்னும் செய்யேலாது (கலகலப்பு)

நியாஸ் - வீணாக்காதேங்கொ... ரெண்டுமூணு எடுக்கிறாங்க. அஸீஸ் அஸீஸ் அப்புறம் தேவப்படும். (கலகலப்பு படிப்படியாக ஓய்தல்) அப்பாடா இவ்வளவுதான் மிச்சம்.

சாகிர் - (கோபமாக) ம்... நான் நெனச்ச எங்காவது பள்ளீல கந்தூரியாக்குமென்னு... முஸ்லிம்

இளைஞர் சங்க வெளியீடு.. அட நம்ம ஊரில இப்பிடியொன்றிருக்கா... ஸக்காத் பணம் பயன்படுகிறதா...?ம்... தலைப்பு.

நியாஸ் - (தனக்குள்) அடிச்சிப் பறிச்சி வாங்கிக்கிட் டாங்க... இப்ப கூடிக் கூடி வாசிக்கிறாங்க... லேசா ஜீரணித்துக்கொள்ள மாட்டாங்க. ம்... எதுக்கும் நாம ரெடியாத்தானி ருக்கணும்.

சாகிர் - (சத்தமாக) எனக்குத் தெரியும் நான் நெனச்சது சரியாப் போச்சு.. இவனுகள் ஊருக்குப் பெரிய மனிசனாப் போறாங்கள்... ஸத்தார் நானா பாத்தீங்களா ஹாஜிமார் - மொதலாளிமாரயெல்லம் தாக்கு தாக் கென்னு தாக்கியிருக்கானுகள்... அடுத்த மனிசனுக்கு ஐந்து சதம் கொடுக்காத வனுகள். ஆயிரக்கணக்கில கொடுக்கிற வங்கள அவமானப்படுத்தியிருக்காங்க.. ம்... இதுக்கெல்லாம் விட்டுக் கொடுத்தா நாம என்னத்துக்கு இருக்கணுமென்னு கேக் கிறன். நாலு புஸ்தகம் படிச்சிட்டா நாங்க தான் ஆக்களென்ன நெனப்பு (நேர இடைவெளி)

நியாஸ் - (நிதானமாக) தைரியமா இருங்க.. கொஞ்சம் பேர் துள்ளிக்குதிப்பாங்க.. துள்ளிக் குதிச்சு சம்பந்தப்பட்டவங்களுக்கு தங்கட விசுவாசத்த காட்டிக் கொள்ளு வாங்க... அதுகூட அவங்களிட்ட பிடுங்கிற துக்குத்தான்.. நம்ம நோக்கம் யாரயும் புண்படுத்திறதில்ல.. பண்படுத்துறதுதான். (நேர இடைவெளி)

சாகிர் - என்ன சொன்னீங்க வாசிக்கட்டா.. இத யெல்லாம் வாசிச்சிக்கிட்டிருக்க எனக்குப் பொறுமயில்ல... ம்... கைகாலெல்லாம் துடிக்குது.. சரி கேளுங்க.. (செருமி) மணிக்கணக்காக கால்கடுக்க காத்திருக்க வைத்து.. ஐம்பது நூறென்று பிச்சைக் காசு போட்டு பெரிதாக பிதற்றிக் கொள்வ தெல்லாம் வெட்கப்பட வேண்டிய விஷயம். மனிதனின் சுய கௌரவத்தை தூண்டில் போட்டு வெளியிழுக்கும் வெறுக்கத்தக்க செயல்.. ஸக்காத் என்பது விளம்பரமல்ல.. தொழுகையோடு இணைத்துப் பேசப்படு கின்ற உயரிய கடமை (பெருமூச்சு) இதுக்கு மேல என்னால வாசிக்க முடியாது. என்ற ரத்தம் கொதிக்கிது (இளைத்தல்) எல்லாரும் அப்பிடியே வாங்க... நேரே ரகீம் ஹாஜி வீட்டுக்குப் போவம்.. வாங்க வாங்க... அவர் மட்டும் ஒரு வார்த்த சொன்னா ரென்னா... இந்த நியாஸயும் அவன்ட ஆக்களயும் துண்டு துண்டா நொறுக்கிப் போடுவன். ஆமா... (கலகலப்பு).

## - முன்நினைவு - இன்னொரு காட்சி -

மரியம் - (கோபத்தோடு) நியாஸ் நீ என்ன காரியம் செய்திட்டு வந்திட்டாய். என்ன நிம்மதியா இருக்கவிடமாட்டியா?

நியாஸ் - (நிதானமாக) அப்படி என்னம்மா நடந் திட்டுது.

மரியம் - (கோபம்) ஒன்னும் நடக்கல்ல... ஊரத் திருத்த உன்னால முடியாது.. சல்லி உள்ள

வன் என்ன கூத்தச்செய்தாலும் அதயெல் லாம் பார்த்திட்டு மௌனமா இருந்தால் தான் இங்க இருக்கமுடியும் புரியிதா..

நியாஸ் - இல்ல... அவங்க செய்றதெல்லாம் சரீன்னு சொல்லிக்கிட்டிருந்தா சந்தோஷமா இருக் கலாம் (சிரிப்பு)

மரியம் - ஊரோட ஒத்துப்போன்னு சொல்றாங்கில்ல.

நியாஸ் - அப்பிடி விஷயங்களும் இருக்கும்மா... அநியாயங்களுக்கும் அட்டூழியங்களும் அல்லாவுக்கு மாத்தமா நடக்கிறதுக்கும் ஒத்துப்போக முடியுமான்னு கேக்கிறன்... நாலக்கி அல்லாவிடத்தில ஜவாபு சொல்ல வேண்டிய பொறுப்பு எங்க ஒவ்வொருத்த ருக்கும் இருக்கும்மா.

மரியம் - ஏதோ நோட்டீஸெல்லாம் அச்சுப்போட்டு பள்ளிவாசல்ல பங்கிட்டியாமே... ம்..

நியாஸ் - இது நான் மட்டும் செய்த வேலயில்லும்மா... ஒரு சங்கம் செய்திருக்கு. அதில ஏதும் பிழயிருந்தா அதத் திருத்திக் கொள்றதுக்கு நாங்க தயாராத்தானிருக்கோம்.

மரியம் - (பயந்து) எனக்கென்னா ஒன்னும் விளங்கல்ல.. கேள்விப்பட்டதிலிருந்தே என்ற கைகாலெல்லாம் நடுங்கிது. ஏதாவது நடந்தா யாரிட்டப்போய்ச் சொல்றது.. ம்... நமக்கு யாரிருக்காங்க.

நியாஸ் - அல்லா இருக்கான்... அவன் திருப்திக் காகத்தான் நாங்க இவ்வளவையும் செய்றம்... ஸக்காத் பணத்த பயனுள்ள முறையில பயன்படுத்தணுமென்னு தானே சொல்றம்.

மரியம் - சரியா இருக்கலாம் மகன்... தாங்க பிழயென்னு அவங்க ஒரு நாளும் ஒத்துக்க மாட்டாங்க

நியாஸ் - இன்னக்கி ஒத்துக்காம இருக்கலாம்... ஆனா என்னக்கோ ஒருநாள் ஒத்துக்க வேண்டிவரும்.

மரியம் - (கோபம்) சும்மா கனவு காணாதே நியாஸ்... ஐம்பது வருஷமா இந்த ஊரில வாழ்ந்துக் கிட்டுச் சொல்றன்.

## - முன் நினைவு - இன்னொரு காட்சி -

சாகிர் - (சத்தமாக) ஹாஜியார்... ஹாஜியார்...

ராஸியா - (உள்ளே) இங்க பாருங்க இங்க பாருங்க... உங்களத்தான் ஒரு பட்டாளமே தேடி வந்திருக்கு.

சாகிர் - (சத்தமாக) ஹாஜியார் ஹாஜியார்.

ராஸியா - எனக்குத் தெரியும்... உங்கமேல எவ்வ ளவோ பேர் முஹப்பத்தா இருக்காங் கென்னு.

ரகீம் ஹாஜி - (சிரிப்பு) ஆ... வந்திட்டன் வந்திட்டன்... இதென்ன சாக்கிர் உங்க தலைமையில...

சாகிர் - (கடுமையாக) எதுக்கும் உங்களிட்ட ஒரு வார்த்த கேட்டிட்டு போகலாமென்னுதான் ஜும்ஆ முடிந்து நேரே இங்க வந்தம்.

ரகீம் ஹாஜி - நோட்டீஸ் விசயத்த சொல்றீங்க.

சாகிர் - ஆமா... உங்களப்போல பெரிய மனிதர்கள இப்பிடி கொச்சப்படுத்திறத நீங்க பொறுத் துக்கிட்டாலும் நாங்க பொறுத்துக்க

மாட்டம் (கலகலப்பு) ஹாஜி என்ன மௌனமா இருக்கீங்க.

ராஸியா - அவர் அப்பிடித்தானே... ஒரு நேரச் சாப்பாட்டுக்கு வழி இல்லாதவங்கெல்லாம் புத்தி சொல்லப் புறப்பட்டிட்டாங்க... அவங்க தைரியத்தப் பாருங்க... காருக்குள்ளயும் நோட்டீஸ் போட்டிருக்காங்க.

சாகிர் - (கோபமாக) அப்பிடியா செய்திருக்காங்க... இவங்க திமிருக்கு விட்டுக் கொடுக்கக் கூடாது... அந்த நோட்டீஸில முக்கியமா உங்களத்தான் குத்திக் காட்டியிருக் காங்க.

ரகீம் ஹாஜி- நல்ல நிய்யத்தோட ஊருக்குக் கொடுக் கிறத வேணான்னுறாங்க.

ராஸியா - அவங்களுக்கு சம்பாதிக்கவும் தெரியல்ல... பாத்திட்டிருக்கவும் பொறுக்கல்ல.

சாகிர் - (கோபம்) எல்லம் இந்த நியாஸ் செய்ற வேலதான் அவனுக்கு பெரிய படிப்பாளி யென்ட நெனப்பு.. ம்

ராஸியா - (சிரிப்பு) பெரிய பெரிய ஆலிம் உலமாக்களே சரிகண்டதில இவங்கதான் பிழைபிடிக்கி றாங்க (சிரிப்பு)

சாகிர் - (கடுமையா) பயப்படாமச் சொல்லுங்க ஹாஜியார்... என்னக்கும் நாங்க உங்க பின்னால இருப்பம்... நீங்க மட்டும் ஒரு வார்த்த சொன்னீங்கென்னா.

ராஸியா - ஆமா ஆமா நல்ல பாடம் படிப்பித்தாத்தான் வாய மூடுவாங்க

சாகிர் - சொல்லுங்க எலும்பெலும்பா முறிச்சிப் போடவா... இல்ல ஊரவிட்டே விரட்டி யடிக்கவா.

ரகீம் ஹாஜி- பொறுமயா இருங்க... நான் ஒன்னும் இவங்களுக்கு பயப்படுறவனில்ல. எதுக்கும் ஒரு எச்சரிக்கயோட

சாகிர் - அப்படியா... சரி வாங்க போவம் (கலகலப்பு)

## - முன்நினைவு - இன்னொரு காட்சி-

சாகிர் - (சத்தமாக) எங்கடா நோட்டீஸ்காரங்க... டேய் வெளிய வாங்கடா (கலகலப்பு)

மரியம் - (உள்ளேயிருந்து பதறியபடி) அந்தா பாரப்பா ஒரு கூட்டமே வந்திருக்கு... என்ன அநியா யமிது... வீட்டுக்குள்ள வந்து புகுந்துக் கிட்டா... அல்லாவே.

சாகிர் - டேய் நியாஸ்... நோட்டீஸுக்கு பதில் சொல்ல வந்திருக்கோம். வா வெளிய (கலகலப்பு)

மரியம் - (பதறி) கைல பொல்லுகில்லெல்லாம் வெச்சிருக்காங்க போல தெரியிது.

நியாஸ் - விடுங்க விடுங்க... ஒரு முறதான் உயிர் போறது என்ன விடுங்க.

மரியம் - போகாதே.. நியாஸ் போகாதே...

நியாஸ் - ம்.. என்ன கோழயா நெனச்சிருவாங்க... விடுங்க.. நான் அடிதடிக்கிப் போக மாட் டன்.:. சொல்லவேண்டியத சொல்லிட்டு வந்திடுறன்.

மரியம் - நீ அடிதடிக்கிப் போகாட்டியும் அவங்க அடிதடிக்குத்தான் வந்திருக்காங்க.

நியாஸ் - இவங்க வாயக்காட்டி என்ன அடக்கப் பாக்கிறாங்க.

மரியம் - போகாத... நீ போறென்னா அதுக்கு முதல்ல என்னக் கொன்றிட்டுப்போ... ஆமா சொல்லிட்டன்.

சாகிர் - (சத்தமாக) நோட்டீஸ்காரன் பதுங்கிட் டானா... இல்ல பின்னால ஓடிட்டானா...

நியாஸ் - (பொங்கி) எவ்வளவு கீழ்த்தரமா பேசு றாங்க. இதெல்லாம் என்னால பொறுத்துக்க முடியாது.. நீங்கென்ன கோழயாக்காதீங் கும்மா... நான் படுற ஒவ்வொரு அடியும் அல்லாவுக்காகப் படுற அடிதான்.

மரியம் - ஐயோ வேலியத் தள்ளிக்கிட்டுப் புகுந்திட் டாங்க ஐயோ குடிகாரன் சூதுகாரங்கெல் லாம் வந்திருக்காங்க.

நியாஸ் - நியாயத்துக்காக குடிகாரனும் சூதுகார னும் வரமாட்டங்கம்மா.

சாகிர் - (நெருக்கமாக) வெளிய வரமாட்டான் போலிருக்கு. (அட்டகாசச் சிரிப்பு) ஒரு நெருப்புக் குச்சு போதும்.

மரியம் - (கத்தலாக) என்ன என்னடாப்பா வீட்டுக்கு ள்ள பொம்புள தனியா இருக்கிற நேரத்தில என்ன பண்றீங்க? ம்... அடிதடிக்கு வளர்த்த பிள்ளைங்க இங்க இல்ல... பேசுறதுக்கு ஏதாவது இருந்தா மரியாதயா உள்ள வந்து கதைங்க.

சாகிர் - அப்பிடியா... பொம்பிளயோட நமக்கென்ன பேச்சு... வாங்க போவம் (கலகலப்பு)

நியாஸ் - போயிட்டாங்கில்ல. பாழ்வீட்டில சட்டி பான உடைக்கத்தான் இவங்க லாயக்கு.

## - முன்நினைவு - இன்னொரு காட்சி -

ராஸியா - (சிரிப்பு) ஆழம் தெரியாம கால விட்டிட் டாங்கில்ல.

ரகீம் ஹாஜி- இப்பிடி இதுக்கு முன்னாலயும் எங்க ளோட எத்தின பேர் முட்டிப்பார்த்தாங்க... கருங் கல்லோட மோதினா...

ராஸியா - தலைதான் உடயும்.

ரகீம் ஹாஜி- சரியாச் சொன்னீங்க.

ராஸியா - வீட்டுக்கே போய் சத்தம் போட்டாங் களாமே... வெளிய எட்டிக்கூடப் பாக்கல்ல யாம்

ரகீம் ஹாஜி- இவங்க போன போக்கில எட்டிப் பாத்தி ருந்தா தூள்தான் பறந்திருக்கும்.

ராஸியா - நடுச்சந்தியில கூட பேச்சுக்கிழுத்து அவமா னப்படுத்திட்டாங்களாமே.

ரகீம் ஹாஜி- என்னத்துக்கு இந்த விஷயத்தில தலயிட்டோமென்னு இப்பதான் யோசிக்கி றாங்கபோல.

ராஸியா - அவங்க கூட்டம் நடத்திறப்போ கல்லடித் தாங்களாமே உண்மயா?

ரகீம் ஹாஜி - கேள்விப்பட்டன்... எல்லாம் அவங்களாக நெனச்சி செய்றதுதான்.

ராஸியா - இப்ப என்னென்னா சங்கத்திலிருந்து ஒவ்வொருத்தரா விலகுறாங்களாம்.

ரகீம் ஹாஜி- விலகாமலிருப்பாங்களான்னு கேக்கிறன்... வாலிப மிடுக்கில அறியாமத் தெரியாமப் போய் சேர்ந்திருப்பாங்க... விசயத்த புரிஞ்சிக் கிட்டாங்க... விலகிட்டாங்க.

ராஸியா - அந்த நியாஸும் நாலஞ்சிபேருந்தான் இப்ப கட்டிப்புடிச்சிக் கிட்டிருக்காங்க போலி ருக்கு.

ரகீம் ஹாஜி- ஷிராஸ் ஹாஜி இருக்காரில்ல... அவர் பொல்லாத ஆள். அவர் வாப்பமாரு... நானாமாரு... மாமாமாரப் புடிச்சி எப்பிடியோ கதையக் குடுத்திட்டார்.

ராஸியா - அதுசரி நான் தெரியாமத்தான் கேக்கிறன் வசதிவாய்ப்புள்ளவங்க கொடுக்கி றாங்க... விருப்பமானவங்க வந்து எடுக்கிறாங்க.

ரகீம் ஹாஜி- அவங்கென்ன சொல்றாங்கென்னா... எல் லாருக்கும் கொஞ்சமா கொடுக்கிறதவிட கொஞ்சப் பேருக்கு போதுமா கொடுக்கச் சொல்றாங்க.

ராஸியா - நாலு பேருக்குக் கொடுக்கிறதவிட நாப்பது பேருக்குக் கொடுத்தா... அவங்க அத்தன பேரும் கேக்கிற துஆ...

ரகீம் ஹாஜி- (மெல்ல) நாம எங்களுக்குள்ள கதச்சிக் கொள்ளுவம்... அவங்க சொல்றதிலயும் நியாயம் இருக்குதானே...

ராஸியா - (வியந்து) என்ன சொல்றீங்க...

ரகீம் ஹாஜி– ஆமா செய்துவந்தத விட்டுக்க முடியல லியே... அதுதான் எங்கட பிரச்சின... நாம இப்ப கொடுக்கிற முறயில தேவயுள்ளவனும் வருவான்... தேவ இல்லாதவனும் வரு வான்... குடிகாரனும் வருவான்.

ராஸியா – (தனக்குள்) அந்த நோட்டீஸ் இந்த மனிசன்ற மனதையும் தாக்கத்தான் செய்திருக்கு... என்ன இருந்தாலும் வருஷத்துக்கு ஒருநாள் ஊர் மக்களெல் லாம் இந்த முத்தத்தில கூடி வரிசயா வந்து எங்க கையால கொடுக்கிறத... மரியாதயா பெற்றுக்கிற காட்சிய நினைக்கிறப்போ பூரிப்பா இருக்கு... இந்த நில மாறக்கூடாது... மாறவே கூடாது. மாற இடம் கொடுக்கவே கூடாது.

ரகீம் ஹாஜி– என்ன ராஸியா கடுமயா யோசிக்கி நீங்க.

ராஸியா – ஒன்னுமில்ல... உங்க உம்மா வாப்பா செய்து வந்தது. இடைநடுவில விடுறதொன்னும் எனக்கென்னா நல்லாப் படல்ல.

ரகீம் ஹாஜி– அப்பிடி அவசரமா நான் எந்த முடிவுக்கும் வரல்லியே... இப்போதைக்கு இதே போக் கில்தான் போகணும்.

## (நினைவுக்காட்சி நிறைவு)

சாகிர் – (அழுதபடி) நியாஸ் என்ன மன்னிச்சிரப்பா... எவ்வளவு பெரிய அவமானத்த ஏற்படுத் திட்டன்... நான்தான் தலம தாங்கினன்... நீங்க என்ன மன்னித்தாத்தான் அல்லா என்ன மன்னிப்பான் நியாஸ்.

நியாஸ் - அழாதீங்க சாகிர் நானா அழாதீங்க... அறியாமப் புரியாமத்தானே அத்தன விஷயத்திலயும் ஈடுபட்டீங்கென்னு எங்களுக்கு அன்னக்கே தெரியும். நாங்க யாரயும் புண் படுத்திறதுக்காகவோ... தனிப்பட்ட லாபத்துக்காகவோ எதையும் செய்யல்லியே...

சாகிர் - உண்மதான்... நீங்க அன்னக்கி எதச் சொன்னீங்களோ இன்னக்கி அதுதான் நடந்துக்கிட்டிருக்கு. ஆலிம் உலமாக்கள் கூட வாய்மூடி இருந்தப்போ நீங்க துணிந்து சொன்னீங்கில்ல... அல்லா இடத்தில உங்களுக்கெல்லாம் நிச்சயமா உயர்ந்த இடமிருக்கு நியாஸ்.

மரியம் - (வந்தபடி) என்ன ரொம்ப நேரமா ரெண்டு பேரும் கதையில மூழ்கிப் போயிட்டீங்க.

சாகிர் - இருபது வருஷக் கதையில்லயா...

மரியம் - தம்பிலித்தண்ணி இருக்கு கதச்சிக் கதச்சிக் குடீங்க.

நியாஸ் - இங்க பாருங்க... சில ஊர்களில ஸக்காத் பணத்தால திட்டமிட்டு வேல செய்றாங்க.

சாகிர் - என்ன சொல்றீங்க வீட்டுத்திட்டம்கூட அமச்சிருக்காங்களாம்.

நியாஸ் - கூட்டுப்பண்ண... தொழிற்சால... கல்வி வசதி இப்பிடியெல்லாம் வேல செய்றாங்க.

சாகிர் - உங்க நோட்டீஸ்ல சொன்னதுபோல

அன்னக்கே ஆரம்பிச்சிருந்தா நம்ம கிரா மங்கள் இன்னக்கி எவ்வளவோ முன்னேறி யிருக்கும் பாருங்கொ.

நியாஸ் - அல்ஹம்துலில்லா இன்னக்காவது இந்த மாற்றம் வந்ததுக்காக அல்லாவுக்கு சுக்கூர் செய்யணும்.

சாகிர் - ம்... தொழுகைக்கு நேரமாகுதில்ல.

நியாஸ் - (மெல்ல) கேக்க மறந்திட்டன்... பிள்ளைங்கெல்லாம் சுகமா இருக்காங் களா...?

சாகிர் - அல்லாட கிருபயால.

நியாஸ் - யாவாரங்களெல்லாம் எப்பிடி?

சாகிர் - இப்ப ரெண்டு கிழமயா... ரெடிமேட் ஸூட் யாவாரம்.

நியாஸ் - ரொம்ப நல்ல சீஸன்.

சாகிர் - அல்லாவென்னு திருப்தியான யாவாரம்.

நியாஸ் - எப்பிடியாவது நல்லா இருந்தாச் சரி... நானும் புள்ள குட்டிக்காரனாகிட்டன். அதுக்காக ஒதுங்க முடியுமா? நாம எந்த நிலையிலிருந்தாலும் நம்மால முடிந்தது சமூகத்துக்கு செய்யணும்.

சாகிர் - கையத் தாங்க (கம்மிய குரலில்) ஸலாம் சொல்லுவோம். மனப்பூர்வமா என்ன மன்னிச்சிட்டீங்கில்ல.

நியாஸ் - திருப்பவும் சின்னப் பிள்ளயாகிட்டீங்களே.

சாகிர் - இன்னும் ஒரேயொரு விஷயம் சொல்லணும்.

நியாஸ் - (வியப்போடு) அதென்ன...

சாகிர் - இந்தமுற ரஹீம் ஹாஜியார் பத்துப் பேருக்கு தொழில் செய்ய பணம் கொடுத்தாரில்ல.. அதில எனக்கும் இருபத்தையாயிரம் கிடச்சிது.

நியாஸ் - அல்ஹம்துலில்லாஹ்

# நண்பர்கள்

## காட்சி — 1

பாத்திரங்கள் : அஸ்லம், நிரோஷா, ஸில்மியா, ரிஸ்வி
இடம் : விருந்து மண்டபம்.

(மெல்லிய துள்ளிசை- உயர்தர விருந்து வைபவம்)

அஸ்லம் - என்னங்க எல்லாம் ரெடிபண்ணிட்டீங்களா... நண்பர்களெல்லாம் வந்த பிறகு கல்யாண கந்தூரி வீடு போல அது இதென்னு சொல்லிக்கிட்டிருக்கேலாது. இங்க நிரோஷா

நிரோஷா - என்ன என்ன இப்பிடி பதற்றப்படுறீங்க. ஏற்பாடுகளெல்லாம் ஒழுங்கா நடந்துக்கிட்டிருக்கு.

அஸ்லம் - ம்... வட்டிலப்பமெல்லாம்..

நிரோஷா - எல்லாம் ஏவன். என்ற நேரடிக் கண்கா

ணிப்பில தான் விஷயம் நடக்கிது... உங்க மரியாதைய காப்பாத்திற பொறுப்பு என்கிட்ட இருக்கு. நீங்க வர்ரவங்கள வரவேற்க ரெடியா இருங்க.

அஸ்லம் - அப்ப நான் மாத்திரமா வரவேற்கிறது... என்ற நண்பர்கள் மட்டுமில்ல அவங்க மனைவி மாரும் வருவாங்கில்லயா.

நிரோஷா - என்னயும் வரச்சொல்றீங்க அப்பிடித்தானே.

அஸ்லம் - வேறென்ன (இருவரும் சிரித்தல் துள் ளிசை.. கார்கள் வரல்.. கலகலப்பு)

அஸ்லம் - (சந்தோஷத்தோடு) ஆ.. வாங்க வாங்க... ஹலோ ரிஸ்வி வாங்க... நிஸாம்... ரஜாப் எல்லோரும் வாங்க

நிரோஷா - இங்க ஸில்மியா ... ஸிமாயா எல்லாரும் வாங்க (சிரிப்பு) இருங்க இருங்க... ஆ ஃபரீனா (பரபரப்பு ஓய்தல்)

அஸ்லம் - இனியென்ன நல்லா வைத்துச் சாப்பிடுங்க... அப்புறம் வீட்ட போயா சாப்பிடப் போறீங்க...

ரிஸ்வி - வேறென்ன... இதெல்லாம் பார்த்திட்டுப் போகவா வந்தம்... ஒரு கை பார்க்கத்தான் போறம்.

நிரோஷா - நீங்க மாத்திரம் பார்த்தாப் போதாது ஸில்மி யாவயும் கவனித்துக்கொள்ளுங்க.

ஸில்மியா - நீங்க கவனிக்கிற போதாக் குறைக்கு அவர யும் வேற இழுக்கிறீங்க... அப்புறம் இங்கி ருந்து எழும்ப முடியாமல் போயிரும் (சிரிப்பு... துள்ளிசை பரபரப்பு குறைதல்... கார்கள் செல்லல்)

நிரோஷா - (பெருமூச்சு) அப்பாடா அவர்ர மனம் போல எல்லாம் திருப்தியா முடிந்திருச்சி.

ஸில்மியா - அவருக்குப் பொருத்தமா நீங்களும் வாய்த்திருக்கிறீங்க... ம்... இனிக் கேட்கவா வேணும்.

நிரோஷா - ம்... ஒரு கணவன்ற விருப்பங்கள புரிந்து கொண்டு அதுக்கேற்றாப்போல நடந்து கொள்றது மனைவியின் கடமயில்லயா.

ஸில்மியா - ஆமா நிரோஷா.. உங்க மிஸ்டருக்கு நண்பர்களென்னா உயிர்தான். அதிலயும் நம்ம ஆள் வலதுகைதானே.

நிரோஷா - உண்மதான் ஸில்மியா... இல்லாட்டா இவ்வளவு பேரும் வந்துபோன பிறகு அவர மாத்திரம் நிறுத்தி கதைத்துக் கொண்டிருப்பாரா... ம்..

அஸ்லம் - நிரோஷா... நிரோஷா... (அழைத்தல்)

நிரோஷா - என்ன...

அஸ்லம் - இந்தாங்க திறப்பு... ஒரு பத்தாயிரம் ரூபா எடுத்திட்டு வாங்க

நிரோஷா - இதோ வந்திடுறன் (தனக்குள்) பத்தா யிரம் ரூபா... ம். இவர உயர்த்தி நாலு வார்த்த யாரும் கதைச்சிட்டாங்கென்னா இப்படியா இழுத்துக் கொடுக்கணும். ம்... நண்பர்களெல்லாம் இவர உறிஞ்சிப் பிழைக்கிறவங்க போலத்தான் தெரியுது (வந்தபடி) ஆ... இந்தாங்க.

அஸ்லம் - இந்தாங்க இது சின்னத்தொகைதான்... உங்க முயற்சிய கைவிடாதீங்க.

ரிஸ்வி - ரொம்ப நன்றி.

ஸில்மியா - வாரம் நிரோஷா.. டாடா (நேர இடை வெளி)

அஸ்லம் - என்ன முகத்த ம்மென்னு வெச்சிட்டிருக் கீங்க?

நிரோஷா - நேற்று ரெண்டு பேருக்கு கொடுத்தீங்க.. இன்னக்கி இப்பிடி.. உங்களுக்கு தங்க மனசு... உங்க நண்பர்களெல்லாம்..

அஸ்லம் - நம்பிக்கையானவங்க... நல்ல நிலைக்கு வந்திட்டாங்கென்னா.. ஒன்னுக்கு பத்தா நம்ம கவனிப்பாங்க.

நிரோஷா - சிலவேள தங்களயே மறந்துபோனாலும் போவாங்க.. உங்களுக்கு ஜெம் பிஸ்னஸ்ல அடிக்கடி சான்ஸ் படுறதால இப்பிடியெல் லாம் செய்றீங்க... நல்ல காரியம்தான்... ஆற்றில் போட்டாலும் அளந்து போடணு மென்னு சொல்வாங்க.

## காட்சி — 2

பாத்திரங்கள் : நிரோஷா, அஸ்லம்
இடம் : வீடு.

(வெளியே கார்வந்து நிற்றல்)

நிரோஷா - (தனக்குள்) ம்.. இப்ப பத்துமணி... இன்னக்கி ஏன் இவ்வளவு லேட் (முன்னே வரல்) ஆ.. வாங்க வாங்க இப்பதான் வாரீங்களா?

அஸ்லம் - (வித்தியாசமான குரல் – மதுபோதை) ம்.. நான் எப்பவும் வருவன். வர்ரநேரம் வரவேற்க வேண்டியதுதானே.

நிரோஷா - வேறென்ன... நான் அப்பிடியொன்னும் தவறாகக் கேக்கல்லியே.. சரிசரி வொஷ் எடுத்திட்டு வாங்க. நான் சாப்பாட்ட ரெடி பண்றன் (தனக்குள்) ம்... ஃபிரண்ட்ஸ் என்னா இவருக்கு வேறெதுவுமே ஓடாது.. ஆனா அவங்க நட்பெல்லாம் பணத்தின் மேல போலத்தான் தெரியிது. ஏதாவது கேட்டா.. கோபம் வேற வருது... அதுக்காக கேக்காமலும் இருக்க முடியாதே.. ம்..

அஸ்லம் - ஆ... இன்னக்கி என்ன ஸ்பெஷல்?

நிரோஷா - (தயக்கத்தோடு) இன்னக்கி வழமபோல தான். நீங்க நேரத்துக்கு வந்திருந்தா ஏதாவது ஏற்பாடு செய்திருக்கலாம்.

அஸ்லம் - (கோபத்தோடு) சாப்பிடவே மனமில்லாம லிருக்கு. வீட்டுக்கு வந்தா இப்பிடித்தான்... பகல் நண்பர்களோட என்ன மாதிரி புரியாணி சாப்பிட்டன்... ம். இங்க..

நிரோஷா - ம்.. இங்க அப்பிடியெல்லாம் ஏற்பாடு பண்ண யாரிருக்காங்க.

அஸ்லம் - மனமிருந்தா வழியா இல்லாமப்போகும்.. எடுத்ததுக்கெல்லாம் என்ற ஃபிரன்ஸ பத்தி ஒரு கத சொல்லாட்டா தூக்கமே வராதே.

நிரோஷா - (கவலையோடு) ஓ... உங்களுக்கு என்ன விட நண்பர்கள்தானே பெரிசு.. நான் சொல்றத தூசுக்கும் மதிக்க மாட்டீங்க.

அஸ்லம் - மதிக்கக்கூடியதா உங்க பேச்சு இருக்க ணுமே..

நிரோஷா - கடைசியில எங்ககொண்டுபோய் விடுவாங் களோ தெரியல்ல.. எல்லாம் கையில மடியில இருக்கும் வரையிலதான்.

அஸ்லம் - (கோபமாக) இங்க அளவுக்கதிகமா கதைக்காதீங்க. நீங்க நினைக்கிறது போல ஆக்களல்ல என்ற நண்பர்கள்.. எல்லாம் பெரிய குடும்பத்தாக்கள்.

நிரோஷா - சொல்லுவீங்க.. இதுக்கு மேலயும் சொல்லுவீங்க. நான் என்ன சொல்றேன்னு உங்களுக்கு..

அஸ்லம் - அப்டீன்னா எனக்கு சுயநினைவு இல் லேன்னு

நிரோஷா - அப்பிடித்தான் சொல்ல வேண்டியிருக்கு.

அஸ்லம் - நிரோஷா கட்டுக்கடங்காமப் பேசுறீங்க. என்ற ஆத்திரத்த கிளப்பிக்கொள்ளாதீங்க.

நிரோஷா - (இதமாக) இங்க பாருங்க... உங்களுக்கு நான் சொல்லாட்டா யார்தான் சொல்ல இருக்காங்க

அஸ்லம் - அப்பிடியா சரிசரி சொல்லுங்க.

நிரோஷா - உங்க நண்பர்களெல்லாம் வசதியானவங்க அப்படி இப்டீன்னெல்லாம் சொல்றீங்க... அப்படீன்னா அவங்க ஏன் ஆயிரமாயிரமா உங்கள பிடுங்கிறாங்க. நீங்களும் ஒன்னுமே யோசிக்காம..

அஸ்லம் - நிரோஷா இதெல்லாம் உங்களுக்கு எங்க விளங்கப்போகுது... நம்ம ஜெம் பிஸ்னஸப்

பொறுத்தவரையில இப்பிடி தாராள மனசோட நடந்து கொண்டாத்தான் அதில வெற்றியிருக்கு... ம்... எங்க போனாலும் நமக்கு நண்பர்களுக்கு பஞ்சமில்ல... ம்... பணத்த மாத்திரம் சம்பாதித்தா கானுமா?

நிரோஷா - கானாது... பணத்த சம்பாதித்து பாதுகாக்கவும் தெரியணும்.

அஸ்லம் - எனக்குச் சொல்லித்தர வாரியா...

நிரோஷா - சொல்லித்தராமலிருந்தா நானும்கூட குற்றவாளியில்லயா?... ம்... நல்ல குடும்பத்த சேர்ந்தவங்கதான் நண்பர்களென்னு சொல்றீங்க.

அஸ்லம் - ஆமா அப்பிடித்தானே.

நிரோஷா - சும்மாதான் கேக்கிறன்.. நல்ல குடுப்பத்த சேர்ந்தவங்க கூத்தும் கும்மாளமுமாகவா திரியிறாங்க.

அஸ்லம் - (கொதித்து) நிறுத்துங்க.. உங்க அதிகப் பிரசங்கித்தனத்த... நான் சம்பாதிக்கிறன்... நான் செலவு செய்றன். உங்க வாப்பா கொண்டுவந்து கொட்டினதில்ல. இனிமேல இப்பிடியெல்லாம் அளவுக்கதிகமா கதைக்கத் தொடங்கினா என்ன நடக்குமென்னு இப்ப நான் சொல்ல மாட்டன்... அப்ப பாத்துக்கலாம்.

நிரோஷா - (மெல்லிய விசும்பல்) மன்னிச்சிருங்க... கணவன் எங்கிற உணர்விலதான் இவ்வளவும் சொன்னன். அதுக்குக்கூட உரிமை இல்லேன்னா அமைதியாகவே இருந்திடுறன்.

## காட்சி — 3

பாத்திரங்கள் : நிரோஷா, அஸ்லம்
இடம் : வீடு

(டக்...டக்.. கதவில் தட்டும் சத்தம்)

நிரோஷா - ஆ வாங்க வாங்க... என்ன இன்னக்கி கால்நடையா வாரீங்க... இடையில காருக்கு என்ன நடந்திச்சி...

அஸ்லம் - அப்பிடி ஒன்னுமில்ல... கார நான் வித்துப் போட்டன்.

நிரோஷா - (அதிர்ந்து) என்ன சொன்னீங்க?

அஸ்லம் - கார வித்துப் போட்டதாகச் சொன்னன்... இந்த நிலையில விற்காம என்னதான் செய்ய முடியும்!

நிரோஷா - நானும்தான் பாத்துக்கொண்டுவாரன்... கொஞ்சநாளா உங்க போக்கு ரொம் பவும் மாறிக்கிட்டிருக்கு. கேட்கத்தான் நாக்கு துடிக்கிது... ஆனா அந்த உரிமையைத்தான் நீங்க எப்போதோ பறிச்சிட்டீங்களே.

அஸ்லம் - (இரக்கமாக) அப்படியெல்லாம் சொல்லாதீங்க நிரோஷா... முன்பின் யோசிக்காம நடந்துக்கிட்டதாலதான் இன்னக்கி இந்த நிலம...

நிரோஷா - அப்டீன்னா காரயும் விற்கக்கூடிய அளவுக்கு...

அஸ்லம் - கடன்காரரின்ற தொல்லதான்.

நிரோஷா - உங்களுக்குமா கடன்காரர்.

அஸ்லம் - இல்லயா... வெளிநாட்டுக்காரர் நம்ம ஏமாத் திட்டாங்க நிரோஷா.

நிரோஷா - கொஞ்சம் விளக்கமாத்தான் சொல்லுங்க ளன்.

அஸ்லம் - ரெண்டு மூனு வருஷமா பிஸ்னஸ் தொடர்பு... கல்லு எடுத்திட்டுப் போய் லட்சக்கணக்கில கொண்டு வந்து தந்தி ருக்கான். இந்த நம்பிக்கையில...

நிரோஷா - கொடுத்திருப்பீங்க திரும்பிவரயில்ல... அப்படித்தானே.

அஸ்லம் - ஆமா இப்ப ஆறு மாதமாப்போயிற்று... இனி இந்தப்பக்கமே வரமாட்டான் போலிருக்கு... பல பேர ஏமாத்திப் போட்டான்... எனக்கு மட்டும் பத்து லட்சத்துக்கு மேல...

நிரோஷா - யா அல்லா

அஸ்லம் - என்ன நம்பித் தந்தவங்கெல்லாம் கல்லுக் கேக்கிறாங்க. அல்லது காசு கேக்கிறாங்க... ம்... நான் என்னத்தக் கொடுப்பன்.

நிரோஷா - அப்புறம் அதுக்காகத்தானா கார வித்தீங்க?

அஸ்லம் - வேற ஒரு வழியும் இல்லயே நிரோஷா.

நிரோஷா - ஏன் உங்களுக்குத்தான் பெரிய இடத்து நண்பர்கள்...

அஸ்லம் - அத ஏன் சொல்றீங்க... நம்ம நிலம தெரியத் தெரிய அவங்களும் என்ன விட்டு தூரமா யிட்டாங்க.

நிரோஷா - பாத்தீங்களா... இதத்தானே அன்னக்கே

சொன்னன் (டெலி.ஃ.போன் மணி)

அஸ்லம் - கடன்காரரோ தெரியல்ல... நீங்களே பதில் சொல்லுங்க.

நிரோஷா - ஹலோ... ஆ.. ரி.ஃ.பாய் ஹாஜியா... ம்.. வெளிய போயிருக்கார்... கார் வித்ததா கேள்விப்பட்டீங்களா... பத்தாயிரமா... வந்ததும் சொல்றன்.. சரிசரி.. (பெரு மூச்சு)

அஸ்லம் - கார வித்தும் கடனத் தீர்க்க முடியல்ல... இன்னும் ஐம்பதினாயிரமாவது...

நிரோஷா - எல்லாம் அல்லாட சோதினதான். செல்வத்த... வறுமைய... நோய் நொடிகள மாறி மாறித் தருவான். அதுக்காக நாம ஈமானப் பறிகொடுக்கக் கூடாது. ம்... எதுக்கும் எனக்கொரு யோசின.

அஸ்லம் - அப்பிடியா சொல்லுங்க...

நிரோஷா - உங்களோட நெருக்கமாப் பழகிய...

அஸ்லம் - நண்பர்கள் எல்லாரிட்டயும் கேட்டிட்டன். கேட்காமலேயே உதவிசெய்யவேண்டிய ரிஸ்வி... முஸ்தகீம்... நௌ.ஃ.பான்...

நிரோஷா - இங்க ஒன்னு சொல்றன் என்ற நகைகள...

அஸ்லம் - நான்தான் வெறுங்கையோட இருக்கிறன்... உங்க காது கழுத்தயுமா வெறுமையாக்கச் சொல்றீங்க... ரெண்டு குழந்தைகளுக்கு தகப்பனான பிறகு எனக்கிந்த நில... என்னால பொறுக்க முடியல்ல நிரோஷா. (விகாரமாக) ஐயோ என்தல சுற்றுது... தலசுற்றுது... தலசுற்றுது... ஐயோ.

நிரோஷா - யாஅல்லா... இதென்ன அநியாயம்.

## காட்சி — 4

பாத்திரங்கள் : அஸ்லம், நிரோஷா, ஸில்மியா, ரிஸ்வி
இடம் : வீடு

(இரவின் ஒலிக்குறிப்புகள்)

அஸ்லம் - (மனப் பிராந்தியுற்ற நிலை - எதிரொலியாக) ஆ... ஐம்பதினாயிரம்... ஐம்பதினாயிரம்... கடன்... கடன்...

நிரோஷா - என்ன இது இந்த நடு இரவில் பேசாமத் தூங்குங்க.

அஸ்லம் - ம்... இரவாகிட்டுதா...

நிரோஷா - ஆமா நள்ளிரவு. எதயும் யோசிக்காம தூங்குங்க. (இரவின் ஒலிக்குறிப்புகள்)

அஸ்லம் - (எதிரொலி) மா... மாணிக்கம்... மாணிக்கம்.. பத்துலட்சம்... இனி இனி வரமாட்டான்.. எல்லாமே போயிட்டுது...

நிரோஷா - இங்க... இங்க பாருங்க.. தூங்கமாட்டீங்களா... போனதெல்லாம் போகட்டும்.. இந்தாங்க இந்த கெப்ஸ்யூல விழுங்குங்க.. ம்... தண்ணி..

அஸ்லம் - (அசதியோடு) ஆ.. என்ன சொன்னன்...

நிரோஷா - ஆ.. ஆ.. தண்ணியக் குடீங்க (இரவின் ஒலிக் குறிப்பு) (தனக்குள்) அல்லா ரஸூலுக்கு பொருத்தமில்லாம நடந்திட்டு.. குடியும் கூத்துமா திரிஞ்சிட்டு இன்னக்கி நிம்மதியில்லாத மனிசனா மாறிட்டார்...

திரும்பிப் பார்க்க ஒரு நாய்கூடஇல்ல (இரவுக்குறி)

அஸ்லம் - (எதிரொலிகளாக) ரிஸ்வி ரிஸ்வி இன்னக்கி நீ பெரீய மொதலாளியப்பா... அன்னக்கி... ம்... நௌ.ஃபான்... முஸ்தகீம் உங்களயெல் லாம் காண ஆசயா இருக்கடா

நிரோஷா - ஐயோ ஒரு கண்ணுக்குத் தூங்க மாட்டீங்களே... அடுத்தூட்டு ஐசும்ம தாத்தா சொன்னாப் போல அத்து ராஸிக் லெப்பயக் கூப்பிட்டு ஓதிப்பாக்கணும் (பெருமூச்சு) நாலு மணியாகிட்டுது... பாங்கு சொல்ல இன்னும் கொஞ்ச நேரந்தான்.

## காட்சி — 5

பாத்திரங்கள் : ஸில்மியா, நிரோஷா, ரிஸ்வி
இடம் : வீடு

ஸில்மியா - (வியந்து) நிரோஷா இதென்ன தீடீரென்னு இந்தப்பக்கம்.

நிரோஷா - நீங்க வரமாட்டீங்க... நாங்களாவது வரத்தானே வேணும்.

ஸில்மியா - கல்யாணம் கட்டிய புதிதில புதுப்பெண்ணாக வந்தீங்க... இன்னக்கி ரெண்டாவது முற...

நிரோஷா - அதுக்கிடையில எவ்வளவு மாற்றம் பாருங்க.

ஸில்மியா - ஆமா.. நம்ம ரீனாட வாப்பா டவுன்ல கடதிறந்து ஆறுமாதம்... அதுக்குப் பிறகு

தான் இந்த மாற்றமெல்லாம்.

நிரோஷா - ரொம்ப அழகாயிருக்கு.. ம்... ரீவியெல்லாம் எடுத்திட்டீங்க.

ஸில்மியா - கலர் டீவியும் டெக்கும் எடுத்து இன்னும் ரெண்டு கிழமகூட ஆகல்ல.

நிரோஷா - எல்லாமா நாலு ரூம் இருக்கென்ன.

ஸில்மியா - ஆமா... எடச் பாத்ரூமும் கட்டியிருக்கோம்.

நிரோஷா - சந்தோஷமா இருக்கு.. நல்லா இருந்தா ஒத்தருக்கொருத்தர் உதவிதானே.

ஸில்மியா - நிச்சயமா... அதுசரி நானும் சொல்லிக் கொண்டே இருக்கிறன்... ம்.. வந்த விஷயத்த கேக்க மறந்திட்டன் பாருங்க.

நிரோஷா - ஒன்னுமில்ல ஸில்மியா கொஞ்ச நாளா உங்கட மிஸ்டர அந்தப் பக்கம் காணயில்ல...

ஸில்மியா - அதுதானே பாருங்க... மூச்சுவிட நேரமில்ல... ஜெம் பிஸ்னஸ செய்றப்போ தாராளமா நேரமிருந்தது இப்ப...

நிரோஷா - (கவலையோடு) ஒருக்கா அந்தப் பக்கம் வரச்சொன்னீங்கென்னா நல்லது மிஸ்டருக்கு கொஞ்சம் சுகமில்ல... நண்பர்கள் வந்துபோனா ஒரு ஆறுதல் தானே...

ஸில்மியா - (கார் வரும் சத்தம்) அங்க அவர்தான்... நீங்களே சொன்னீங்கென்னா...

ரிஸ்வி - (கம்பீரமாக) ம்... யாரிது... என்ன விஷயம்?

நிரோஷா - நான் வந்து (சிரித்து) மறந்திட்டீங்களா... நான் மிஸிஸ் அஸ்லம்.

ரிஸ்வி - சரிசரி வந்த விஷயம் என்னென்னு சொல்லுங்களன்.

ஸில்மியா - வந்து அவங்க மிஸ்டர் அஸ்லம் சுகமில்லாம இருக்காராம்.. நாளக்கி ஒருக்கா...

ரிஸ்வி - நாளக்கித்தான் எனக்கு சிங்கப்பூரிக்கு ∴பிளய்ட். பிஸ்னஸ் விஷயமாப் போறன்... எல்லாம் வந்ததுக்கப்புறம்தான்.

நிரோஷா - (கோபத்தோடு) அ... என்ன மன்னிச்சி ருங்கொ ஸில்மியா. (திரும்பி) நான் வாரன் (தனக்குள்) கடைவைத்து... வீட்டப் புதுப் பித்து... இதுக்கெல்லாம் யார் காரணம்... செ... இந்த மனிச ஜென்மங்களே இப்பிடித்தான். அன்னக்கி தேனில மொய்த்த ஈக்களாக இருந்த நண்பர்க ளெல்லாம் இன்னக்கி...

## காட்சி — 6

பாத்திரங்கள் : நிரோஷா, ஸல்மான், அஸ்லம்,
இடம் : வீடு.

நிரோஷா - ஆ வாங்க வாங்க... ஸவூதியிலிருந்து எப்ப வந்தீங்க... உருவமெல்லாம் மாறிப் போயிருக்கே...

ஸல்மான் - ஒரு கிழமதான்... ரிடன் டிக்கட்டோடதான் வந்தன்.

நிரோஷா - நல்லதாப் போச்சு. முடிந்த காலத்தில கொஞ்சம் சமபாதித்துக்கொண்டா அப்புறம் திட்டமிட்டு ஏதாவது செய்யலாம்.

ஸல்மான் - ஆமா... எங்க அஸ்லம் நானா... ஏதோ சுகமில்லேன்னு கேள்விப்பட்டன். நாம அந்த நாளயில ஒன்னாப் படித்த ஆக்கள்.

நிரோஷா - அப்பிடியா வாங்க உள்ளதான் இருக்கார்.. இங்க உங்களப் பாக்க ஸல்மான் வந்திருக்கார்.

அஸ்லம் - (மனப்பிராந்தியோடு) ஆ.. என்ன... பாக்க... யாரு

நிரோஷா - நல்லாப் பாருங்க அஸிக்காக்காட மகன்... ஸவூதிபோய் வந்திருக்கார்.

ஸல்மான் - அஸ்லம் எப்பிடி... ஆ... எழும்பாதீங்க... ஞாபகமா நான் ஸல்மான்.

அஸ்லம் - ஆ... ஸல்மான்... நீங்க என்ன.. என்ன.. பாக்க வந்தீங்களா... (அழுவது போல) என்ன என்ன எல்லாரும் கைவிட்டிட்டாங்க... நீங்க ரெண்டு வருஷத்துக்கு முன்னால...

ஸல்மான் - அதெல்லாம் இப்ப என்னத்துக்கு... பழயதெல்லாம் போகட்டும் அஸ்லம்

நிரோஷா - ஓ.. எனக்குக்கூட அது ஞாபகமிருக்கு...

## - முன்நினைவுக் காட்சி -

ஸல்மான் - வந்து முக்கியமான ஒரு விஷயமா உங்கள...

அஸ்லம் - (அகங்காரமாக) பீடிக போட்டுக்கொண்டிருக்காம விஷயத்துக்கு வா... எனக்கு நிறைய வேல இருக்கு...

ஸல்மான் - தயவு செய்து மன்னிக்கணும்... நீங்களும் நானும் ஏழெட்டு வருஷம்..

அஸ்லம் - ஒன்னாப் படிச்சிருக்கோம்... படித்தது குடித்ததெல்லாம் இப்பதான் எல்லாருக்கும் ஞாபகம் வருதாக்கும்... சரிசரி என்ன விஷயம்...

ஸல்மான் - (தயங்கி) வந்து நான் வெளிநாட்டுக்குப் போக யோசிக்கிறன்.

அஸ்லம் - தாராளமா போறதுதானே... இதென்ன பாஸ்போட் கந்தோரென்ன நெனப்பா?

ஸல்மான் - (சிரிப்பு) அப்படியில்ல... எனக்கு கொஞ்சம் உதவிசெய்யணும். முதல் வேலயா...

அஸ்லம் - (நையாண்டியா) எடுத்த காச அனுப்பப் போறீங்க. நல்ல விஷயம்... நீங்க போவீங் கெங்கிறதுக்கு என்ன உத்தரவாதம்.

ஸல்மான் - நான் போனாலும் போகாட்டியும் உங்க பணத்த நிச்சயமா திருப்பித் தருவேன்... அதுக்கு மாத்திரம் உத்தரவாதம் தாரன்.

அஸ்லம் - (சிரிப்பு) சம்பாதிக்கத் தெரிந்தவன் ஸவூதிக்கா போகணும்.

ஸல்மான் - உண்மதான் சம்பாதிக்கத் தெரியாததால தானே போகப்போறன்.

அஸ்லம் - சரியப்பா நீ இப்ப என்ன சொல்ற?

ஸல்மான் - ஒரு ஐயாயிரம் தந்தீங்கென்னா...

அஸ்லம் - உன்ன நம்பியா (சிரிப்பு) போடாபோய் வேறேதும் வழியப் பாரு (நேர இடை வெளி)

நிரோஷா - இங்க உங்களுக்கே நல்லா இருக்கா... கொஞ்சம்கூட இரக்கமில்லாம..

அஸ்லம் - இவங்களோட இப்பிடித்தான் நிரோஷா நடந்துகொள்ளணும்... இன்னக்கி கஞ்சி குடிச்சா நாளக்கி தண்ணி குடிக்க வழியில்லாதவங்கள்

நிரோஷா - ம்... உங்க நண்பர்களுக்கு நினச்சி நினச்சிக் கொடுக்கிறீங்க... பெருமைக்காகவும் ஆடம்பரத்துக்காகவும் கொடுக்கிறீங்க...

அஸ்லம் - யாருக்கு எவருக்கு எப்படிக் கொடுக்கணு மென்னு எனக்குத் தெரியும்... போய் உன்ற வேலயப் பாரு.

## - நினைவுக் காட்சி நிறைவு -

அஸ்லம் - (கவலையோடு) அன்னக்கி நான் உங்களுக்கு உதவி செய்யாம...

ஸல்மான் - ஒரேயொரு முறைதானே... நீங்க எனக்கு எவ்வளவோ உதவிசெய்திருக்கிறீங்க.

அஸ்லம் - நான்... நானா.. உங்களுக்கு.. உதவி...

ஸல்மான் - ஆமா... படிக்கிற காலத்தில உங்க சாப்பாட்டத் தருவீங்க... புத்தகங்களெல் லாம் தருவீங்க... இதெல்லாம் உதவி தானே... அதயெல்லாம் நான் நன்றியோட ஞாபகம் வெச்சிருக்கிறன் அஸ்லம்.

அஸ்லம் - (சிரிப்பு) ஸல்மான்... இன்னக்கி நான் எல்லாத்தயும் இழந்திட்டன். என்னிட்ட உதவி எடுத்தவங்கெல்லாம் என்ன விட்டிட் டாங்க... எனக்கு வெளிய தலகாட்ட முடியல்ல... கடன்.. கடன் (எதிரொலியாக) கடன்... ஐம்பதுக்கு மேல.. கல்லு.. பணம் எல்லாம் போச்சு.

ஸல்மான் - உண்மயாகவா.. ஆச்சரியமா இருக்கே..

நிரோஷா - இதென்ன ஆச்சரியம்... அந்த மனக்குழப் பத்திலதான் இப்படியிருக்கார்... எந்த வழி யிலயாவது கடனத் தீர்க்க முன்னால காச வைத்திட்டா எல்லாம் சரிவரும்.

அஸ்லம் - (சற்று நிதானமாக) ஆமா.. கடனெல்லாம் கொடுத்தாத்தான் நான் வெளியிறங்க முடியும்.

நிரோஷா - இவரப் பிடுங்கிப் பிடுங்கி இருந்தவங்கெல் லாம் இன்னக்கி நல்லா இருக்காங்க... இவர்தான் இப்பிடி.

ஸல்மான் - அஸ்லம் நீங்க ஒன்னுக்கும் யோசியாதீங்க... நான் நிறையப் பணத்தோடதான் வந்தி ருக்கன்... உங்கட கடனத் தீர்த்து யாவாரம் பண்ணத் தேவயான காச நான் தாரன்... வசதிப்படுறப்போ திருப்பித் தாங்க.

அஸ்லம் - (நிதானத்தோடு) ஸல்மான்... உண்மை யான நட்பு என்னெங்கிறது எனக்கு இன் னக்கித்தான் புரிஞ்சிது ஸல்மான்.

நிரோஷா - யா அல்லா... நல்ல சுகத்தயும் நல்ல நண்பனயும் ஒரே நேரத்தில கொடுத்திட் டியே... அல்ஹம்துலில்லாஹ்.

# விடிவுக்காக ஒரு முடிவு

## *காட்சி — 1*

பாத்திரங்கள் : அஸீனா, நிஸா, இஸ்மாயில்
இடம் : வீடு

*அஸீனா* - *நிஸா... நிஸா...*

*நிஸா* - *ஏம்மா என்ன அவசரம்?*

*அஸீனா* - *அவசரமொன்னுமில்ல.*

*நிஸா* - *அப்டீன்னா...*

*அஸீனா* - *எப்ப இதுக்கொரு முடிவு சொல்லப் போறீங்கென்னு கேக்கிறன்.*

*நிஸா* - *ஆ... அதச்சொல்றீங்களா?*

*அஸீனா* - *வேறென்ன மகள்... அதயும் ஒழுங்கா செய்துமுடித்திட்டோமென்னா...*

நிஸா - நிம்மதியா கண்ண மூடலாமென்னு சொல்லப் போறீங்க.

அஸீனா - (சிரிப்பு) அப்பிடியெல்லாம் யோசிக்காதே நிஸா.

நிஸா - கல்யாணமென்ற பேரில உங்க பொறுப்பிலிருந்து என்ன விடுவிக்கப் போறீங்க.

அஸீனா - காலாகாலத்தில கல்யாண விஷயம் ஆகத்தானே வேணும்.

நிஸா - அப்பிடி எனக்கென்னம்மா வயதா ஆகிட்டுது.

அஸீனா - அப்பிடியெல்லாம் சொல்லாதே. உன்ற ஆசப்படி படிக்கவிட்டம்... ஏதோ உத்தியோகம் கிடச்சிது... அப்புறம் ட்ரெயினிங்... அதுவும் முடிந்தாச்சி...

நிஸா - இப்ப கல்யாணம் கட்டிக்கச் சொல்றீங்க.

அஸீனா - அதுதான் நிஸா உங்க வாப்பாவின்ற ஒரே ஆச

நிஸா - எனக்கும் சில இலட்சியங்கள் இருக்கம்மா.. படிப்பு உத்தியோகத்தப் பொறுத்த மட்டில நானொரு ஸ்திரமான நிலைய அடஞ்சிட்டன்... அதுக்கு அப்பால... என்னால முடிந்த காலத்தில ஊருக்கும் ஊர்ப்பிள்ளைகளுக்கும் ஏதாவது செய்யணுமென்னு யோசிக்கிறன்.

இஸ்மாயில்- (வந்தபடி) ம்... என்ன என்ன உம்மாக்கும் மகளுக்கும் பெரிய கதையா இருக்கு.

நிஸா - வாப்ப இப்பதான் வாரீங்களா?

இஸ்மாயில்- இல்ல நிஸா. நான் வந்து கோப்பி குடித்திட்டு

பள்ளிக்குப் போய் இப்பதான் வாரன்... சரி மகள் என்ன சொல்றா?

அஸீனா - உங்க மகள் புதிசா ஒன்னும் சொல்லல் லியே

இஸ்மாயில் - (மென்மையாக) நிஸா... எங்க ரெண்ணு பேருக்குமுள்ள ஒரே கவல இதுதான். இன்னக்கி நான் போய் வந்ததும் இது விஷயமாத்தான்..

அஸீனா - அவர் டவுன்ல கட வெச்சிருக்காராம்... ரொம்ப வசதியானவராம்.

இஸ்மாயில்- அதுமட்டுமில்ல... அங்கயே ட்ரான்ஸ்ஃபர் பண்ணிக் கொள்ளக்கூடியளவுக்கு செல் வாக்கிருக்காம்.

நிஸா - அப்டீன்னா எப்பிடியாவது என்ன வெளியால அனுப்பத்தான் பாக்கிறீங்க.

இஸ்மாயில் - நம்ம ஊருல உத்தியோகம் பாக்கிறவங்க யார்தான் இருக்கிறாங்க... வயல் செய்ற வங்களும் கூலிவேல செய்றவங்களுந் தானே இருக்காங்க.

நிஸா - அதத்தான் வாப்பா நானும் சொல்றன்... எப்பவுமே நம்ம ஊரவங்க இப்படி இருக்கணுமா... புதிய பிள்ளைங்களாவது முன்னுக்கு வரக்கூடாதா...

இஸ்மாயில்- யாரம்மா கூடாதென்னு சொன்னது.

நிஸா - அதத்தான் நானும் சொல்றன்... படித்தவங் கெல்லாம் சொந்த வசதியப் பார்த்து ஊர விட்டு அப்புறமானா...

அஸீனா - நீயொரு பொம்புள இல்லியா... ஆம்பி

ளைங்களே அதப்பத்தியெல்லாம் யோசிக்காம இருக்கிறப்போ...

நிஸா - பொம்பிளைங்களாவது யோசிக்கத் தானே வேணும்.

இஸ்மாயில் - நீயொரு படித்த பொண்ணு... உன் னோட கதைக்கிறதுக்கு நமக்குத் தெரியாது... உங்க நோக்கங்களுக்கு நாம குறுக்கால நிக்கயில்ல... ஆனா நாம சொல்றதயும் கொஞ்சம் கவனத்தில எடுக்கச் சொல்றம்.

## காட்சி — 2

பாத்திரங்கள் : ராஸிக், நிஸா
இடம் : பாடசாலை

(பாடசாலை மாணவர்களின் இரைச்சல் எழுந்து ஓய்தல்)

ராஸிக் - (சிரித்தபடியே) நிஸா டீச்சர சந்திக்கிறதென்னா ரொம்ப கஷ்டமா இருக்கே.

நிஸா - அப்பிடி என்ன ஸேர் கஷ்டம்... ஒரே ஸ்டா.ஃ.பா வேல செய்றம்.

ராஸிக் - அப்பிடி இருந்தும் முடியாதுன்னா பாருங்களன்.

நிஸா - நீங்க சொல்றதிலயும் நியாயமிருக்கக்கூடும்... இங்க எனக்கு ஓ.ஃ.ப் பாடமே கிடையாதே.

ராஸிக் - நீங்க இப்பிடி இயங்கிறதப் பாக்க எனக்கு சிரிப்பாகவுமிருக்கு.

நிஸா - சந்தோஷப்பட்டு சிரிக்கிறீங்களாக்கும்.

ராஸிக் - பிரயோசனமில்லாம கஷ்டப்படுறதப் பார்த்தா சந்தோஷமா வரும்.

நிஸா - பிள்ளைங்களுக்காக கஷ்டப்படுறது பிரயோ சனமில்லேன்னு சொல்றீங்களா.?

ராஸிக் - நம்ம ஊர்ப் பிள்ளைங்களப் பொறுத்த மட்டில...

நிஸா - திறமசாலிகளில்லேன்னு சொல்றீங்களா ஸேர்.

ராஸிக் - திறமசாலிகள்தான்... மாடுமேய்க்கிறதில... வயல்வேல செய்றதில...

நிஸா - ஸேர் நீங்க என்ன சொல்றீங்க... அனுபவ்சாலி வேற...

ராஸிக் - அந்த இருபத்தைந்து வருஷ அனுபவத்தில தான் சொல்றன்... ம்... கஷ்டப்பட்டா அதுக்கொரு பிரதிபலன் இருக்கணும்... இல்லேன்னா...

நிஸா - இருக்காமப் போகாது ஸேர். இன் னைக்கோ நாளைக்கோ... எதிர்காலத் திலயோ நிச்சயமா இருக்கும்.

ராஸிக் - (சிரிப்பு) நாங்களும் ஆரம்பத்தில இப்பிடித்தான் சொன்னோம்.. காலப் போக்கில புரிந்துகொண்டோம்... அதனால தான் இப்ப இப்பிடிச் சொல்ல வேண் டியிருக்கு.

நிஸா - எது எப்படியிருந்தாலும்... நல்ல நோக்கங் களுக்கு நல்ல கூலி இருக்கத்தானே செய்யும்.

ராஸிக் - (சிரிப்பு) இப்ப இஸ்லாம் பேசத் தொடங் கிட்டீங்க. பரவால்ல நான் முக்கியமான விஷயமொன்னு கேக்கலாமென்னு பார்த் தன்.

நிஸா - அப்பிடி என்ன ஸேர்

ராஸிக் - (இழுத்து) வந்து நம்ம மகள் டவுன் ஸ்கூல்ல படிக்கிறாள்... கொஞ்சம் கணக்கு சொல்லிக் கொடுக்க வேண்டி யிருக்கு...

நிஸா - மன்னிக்கணும் ஸேர்.

ராஸிக் - ஏன் ஒரேயடியா அப்பிடிச் சொல்றீங்க...

நிஸா - நேரமில்லயே... ஸ்கூல் பிள்ளைங்களுக்கு மாறி மாறி வகுப்பு வைக்கிறதால...

ராஸிக் - உங்களுக்கென்ன லாபமிருக்கு? ஒரு மாதம் ரெண்டு மாதம் ஏதாவது தருவாங்க. அப்புறம்...

நிஸா - அப்பிடி எதுவுமே எதிர்பார்க்காமத்தான் வகுப்பெடுக்கிறன்.

ராஸிக் - நான் நல்ல முறையில கவனிக்கிறன்.

நிஸா - (சிரிப்பு) நீங்க விருப்பமென்னா... ஸ்கூல் பிள்ளைங்களோட வந்து...

ராஸிக் - (கோபமாக) என்ன சொன்னீங்க... இந்த மாடுகளேம் நம்ம பிள்ளைங்களேம் ஒன் ணாக நெனச்சிட்டீங்களா.

நிஸா - இல்ல ஸேர்... எனக்கு பிரத்தியேகமா நேரம் கிடைக்காததாலதான் அப்பிடிச் சொன் னன்.

ராஸிக் - என்ன யாரென்னு தெரியாமக் கதைக்கி றீங்க... இதனால வரப்போற விளைவுகள் இப்ப புரியாது. (திரும்பி) சரி உங்க கெட்டித்தனத்த பார்ப்பமே.

## காட்சி — 3

பாத்திரங்கள் : இஸ்மாயில், அஸீனா, நிஸா
இடம் : வீடு

இஸ்மாயில்- எங்க தலையில நாமே மண்ண வாரிப் போட்டுக்கிட்டோம். ஆமா...

அஸீனா - ஆ.. என்ன சொல்றீங்க... கொஞ்சம் புரியும்படியாத்தான் சொல்லுங்களன்.

இஸ்மாயில்- எல்லாம் இந்த நிஸாவாலதான்.

அஸீனா - (தடுமாறி) அப்பிடி அப்பிடி என்ன செய்து போட்டாள்?

இஸ்மாயில்- சும்மாதான் கேக்கிறன்... அந்த ராஸிக் மாஸ்டரின்ற மகளுக்கும் டியூசன் சொல்லிக் கொடுத்தா கொறஞ்சா போகுமென்னு கேக்கிறன்.

அஸீனா - ஏன் மாட்டேனென்னு சொல்லிட்டாளாமா?

இஸ்மாயில்- வேறென்ன...

அஸீனா - அடடா யோசின இல்லாத பிள்ள... இன்ன வரைக்கும் நம்ம காலம்போறது அவங்களால தானே... இதக்கூட மறந்திட்டாளா?

இஸ்மாயில்- அ.. அதத்தானே நானும் கேக்கிறன்... இந்த இருபத்தைந்து வருஷமா அவங்களிட்டத் தானே நான் வேலபாக்கிறன்.

அஸீனா - (கோபமாக) அதெல்லாம் தெரியாமலிருக்க நிஸா என்ன சின்னப்பிள்ளயா...

நிஸா - (வந்தபடியே) சின்னப் பிள்ளயில்ல பெரிய

பிள்ள... அப்பிடி நான் ஒன்னும் தவறா நடந்துக்கல்ல.

இஸ்மாயில்- எவ்வளவு கோபத்தோட அவரென்ன திட்டினார் தெரியுமா?

நிஸா - அவங்க பழக்கமே அதுதான் வாப்பா. அவங்க முன்னால எல்லாரும் கைகட்டி நிக்கணுமென்னு எதிர்பார்க்கிறாங்க.

அஸீனா - உன்னக் கெஞ்சிக் கேக்கிறன் நிஸா... மறுக்காதேம்மா. ஏதாவது கொஞ்சம் சொல்லிக்கொடன்.

இஸ்மாயில்- உண்மதான் மகள்... நல்லபாம்ப நோவிச்சிக்கிட்டா நமக்குத்தானே கஷ்டம்.

நிஸா - (சிரித்து) என்னப் பொறுத்தமட்டில எல்லாமே ஒன்னுதான். அவங்க பணம் அவங்களோட...

இஸ்மாயில்- அப்பிடிச் சொல்லாதீங்க... நான் இவ்வளவு காலமும்...

நிஸா - அவங்களிட்ட வேல பாத்தீங்கென்னு சொல்ல வாரீங்க.

இஸ்மாயில்- ஆமா...

நிஸா - (நீட்டி இழுத்து) உங்கட உழைப்பக் கொடுத்து கூலி எடுத்திருக்கிறீங்க... மாதா மாதம் உங்களுக்கு நன்கொடையா தந்தாங்க?... சும்மா பயந்து போய் முழு ஊருமே அவங்க காலடியில சுருண்டுகிடக்கு... அவங்க பிள்ளைக்கு நான் டியூசன் கொடுக்க வேணுமெங்கி றது அவங்களுக்கு முக்கியமில்ல... ஊர்ப்பிள்ளைங்களுக்கு டியூசன் கொடுக்கக் கூடாதெங்கிறதுதான் அவங்களுக்கு முக்கியம்.

இஸ்மாயில்– (வியப்போடு) அப்பிடியா...

நிஸா – ஆமா அவங்க குடும்பத்தத் தவிர... இந்த ஊருல வேற யாரும் பணத்தால மட்டு மில்ல படிப்பாலகூட முன்னுக்கு வரக்கூடாதெங் கிறதுதான் அவங்கட ஒரே நோக்கம்.

அஸீனா – (சிந்தித்தபடி) உண்மயாக இருக்கும் நிஸா.. இதெல்லாம் விளங்கியும் விளங்காத மாதிரி தானே எல்லாரும் இருக்காங்க.

நிஸா – அதுக்காக என்னயும் அப்பிடியே இருக்கச் சொல்றீங்களா... ம்... நான் அவங்களோட சண்டை சச்சரவுக்குப் போகயில்ல... அதுக்குப் பதிலா இன்னைக்கோ நாளைக்கோ ஸ்கூல விட்டு விலகி அவங்க தோட்டத்துக்கும் வயலுக்கும் கடைக்கும் கூலிகளாகப் போகும் பிள்ளைகள தொடர்ந்து படிக்க உற்சாகம் கொடுக்கப் போறன்...

இஸ்மாயில்– நினைக்கவே பயமா இருக்கு... அவங்க பரம்பரைப் பணக்காரரில்லயா..

நிஸா – அந்தப் பணத்தால எல்லாரயும் எப்பவும் ஆட்டிப் படைக்க முடியாது வாப்பா.

இஸ்மாயில்– உன்னோட எனக்கு பேசமுடியாது... எதுக் கும் ரொம்ப நிதானமா நடந்து கொள்ள ணும்... அது மாத்திரந்தான் என்னால சொல்ல முடியும்.

அஸீனா – ஆமா நிஸா... அல்லாதான் எல்லாத்துக்கும் இருக்கான்.

## காட்சி — 4

பாத்திரங்கள் : அதிபர், நிஸா
இடம் : பாடசாலை.

(பாடசாலைச் சூழல் - மாணவர் கலகலப்பு)

அதிபர் - (சத்தமாக) என்ன அங்க விளயாட்டு... ஸ்கூல் ஆரம்பிக்க முன்னால அழிக்கச் சொன்னேனில்லயா... இந்தா இந்தப் பக்கம் சுவரிலயும் இருக்கு (கலகலப்பு) அழிச்சிட் டீங்களா கரும்பலகய மறுபக்கம் திருப்பி வைங்க. (தனக்குள்) சே... காவாலிப் பயல்கள்டவேல... படித்த காவாலிகள்தான்... செய்யவும் மாட்டாங்க செய்யவிடவும் மாட்டாங்க... ஒரு நாளக்கி வாங்கிக் கட்டத்தான் போறாங்க பாவிப்பயல்கள்...

நிஸா - (கம்மிய குரல்) ஸேர்...

அதிபர் - ஆத்திரப்படாம அப்பிடி உக்காருங்க டீச்சர்.

நிஸா - முடியல்ல ஸேர்... இன்னக்கி வேல செய்யக் கூடிய நிலையில நானில்ல... வீட்ட போகவும்...

அதிபர் - எங்கயும் போகவேண்டியதில்ல... உங்க பாட்டுக்கு வேல செய்ங்க... முடியல் லேன்னா ஸ்டா.ஃப் ரூமில போய் இருங்க.

நிஸா - (சோகமாக) எப்பிடி ஸேர் முடியும்... இவ்வளவையும் கண்களால் பார்த்த பிறகு...

அதிபர் - அதயெல்லாம் நீங்க பார்க்கணும்... ஆத்திரப் படணும்... உங்க முயற்சிகள கைவிடணும்...

இதுதானே அவங்க எதிர்பார்ப்பு...

நிஸா - ஆமா ஸேர்...

அதிபர் - அப்டீன்னா உங்க பதில் நடவடிக்கை...

நிஸா - (தெளிவாக) முன்பவிட உற்சாகமா வேல செய்யணும்...

அதிபர் - சரியாச் சொன்னீங்க... அதுதான் அப்படிப் பட்டவங்களுக்கு சரியான பாடமாக அமையும்.

நிஸா - ம்... இவ்வளவு காலமா மறுத்துப் பேசக்கூடிய ஒருவரக்கூட உருவாக விடாமச் செய்தது தான் அவங்கட பெரிய கெட்டித்தனம்.

அதிபர் - ஆமா அந்த அத்திவாரத்திலதான் காலூன்றி நிக்கிறாங்க.

நிஸா - அது இன்னம் எவ்வளவு காலத்துக்கு...

அதிபர் - மிஸ் நானும் ஒரு வெளியூர்க்காரன்... என்னுடைய அவதானங்களக் கொண்டு சொல்றன்... நீங்க சொறதுபோல திறம சாலிகளுக்கு படிக்க வழிகாட்டி அவங்கள உருவாக்கி விடுறதால மாத்திரம்... இப்படிப்பட்ட ஒரு கிராமத்தின்ற வளர்ச் சிக்கு தடையாயிருக்கிற கற்கள அகற்றி புதுவழி அமைத்துவிட முடியுமான்னு கேக்கிறன்.

நிஸா - முடியுமென்னுதான் நம்புறன்.

அதிபர் - (சிரிப்பு) அப்டீன்னா... இதுவரையில பலர் படித்து உத்தியோக மெடுத்திருக்காங்க... அவங்க எந்த முயற்சியும் செய்ததாத் தெரியல்ல... பள்ளிக்கூடம் ஊர் முன்னேற்ற மெல்லாம் அப்படியப்படியே கிடக்கு.

நிஸா - ஆமா ஸேர்... இன்னொரு பக்கம் எனக்கு இப்பதான் புரியிது.

அதிபர் - அதாவது படித்து ஒரு நிலைக்கு வந்த பிறகு... தங்கட முன்னேற்றத்தத்தான் யோசிக்கிறாங்க... பெரிய இடங்களுக்கு மாப்பிளயாப் போறாங்க... சிலபேர் வெளி யூருக்கே போயிடுறாங்க...

நிஸா - ஆமா ஸேர் எல்லாம் நலவுக்குத்தான்... இன்னக்கி இப்பிடி நடந்ததாலதான் இதெல்லாம் சொன்னீங்க... தீர்க்கமா யோசித்து நல்ல முடிவுக்கு வரணும் ஸேர்.

அதிபர் - நல்ல நோக்கத்துக்கு நல்ல பிரதிபலன் இருக்கு... இதத்தான் என்னால சொல்ல முடியும்... முன்னேற்றப் பாதையில தடைக் கற்கள் தாராளமாக இருக்கத்தான் செய் யும்... சரிசரி வகுப்புக்குப் போங்க.

## காட்சி — 5

பாத்திரங்கள் : இஸ்மாயில், ராஸிக்
இடம் : வீடு

இஸ்மாயில் - (தாழ்மையாக) என்ன தொர வரச்சொன் னீங்களாமே...

ராஸிக் - (அதிகாரத்தோடு) ஆமா வரச்சொன் னன்.

இஸ்மாயில்- என்ன விஷயம் தொர...

ராஸிக் - நிஸா டீச்சர் உங்க மகள்தானே...

இஸ்மாயில்– என்ன தொர... நீங்களும் நிஸாவும் ஒரே ஸ்கூல்ல இல்லியா படிப்பிக்கிறீங்க.

ராஸிக் – ஆமா.. நீங்க நமக்கிட்ட தொழிற் செய்றீங்க... அந்த முஹப்பத்திலதான் கேக்கிறன்.

இஸ்மாயில்– செல்லுங்க தொர.

ராஸிக் – உங்க மகள் ஒரு டீச்சர்தான்... அதே நேரத்தில ஒரு குமரும்கூட...

இஸ்மாயில்– உண்மதான் தொர.

ராஸிக் – இப்பிடி படிப்பு பதவியென்னு வந்தா சில பெண்கள் தலைகால் புரியாம நடக்கத் தொடங்கிறாங்க.

இஸ்மாயில் – (வியப்போடு) அப்பிடியேதும் விபரீதமா...

ராஸிக் – நடக்கயில்ல... ஆனா போகிற போக்கப் பார்த்தா...

இஸ்மாயில்– நீங்களே சொல்லுங்க தொர... இப்ப நான் என்ன செய்யணும்... ம்... மானம் மருவாரிதான் தொர மனிசனுக்கு முக்கியம்.

ராஸிக் – சரியாச் சொன்னீங்க...(மெதுவாக) இஸ்மாயில் நானா இதுக்கெல்லாம் ஒரு லேசான வழியிருக்கு.

இஸ்மாயில்– (தாழ்மையோடு) அப்பிடியா என்ன தொர

ராஸிக் – பக்கத்து ஊரில எங்காவது பாத்து ஒரு கல்யாணத்த முடிச்சி வெய்ங்க.

இஸ்மாயில்– அதுக்குத்தானே தொர நானும் ஓடியாடித் திரியிறன்.

ராஸிக் – ஒன்னும் சரிப்பட்டு வரல்லியா?

இஸ்மாயில்– ஏனில்ல...

ராஸிக் - அப்டீன்னா...

இஸ்மாயில்- அவள் விருப்பம் சொல்றாப் போலில்லயே.

ராஸிக் - என்னமோ என்ற மனதில பட்டதச் சொன் னன். வெளியூரில செய்தீங்கென்னா நீங்க நிம்மதியா இருப்பீங்க... ம்...

## காட்சி — 6

பாத்திரங்கள் : இஸ்மாயில், அஸீனா, நிஸா
இடம் : வீடு

இஸ்மாயில் - (அழைப்பு) அஸீனா... அஸீனா...

அஸீனா - என்ன இது வந்ததும் வராததுமா...

இஸ்மாயில்- ஆமா... இன்னும் கொஞ்ச நாளில நம்ம தலையில இடி விழுந்தாலும் விழும் போலிருக்கு.

அஸீனா - என்ன சொன்னீங்க... இடி மின்னலென் டெல்லாம்...

இஸ்மாயில்- ஸ்கூல்ல நடந்ததெல்லாம் தெரியுமில்ல.

அஸீனா - கேள்விப்பட்டதிலிருந்தே வயிறு வாயெல் லாம் பத்திது.

இஸ்மாயில்- அது அப்பிடியிருக்க... சின்னதொர இருக் காரே...

அஸீனா - வந்து ராஸிக் மாஸ்டரத்தானே சொல்றீங்க.

இஸ்மாயில்- ஆமா அவர்தான்.

அஸீனா - என்ன சொன்னாங்க?

இஸ்மாயில்- சொல்லவேண்டியதெல்லாம் சொல்லிட்டார்... அவருசொன்னதயும் இவரு சொன்னதயும் நடந்திருக்கிற காரியங்களயும் பார்த்தா... நாம் அவசரமா செய்யவேண்டிய காரியமொன்டிருக்கு.

அஸீனா - கல்யாணம் செய்துவைக்கிறது... அப்படித் தானே...

இஸ்மாயில்- அப்படியேதான். இல்லேன்னா இந்த ஊர்ல நாம தலகாட்ட முடியாமப்போகும்.

அஸீனா - இதெல்லாம் அவளுக்கு விளங்க வேண்டாமா...

இஸ்மாயில்- படிச்சி மிஞ்சினவனுக்கு பாலத்தில போக முடியாதென்னு சொல்லுவாங்க.

அஸீனா - பாலத்திலயா... இந்தக் காலத்தில ரோட்டில கூடப் போகமுடியல்ல.

இஸ்மாயில்- (சிரிப்பு) அ... நிஸா இப்பதான் ஸ்கூல் விட்டு வாரா...

நிஸா - (வந்தபடியே) என்ன இன்னக்கி உம்மாவுக்கும் வாப்பாவுக்கும் பெரிய பேச்சாயிருக்கே.

அஸீனா - எல்லாம் உங்களப்பத்தித்தான் மகள்... கல்யாணத்தமட்டும் நடத்திட்டோமென்னா... நமக்கு நிம்மதிதான்.

நிஸா - (சிரித்தபடி) ஓ... என்னக் குடும்பக்காரியாக்கி... பிள்ள குட்டிகளோட கஷ்டப்படுறதப் பாக்க உங்களுக்கு சந்தோஷம் போலிருக்கு.

இஸ்மாயில்- கலயாணக் காட்சியப் பாக்க எங்களுக்கு

சந்தோஷமில்லயா

அஸீனா - அந்த பக்கத்தூர் விஷயமிருக்கே அது மாத்திரம் தவறவிட்டா...

நிஸா - அந்த முதலாளி மாப்பிளயச் சொல்றீங்களா.. அப்புறம் எனக்கும் ஊருக்கும் தொடர்பே இல்லாமப் போயிருமே...

இஸ்மாயில் - அதுக்கென்ன எங்கிருந்தாலும் சந்தோஷமா இருந்தால் சரி.

அஸீனா - ம்... ஸஹிரா டீச்சர் சகீலா டீச்சரெல்லாம் வெளியூரில தானே கல்யாணம் செய்திருக்காங்க... ஹயாத்து மௌத்துக்கு வாறாங்க போறாங்க.

நிஸா - சரிம்மா... நாள காலமே இதுக்கொரு முடிவு சொல்லத்தான் போறன்.

அஸீனா - அல்லாதான் நல்ல யோசினயக் கொடுக்கணும். (நேர இடைவெளி)

இஸ்மாயில்- (மெதுவாக) பாத்தீங்களா... ஊரு ஊரென்னு சொல்லிக்கிட்டிருந்தவள் இப்பதான் உணர்ந்திருக்காள்.

அஸீனா - பிரச்சின வந்தது ஒரு வகையில நல்லது தான்.

இஸ்மாயில்- தானும் தன்ற பாடுமென்னு எல்லாரயும் போல இருந்தா என்னக்குமே நிம்மதியா இருக்கலாந்தானே.

அஸீனா - எப்படியென்னாலும் வெளியூர் விஷயத்தத் தான் பாக்கணும்.

இஸ்மாயில்- அப்புறம் ஊரோட தொடர்பில்லாமப் போனால்...

அஸீனா - நல்ல பெரிய மனிசங்களோட மனஸ்தாபப் பட்டுக் கொண்டு ஊருல இருக்கிறத விட வெளியில இருக்கிறது எவ்வளவோ நிம்மதி.

இஸ்மாயில்- சரி நாளக்கி என்ன சொல்றாளென்னு பாப்பம்.

## காட்சி — 7

பாத்திரங்கள் : இஸ்மாயில், அஸீனா, நிஸா
இடம் : வீடு

(காலைப் பொழுதின் ஒலிக்குறிப்புகள்)

இஸ்மாயில்- அஸீனா...

அஸீனா - சுபஹு தொழுதிட்டீங்களா?

இஸ்மாயில் - நல்ல முடிவொன்னு கிடைக்கணுமென்னு துஆ வேற கேடிட்டு வாரன்.

அஸீனா - நிஸாவும் நேரகாலத்தோட எழும்பிட்டாள்.

இஸ்மாயில்- ஆ... அது குளிச்சிட்டு வாரா...

நிஸா - (சிரித்தபடி) ரெண்டு பேரும் ரொம்ப ஆவலா இருக்கிறாப்போல...

அஸீனா - உண்மதான் நிஸா

நிஸா - அப்டீன்னா இனி கல்யாணத்துக்கு ஏற்பாடு கள செய்ங்கம்மா.

இஸ்மாயில்- இப்பவே புறப்பட்டுப் போய்ச் சொல்லிட்டு வாரன்.

நிஸா - (சிரிப்பு) என்ன வாப்பா அப்பிடி அவசரம்?

அஸீனா - கல்யாண விஷயமென்னா அப்பிடித்தான். காலம் கடத்தாம சுடச்சுட செய்ய வேண்டிய விஷயம்.

நிஸா - இருக்கலாம்... ரெண்ணு காரணங்களுக் காகத்தான் இந்த முடிவுக்கு வந்தன்... ஒன்னு உங்க ஆசைக்கு குறுக்கே நிற்கக்கூடாது... மற்றது இந்த ஊருக்கு எனது பணி தொடரணும்...

இஸ்மாயில் - (வியந்து) ஆ... அப்டீஎன்னா...

நிஸா - இங்க உள்ள பணக்காரங்க சமூகத்தப் பற்றிய அக்கறையில்லாதவங்களா இருக் காங்க... படித்தவங்க சுயநலக்காரரா இருக் காங்க... இதனாலதான் இந்த ஊர் முன் னேற்றம் தடைப்பட்டிருக்கு. நான் பிறந்து வளர்ந்த மண்ணுக்கு ஏதாவது செய்ய ணும்...

அஸீனா - என்னத்துக்கு மகள் வீண்வம்புகள விலைக்கு வாங்குறீங்க?

நிஸா - அப்பிடிச் சொல்லாதீங்கம்மா... ஒரு சில ருக்கு இது பிடிக்காமலிருக்கலாந்தான். அதுக்காக நாம ஒதுங்கிறதா...

இஸ்மாயில்- அப்ப ஊருக்குள்ள கல்யாணம் செய்றதா உங்க முடிவு.

நிஸா - ஆமாம் வாப்பா.

இஸ்மாயில்- (கவலையோடு) இங்குள்ள வாலிபர்களெல்லாம் கூலிக்காரரா இருக்காங்க... வயல் வேல செய்றவங்களா இருக்காங்க... உங்கட உத்தியோகத்துக்கு பொருத்தமா யார்தானிருக்காங்க?

அஸீனா - உத்தியோகம் செய்றவங்களா இருக்கணும் இல்லேன்னா வசதியுள்ளவங்களா இருக்கணும்... ம்... அந்த வெளியூர் விஷயம் எவ்வளவு நல்லது பாருங்க.

நிஸா - (சிரிப்பு) வாப்பா... நீங்களே ஒரு தொழிலாளி. எங்க வாப்பா கூலிக்காரனெங்கிறதில எனக்கு வெட்கமில்ல... அதேபோல என் கணவனும் ஒரு கூலிக்காரரா இருக்கிறதில எனக்கு வெட்கமில்ல வாப்பா.

இஸ்மாயில்- அப்டீன்னா இது தான் உங்கமுடிவா?

நிஸா - வேறென்ன.

# . கண்ணாடி மாளிகை

## காட்சி — 1

பாத்திரங்கள் : சித்தீக், கரீமா, ஜெஸீலா
இடம் : வீடு

சித்தீக் – என்ன பிள்ளைங்கெல்லாம் ஸ்கூல்விட்டுப் போயிட்டாங்க... ஜெஸீலாவ இன்னுமே காணல்லியே...

கரீமா – ம்... அவளுக்கு படிப்பு ஒன்னு மாத்திரந் தானா வேல... அதுஇதென்னு ஸ்கூல் வேல களெல்லாம் தலையில தூக்கிப் போட்டுக்குவாளில்லயா... மற்றவங்களப் போல நேரத்த கடத்துறதுக்கா போறாள்!

சித்தீக் – நல்லதுதானே... நாமும் நம்மட பாடு மென்னு இருக்கிறதவிட நம்மால முடிந்தத நம்ம சமுதாயத்துக்காகவும் செய்யத்தானே வேணும்.

கரீமா - ம்... அதுக்காக காலம் நேரமென்னு பாக்காம இப்பிடிக் கஷ்டப்படணுமா?

சித்தீக் - ஆ... அது இப்பதான் வாரா போலிருக்கு.

கரீமா - என்ன மகள் இவ்வளவு நேரம்...! ஸ்கூல் விட்டு எவ்வளவு நேரமாச்சு.

ஜெஸீலா - உண்மதாம்மா... வர்ர மாதம் நம்ம ஸ்கூல்ல கலைவிழா நடக்க இருக்குதில்ல... எல்லா ஏற்பாடுகளும் அன்ஸார் மாஸ்டர் தலயோட தான். கேர்ள்ஸ் ஐடமெல்லாம் என்னிட்ட ஒப்படச்சிட்டாங்க.

கரீமா - அப்பிடியா... சரி சரி போய் முதல்ல சாப்பிடுங்க (நேர இடை)

சித்தீக் - பாத்தீங்களா எப்ப கதச்சாலும் அன்ஸார் மாஸ்டர்ட கதையொன்னு அவள் பேச்சில வராமல் போகாது.

கரீமா - ஒரே இடத்தில வேல செய்றாங்க... ஒரே மாதிரியான பாடம் சொல்லிக் கொடுக் கிறாங்க... அதனால...

சித்தீக் - ம்... அப்ப நீங்களும் எப்பிடியாவது ரெண்டுபேரயும்...

கரீமா - அவங்க விருப்பத்த புரிந்துகொண்டு... நாங் களாகவே ஏற்பாடுகள செய்திட்டா... அப்பு றம் யாருமே கூடிக் கதைக்க இடமிருக் காதில்லயா..?

சித்தீக் - ஆமா... பார்த்த கண்ணுக்கே நல்ல பையன்... தானும் தன்ற பாடுமென்னு இருக்கிறவன்... ஊர்ப் பிரச்சினகள தூக்கித் தலையில போட் டுக்கொண்டு திரியிறவனாகவும் தெரியல்ல.

கரீமா - ஒரு பீடி, சிகரட்கூட வாயில வைக்கிற தில்லயாமே...

சித்தீக் - வேற யாருமில்ல... மிச்சம் தூரமுமில்ல... நம்ம வாப்பா வழியில சொந்தக்காரன்தான்... போனா வந்தாத்தானே இந்தக் காலத்தில அதெல்லாம் வெளியில தெரியும்

கரீமா - ஜாடிக் கேத்த மூடியென்னு சொல்வாங்கில்லயா... படித்த பிள்ளைங்களுக்கு படித்தாக்கள்தானே ஒத்து வருவாங்க... அவரும் ஆடம்பரம் அது இதென்னு பாக்கிற ஆளில்ல.

சித்தீக் - நல்ல பையன்தான். ஆனா அவங்க வாப்பா...

கரீமா - மகன் விருப்பமென்னா வாப்பாவ விரும்ப வைக்கிறது அவ்வளவு கஷ்டமான காரியமா என்ன...

சித்தீக் - கஷ்டமா இருக்காதுதான். ஆனா...

கரீமா - அதனால தான் சொல்றன்... ஊர் வழக்கப் படி நல்ல நேரமாப் பாத்து... நாலு பேரு கூடி...

சித்தீக் - சரிசரி... எதுக்கும் எங்கட உமர் லெப்பயிட்டயும் சொல்லி உங்க தம்பியேம் கூட்டிக்கிட்டு ஒரு நாளக்கி அவங்க வீட்டுப் பக்கம் போறது தானே...

## காட்சி —2

பாத்திரங்கள் : சித்தீக், கரீமா, ரஹீம், சிறாஜ்

சித்தீக் - கரீமா... கரீமா... என்ன இது ஏழு மணியாகிட்டுது. இன்னுமே வாரதா தெரியல்லயே.

கரீமா - (வந்தபடி) இதோ வந்திடுறன். சும்மா வாரத விட குடிக்கிறதுக்கு ஏதாவது கையோடு

கொண்டுவாரது நல்லதில்லயா... அதனால தான் கொஞ்சம்...

சித்தீக் - ம்... அப்டீன்னா என்மேல அவ்வளவு அன்பெண்ணு சொல்லுங்க.

கரீமா - அதில கூடச் சந்தேகமா? (இருவரும் சிரித்தல்) சரி... இந்தாங்க குடீங்க (கோப்பைச் சத்தம்)

சித்தீக் - கரீமா... யாரோ கேற்றடியில வாரது போலிருக்கே... கொஞ்சம் அந்த முன் லைட்டப் போட்டு விடுங்களன்.

கரீமா - ஓ... ஓ... நம்ம தம்பியார்தான் வாரார் போலிருக்கு.

சித்தீக் - ஆ... வாங்க... என்ன மச்சான் திடீர்னு இந்தப் பக்கம் ஞாபகம் வந்திருக்கு.

கரீமா - நம்ம தம்பி இருக்காரில்ல சும்மா வர மாட்டார்... ஏதாவதொரு காரியம் கருத்தில இருக்குமே.

ரஹீம் - ம்... இருந்திட்டு ஒருக்காத்தான் ஊருக்கே வாரன். அப்பிடி வந்தா ஏறி இறங்க இப்பிடி ரெண்டொரு இடங்கள் தானே இருக்கு... ஆ... எங்க ஜெஸீலாவக் காணல்ல... சிறாஜ் தான் இன்னும் ஓ.ஃபீஸ் விட்டு வந்திருக்க மாட்டானே...

கரீமா - ஆமா... ஜெஸீலா ஏதோ ஸ்கூல் வேலயா இருக்காள்... சிறாஜ் எட்டுமணிக்குத்தான் வந்து சேர்வான்.

ரஹீம் - ம்... காலமும் கண்ணுக்குத் தெரியாமப் போய்கிட்டிருக்கு. காலாகாலத்தில ஒரு நல்ல விஷயமாப் பாத்து ஜெஸீலாக்கு முடிச்சிப்போடுறதுதானே...

சித்தீக் - ம்... கரீமான்னா இன்னக்கிக்கூட அதுக்கு ரெடியாத்தானிருக்கா... நான்தான் கொஞ் சம் இழுத்துக்கிட்டிருக்கன்.. அவளுக் கென்ன இப்ப இருபது வருஷம்தானே.

கரீமா - (இழுத்தபடி) எதுக்கும் தம்பியிட்டயும் சொல்லத்தானே வேனும்... எங்கட மஹ்மூது லெப்ப இருக்காரில்ல. ...அவர்ர மகன் அன்ஸார் மாஸ்டரும் நம்ம ஜெஸீலா வும் ஒரே ஸ்கூல்தானே.

ரஹீம் - ம்.. இந்தக் காலத்தில அரசாங்க உத்தி யோகத்தரின்ற சம்பளம் எத்தின நாளக்கிப் போதும்? எண்ணிச் சுட்ட பலகாரமென்னு சொல்வாங்க.. ஒரு கையால எடுத்து மறு கையால கொடுக்கிறதோட சரி... ம்.. ஜெஸீலாக்கு என்ன குறைச்சல்... படிப்பா... அழகா.. ஆ... சும்மா கேக்கிறன்.

சித்தீக் - அது மாத்திரமில்ல பேங்க்கிலயும் கொஞ்சம் காசு போட்டு வெச்சிருக்காள்.. வீடும் காணியும் வேறயாருக்கு.. அவளுக்குத் தானே... தன்ர சம்பளத்திலயே நகநட்டும் செய்து வைத்திருக்காள்.. இனியென்ன...

கரீமா - அதோட அவள் குணம்... ஒழுக்கம்... ஆ..

ரஹீம் - அதனாலதான் சொல்றன்... ஒரு செப்புக் காசு செலவில்லாம காரியத்த முடிக்கலாம் (மெதுவாக) எனக்குத் தெரிந்த பெரிய பிஸ்னஸ்காரரொருவர் இருக்கார்... லட்சக் கணக்கில சம்பாதிக்கிறவர்... லட்சணமான ஒருத்திய... எதுவுமே எதிர்பார்க்காம கல்யா ணம் செய்யணுமென்னு கதையோட கதையா சொன்னார்.. எனக்கு ஒரே யடியா...

கரீமா - ஜெஸீலாட ஞாபகம்தான் வந்திருக்கு

மென்ன... நல்ல காலத்துக்கு நீங்க இருக்கிற நேரமாப் பாத்து...

ரஹீம் - இல்லயே... எத்தினபேர் இருந்தாங்க.. எல்லாருமே என்னப் போலயே யோசித் திருந்தா

கரீமா - நிச்சயமா..

ரஹீம் - அதனால கொஞ்சம் முந்திக் கொள்றது நல்லதுதானே...

கரீமா - என்ன சொல்லுங்களன்.

ரஹீம் - அன்னக்கி கொழும்புக்குப் போற வழியில நம்ம வீட்டுக்கு வந்தவர்.. அந்த நேரத்தில ஜெஸீலாவ கண்டு...

சித்தீக் - (இழுத்தபடி) என்ன இருந்தாலும்... எனக் கொரு சந்தேகம் மச்சான்... அழகக் கண்டு அதுக்காகவே விரும்பிறவங்க... காலப்போக் கில அந்த அழகு குறஞ்சிபோனா...

ரஹீம் - கைவிடுற ஆக்களும் இருக்கத்தான் செய்றாங்க. இல்லேன்னு சொல்லல்ல... ஆனா இவர எனக்கு நீண்ட காலமா தெரியுமில்ல.

கரீமா - என்ன இருந்தாலும் இந்தக் காலத்து பிள்ளைகளின்ற விஷயத்தில... அவங்க விருப்பத்த நாம தட்டிக்கழிக்க முடியாது பாருங்க.

ரஹீம் - எதுக்கும் கொஞ்சம் யோசித்துச் சொல் லுங்க. ...அப்ப நான் வாரன்.

இருவரும் - நல்லது போய் வாங்க (நேர இடைவெளி)

சித்தீக் - கரீமா இப்ப என்ன சொல்றது? ஒரே பிடியா

நிக்கிறாரே... மனிசன் எப்பிடியாவது நடத் தியே தீரவேண்டுமெண்டல்ல பாக்கிறார்.

கரீமா - ஜெஸீலா நல்லா இருந்தா அவருக்குக் கூட பெருமே.

சித்தீக் - ம் (பெருமூச்சு) நாங்களும் இவ்வளவு காலமா வாழ்ந்துகிட்டிருக்கிறம்... ஒரு நடுத்தரமான வாழ்க்க.. இப்படி ஒரேயடியா..

கரீமா - என்ன ஒரேயடியா.. எல்லாம் அல்லாட நாட்டந்தான்.. எல்லாரயும் எப்பவும் ஒரே மாதிரியா வைக்கிறான்!

சித்தீக் - ம்.. பணமென்ற உடனே நீங்களும் ஒரேயடியா தன்ன... மறந்து போயிட்டீங்க... அதுசரி ஜெஸீலா இதப்பத்தி ஏதும்..

கரீமா - அவளென்ன நாம சொல்றத தட்டவா போகிறாள்.

சித்தீக் - இது அவளுடைய வாழ்க்கப் பிரச்சின... நாம ஒரேயடியா முடிவுக்கு வரக்கூடாதில்ல.

கரீமா - அப்பிடீன்னா... சொல்லி விஷயத்த வெளங்க வைக்கிறதுதானே.. படித்த பிள்ள இல்லயா?

சிறாஜ் - (திடீரென்று) உம்மா... இதுக்கு நான் கொஞ்சம்கூட விருப்பமில்ல.. பணமென்ற உடன ஒரேயடியா வாயப் பிளக்கிறீங்க.. அவள்ர மனநிலைய பார்க்கணுமில்லயா?

சித்தீக் - என்ன சிறாஜ்.. வந்ததும் வராததுமா கோபத்தில துடிக்கிற... நாங்க இன்னும் எந்த முடிவுக்கும் வரல்லியே... உன்னோட ஒரு வார்த்த சொல்லாமலா முடிவு செய்யப் போறம்!

சிறாஜ் - புதிதாக எந்த முடிவுக்கும் வரவேண்டிய தில்லேன்னுளதான் சொல்கிறன்.

கரீமா - சிறாஜ்.. நாங்களும் அன்ஸார் மாஸ்டர் விஷயமா பேச்சு வார்த்தைக்கு போகத் தான் இருக்கிறம்.

சிறாஜ் - அதுக்கிடையில மாமா வந்து புகுந்திட் டாரென்னு சொல்லுங்க.

சித்தீக் - ரெண்டு பேரும் ஒரே இடத்தில வேல செய் றாங்க. அதனால பழகவேண்டிய வாய்ப்பு கள் இருக்கு.

சிறாஜ் - எதுக்கும் ஜெஸீலாவோட கதச்ச பிறகு தான் எந்த முடிவுக்கும் வாரது நல்லது.

கரீமா - ஆமா... அதுதான் சரி... அப்படியே செய்வமே.

சித்தீக் - ம்.. சரி சிறாஜ் நீயே கதச்சி சொல்லன்... இருந்தாலும் (இழுத்து) அவள் விரும்புறாள் என்றதுக்காக.. பணம், நகை, வீடெல்லாம் கொடுத்து கல்யாணம் செய்றதவிட... அவள விரும்பி வலியவார விஷயத்த.

கரீமா - எதுக்கும் நீயும் ஒருமுற மாமாவோட கதச்சிப்பாரன்.

சிறாஜ் - (திரும்பி) சரி கதைக்கிறன்.

கரீமா - (மெல்ல) தம்பியிட்ட போனானென்டா சும்மா திரும்பி வரமாட்டான்... அவர் ஆளுக்கேத்த மாதிரி கதைப்பார்... இவன்ர மனமும் அப்படியே மாறிப் போகும் பாருங்க.. யாருக்குத்தான் ஆசயில்ல... அல்லா அள் ளிக் கொடுக்கிற நேரத்தில.. அல்ஹம்து லில்லான்னு வாரி எடுத்துக்க வேண்டியது தானே (சிரிப்பு)

சித்தீக் - ம்.. (பெருமூச்சு) மனிசி இந்த உலகத்தில இல்ல... ம்...

## காட்சி — 3

பாத்திரங்கள் : சிறாஜ், ஜெஸீலா
இடம் : வீடு

சிராஜ் - ஜெஸீலா

ஜெஸீலா - ம் (மெதுவாக) என்ன...?

சிராஜ் - இந்த ஏற்பாடுகளப் பத்தி..

ஜெஸீலா - எந்த ஏற்பாடுகள்..?

சிராஜ் - உன்ற கல்யாண விஷயமா?

ஜெஸீலா - ம்.. அது நீங்களெல்லாம் பார்த்து செய்து வைக்க வேண்டிய விஷயமில்லயா? இதில நான் சொல்ல என்ன இருக்கு.

சிராஜ் - ஏன் இல்ல.. சொல்லவேண்டிய நேரத்தில சொல்லாட்டா.

ஜெஸீலா - ம்... ஆ... ஆட்சேபன இல்ல. இவ்வளவு தானே வேணும்?

சிராஜ் - என்னோட மனம்விட்டுக் கதைக்கலாந் தானே..

ஜெஸீலா - மனம் விட்டுத்தானே கதைக்கிறன்.

சிராஜ் - ம்... முகத்தப் பார்க்க தெரியுது.

ஜெஸீலா - எனக்கொரு நல்ல எதிர்காலத்த அமைக் கிறதில நீங்களெல்லாரும் யோசித்துத் தானே முடிவெடுத்திருப்பீங்க.

சிராஜ் - முடிவெடுக்கிறதுக்காகத்தான் இவ்வளவு கேக்கிறன்.

ஜெஸீலா - நான் எடுக்கிற முடிவு உங்களுக்கெல்லாம் பிரச்சின தரக்கூடியதா இருக்கக் கூடா தென்னுதானே எதிர்பார்க்கிறீங்க.

சிராஜ் - அப்பிடீன்னா.. எங்களுக்கு பிரச்சின தரக் கூடாதெங்கிறதுக்காக..

ஜெஸீலா - அப்பிடியில்ல.. எங்க விருப்பங்களும் ஆசை களும் எல்லா சந்தர்ப்பங்களிலயும்..

சிராஜ் - உண்மதான்.

ஜெஸீலா - நிறைவேறாமல் போனாலும் அதை சகித்துக் கொள்ள முடியுமென்னா சரிதான்.

சிராஜ் - முழுமனதோடதான் சொல்றதா.. இல்ல

ஜெஸீலா - பல நாட்களாகவே யோசித்து ஆறுதலா எடுத்த முடிவுதான் இது. என்னால எங்க குடும்பத்துக்கு ஏதாவது நன்ம ஏற்படு மென்னா... அது எனக்கு சந்தோஷந் தானே.

சிராஜ் - (பெருமூச்சு) இப்பதான் எனக்கு நிம்மதி... கொஞ்ச நாளா ஒரே குழப்பந்தான்... உம்மா வும் வாப்பாவும் ரொம்ப சந்தோஷப் படுவாங்க ஜெஸீ.

ஜெஸீலா - (மெல்லிய சிரிப்பு) (நேர இடைவெளி)

சிராஜ் - (தனக்குள்) மனசுக்குள்ள உறுத்தல் இருக் கத்தான் செய்யிது... நிலைமய யோசித்து நல்ல முடிவுக்கு வந்திருக்காள்... இனி யென்ன பிஸ்னஸ்கார மச்சான்... நானும் விசாரித்த அளவில லட்சலட்சமா சம்பாதிக் கிறவர்தானாம்... பிஸ்னஸ நடத்துறதுக்குக் கூட நம்பிக்கயான ஆக்கள் இல்லயாமே... நானும் சேர்ந்துக்கலாம் போலிருக்கு... காலப் போக்கில எனக்கும் சொகுசான வாழ்க்க...

## காட்சி — 4

பாத்திரங்கள் : கரீமா, ஜெஸீலா

(டக்.. டக்.. கதவில் தட்டல்)

கரீமா – ஜெஸீலா.. ஜெஸீலா எழும்புங்க.

ஜெஸீலா – (கொட்டாவி) ஆ.. வாரேம்மா

கரீமா – நேர காலத்தோடு குளிச்சிட்டு தயாராக வேணுமில்ல.

ஜெஸீலா – சரி வாரன் (தனக்குள்) ம்.. ஆறுமணி யாகிட்டு... இன்னக்கி பெண் பார்க்க வாறாங்களாமே... ம்... எங்கட சமுதாயத்தில சிலருக்கு மட்டுமே கிடைக்கிற பாக்கியம் எனக்கும் கிடச்சிருக்கு... சீதனம் எதுவுமே இல்லாம என்ன கல்யாணம் செய்துக்கப் போறாராம்... எப்போதோ மாமா வீட்டில இருக்கிறப்போ கண்டு விரும்பிட்டாராம்... ம்... (பெருமூச்சு) அன்ஸார் மாஸ்டர்... ம்... அதயெல்லாம் இப்ப நினைக்கிறதில எந்த அர்த்தமுமே இல்லயே

கரீமா – (வெளியே) ஜெஸீலா

ஜெஸீலா – சோம்பலா இருக்கும்மா... ஆ.. இதோ வந் திடுறேன். (தனக்குள்) நான் அழகா இருக் கிறதால எங்க குடுமபத்துக்கு எவ்வளவு லாபம்? இந்த மாமா மாத்திரம் இடையில குறுக்கிடாம இருந்திருந்தா... உம்மாவும் வாப்பாவும் யோசிச்சிட்டிருந்தது போல எல் லாம் ஒழுங்கா நடந்திருக்குமே... பண மென்னா பிணமும் வாய்திறக்குமாமே...

என்ன செய்ய (பெருமூச்சு) நாம நெனக்கிற துக்கும் அல்லா நெனக்கிறதுக்கும் வித்தியாசம் இல்லாமலிருந்தா...

கரீமா - (பலமாக) ஜெஸீலா... ஜெஸீலா...

ஜெஸீலா - ஆ... வந்திட்டன் (கதவு திறத்தல்)

கரீமா - என்ன பிள்ள... இப்பிடி உள்ள புகுந்துக்கிட்டிருந்தா... இன்னக்கி விசேஷமான நாளென்னு தெரியுந்தானே...

ஜெஸீலா - இன்னும் நேரமிருக்கு தானேம்மா... ஆக ஏழுமணி கூட ஆகல்ல... அதுக்குள்ள அவசரம் வேற.

கரீமா - பத்து மணிக்கு முன்னால நாம ரெடியா இருந்திட்டா நல்லதுதானே... வாரவங்க சில நேரம் வேளைக்கே வந்திட்டா.

ஜெஸீலா - வேற யாரு...? மாமி வீட்டாரும் சாச்சி வீட்டாரும் வருவாங்க.

கக - சரி சரி முதல்ல போய் குளிச்சிட்டு வாங்க.

## காட்சி — 5

பாத்திரங்கள் : ரஹீம், சித்தீக், கரீமா
இடம் : வீடு

ரஹீம் - என்ன மச்சான்... நேற்று மாப்பிள வீட்டாரோட அப்பிடியே போனது இந்தப் பக்கம் வரக்கிடைக்கல்ல.. எப்பிடி எல்லாம் திருப்திதானா?

சித்தீக் - ரொம்ப ரொம்பப் பெரிய ஆக்கள் போலிருக்கே.

ரஹீம் - பிறகென்ன... அதனாலதான் மச்சான்.. இவ்வளவு அவசரப்படுத்தினன்.

கரீமா - (வந்தபடி) அவங்க ஜெஸீலாக்கு போட்ட மால இதுதான்.. எப்பிடியும் மூனு பவுனுக்கு குறையாது.

ரஹீம் - தெரியுமே... மாலயே இப்படியிருந்தா... பிறகு சவடி... காப்பு.. மோதிரம்.. என்றெல்லாம் யோசித்துப் பாருங்க.

சித்தீக் - யோசிக்க என்ன இருக்கு மச்சான்... நஸீபுன்னு சொல்வாங்களே.. நாம நினச்சதா கதச்சதா ... அதுக்குள்ள இப்பிடி வந்து கைகூடிப்போச்சு.

கரீமா - எல்லாத்துக்கும் தம்பிக்குத்தான் நன்றி சொல்லணும்... எங்கட பிள்ளயப் பற்றி நாங்க யோசித்ததவிட நீங்கதானே...

ரஹீம் - எங்கட பிள்ளயும் உங்கட பிள்ளயும்... உன் வயிற்றில பொறந்தாலும் நம்ம பிள்ளதான்.

கரீமா - அதுக்காகச் சொல்லல்ல. என்னதானிருந்தாலும் தெரியாதா... கூடப் பிறந்தவங்ககூட இப்படியான சந்தர்ப்பங்களில போட்டி பொறாமயா இருப்பாங்க.

சித்தீக் - எல்லாம் ஜெஸீலாட நல்ல காலத்துக்குத்தான்.

ரஹீம் - அவங்க காரப் பாத்தீங்களா.. ஜப்பானிலிருந்து கொண்டுவந்து ஒரு கிழமகூட ஆகல்ல.

கரீமா - மாப்பிளேட உம்மா தங்கச் செல்லாம் வந்திருந்தாங்க... பழகாத ஆக்களென்டா லும் சந்தோஷமா சிரிச்சிக் கதச்சாங்க.. நம்ம ஊரில கொஞ்ச பணம் வெச்சிருக்கிறவங் களே எவ்வளவு கூத்துப் போடுறாங்க...

சித்தீக் - அதிருக்கட்டும்... எங்களயும் வரச் சொல் லிட்டு போயிருக்காங்க எப்ப போற தென்னு...

ரஹீம் - போகத்தானே வேணும்... கூடிப்பேசி ஒரு தீர்மானத்துக்கு வரவேணுமில்ல.

கரீமா - ம்... மச்சானும் மச்சானும் சேந்து திடீ ரென்னு புறப்படாம நேரகாலத்தோட சொல்லுங்க.. பலகாரங்கள் கொஞ்சம் தயார் பண்ணிக்கணும்...

சித்தீக் - ம்... ஊர் வழக்கங்கள கண்டிப்பா செய்தா கணும்.

ரஹீம் - நான் நாளக்கி கொழும்புக்குப் போறன் தானே... ஒரு ஏற்பாடு பண்ணிட்டு வாரன்... மாப்பிள்ள இன்னொரு யோசினயோ டிருக்கார்.

கரீமா - அதென்ன விஷயம்..?

ரஹீம் - அங்கும் இங்குமா ஓடித்திரிய முடியுமான்னு கேக்கிறன்... கல்யாணத்துக்கு முன்னால கொழும்பிலேயே ஒரு வீடு வாங்க யோசிக் கிறார்.

கரீமா - ஆ.. அப்பிடியா... அல்லாதான் எல்லாம் ஹைறாக்கி வெய்க்கணும்.

ரஹீம் - ம்... பின்ன மச்சானும் தாத்தாவும் கொழும்பு மனிசராவீங்க போலிருக்கு (சிரிப்பு) இன்

னொரு விஷயம்... இந்த டீச்சர் வேலயெல் லாம் அவருக்கு பிடிக்காது பாருங்க... ஒரு நாளக்கி லட்சக்கணக்கில சம்பாதிக்கிற வருக்கு இந்த ரெண்டு மூவாயிரம்... (சிரிப்பு)

சித்தீக் - ம்... அதெல்லாம் அவங்க விருப்பம்.. நாம சொல்றதுக்கொன்னுமில்லயே.

## காட்சி — 6

பாத்திரங்கள் : சித்தீக், கரீமா, ரஹீம், சிறாஜ்
இடம் : வீடு

(கல்யாண வீட்டின் கலகலப்பு... துள்ளிசை)

சித்தீக் - அஸ்ஸலாமு அலைக்கும்... ஆ.. வாங்க வாங்க.. அப்பிடியே உள்ள போங்க.

கரீமா - ஆ... வாங்க... எல்லாரும் இருங்கொ... கொஞ்சம் இடம் விடுங்க.. (துள்ளிசை.. கலகலப்பு)

ரஹீம் - சிறாஜ்.. சிறாஜ்... மாப்பிள வார நேரமாயிட்டு.. அங்க கூட்டாளிமாரோட நேரத்தப் போக்காம... எல்லா ஏற்பாடுகளயும் கவனிக்கவும்...

சிறாஜ் - சரி சரி மாமா நீங்க முன்னால போங்க... ஆக்களெல்லாம் வந்துகொண்டிருக்காங்க... (கலகலப்பு - துள்ளிசை) ஆ... நம்ம ஒ.ஃபீஸ் ஆக்களெல்லாம் வாறாங்க.. ஆ.. ஹலோ

சித்தீக் - வாங்க பிரின்ஸிபல் ஸேர் வாங்க... உங்களிட்ட படித்த பிள்ள இல்லியா... ஆ.. ஸாலி ஸேர்... ஸறூக் ஸேர்... எல்லாரும் உள்ள வாங்க... (கலகலப்பு - துள்ளிசை)

ரஹீம் - இங்க மச்சான்... வரவர சனம் கூடிக் கிட்டிருக்கு... முதல்ல ஊர் மக்களுக்கு சாப்பாட்ட வெச்சிட்டா நல்லது.. அப்பதான் மாப்பிள்ள வீட்டு சனத்த ஒழுங்கா கவனிக் கலாம்.

சித்தீக் - நல்ல யோசன அப்பிடியே செய்வம்.. அப்ப நான் உள்ள கொஞ்சம் அவசரப்படுத்திறன்.

ரஹீம் - சரிசரி சீக்கிரமா (நேர இடைவெளி)

சித்தீக் - (மெதுவாக) என்ன மச்சான் நேரம் ஓடிக்கிட்டிருக்கு... இன்னும் மாப்பிள வரக் காணமே...

ரஹீம் - சும்மவா எவ்வளவு தூரம்... புக் பண்ணி யிருக்கிற வாகனங்கள் வந்து சேரவே ஒரு நேரமெடுக்கும் ஆ இடையில ஏதும் புளக்கோ தெரியல்ல.

கரீமா - (கலக்கத்தோடு) என்ன இது... எல்லாரும் கூடிக் கூடிக் கதைக்கிறாங்க... ஒருக்கா நீங்களும்...

ரஹீம் - கொஞ்சம் ஸபூர் பண்ணுங்க... அவசரப்பட வேணாம்... சிறாஜ காரில அனுப்பியிருக் கன்... அப்பிடியேதும் தாமதமென்னா தகவல் வரும்.. (பூரண அமைதி - கொட்டாவி)

கரீமா - (பயத்தோடு) எனக்கென்னா என்னவோ போலிருக்கு... ஒன்னுமே விளங்கல்ல... இப்ப பதினொரு மணியாயிருச்சே... எட்டு

மணிக்கில்லயா இங்க வாரதா சொன்னாங்க... சனங்கள் அங்குமிங்குமாப் போய்க் கொண்டிருக்காங்க.. ஏதாவது..

சித்தீக் - அப்பிடியொன்னமிருக்காது... நம்ம ஆக்கள தெரியுந்தானே... வெள்ளக்காரனப்போல நேரத்துக்கா எல்லாம் செய்றாங்க... எதுக்கும் சிறாஜ அனுப்பியிருக்கோம் தானே (நேர இடை) ஆ... அங்க காரொன்னு வருதுபோலிருக்கு.

கரீமா - ஒரேயொரு கார்தானே...

ரஹீம் - அப்ப நம்ம சிறாஜ் போன கார்தான் போல... (கார் வந்து நிற்றல்)

சித்தீக் - (தடுமாற்றம்) என்ன.. என்னவாம் சுணக்கம்?

சிறாஜ் - ஆ... வந்து வந்து (தடுமாற்றம்) (பல பேச்சுக் குரல்கள்.. கலகலப்பு)

ரஹீம் - (கோபமாக) சும்மா தடுமாறாம சொல்லித் தொலையன்.

சிறாஜ் - (வெறுப்போடு) ம்... மாப்பிள பெரிய பிஸ்னஸ்காரனில்லயா.. லட்சக் கணக்கான சாமான்களோட.. திடீரென்னு இன்னக்கி மாலையில கஸ்டம்ஸால வந்து பிடிச்சிட்டுப் போயிட்டாங்களாம்.

# மயக்கங்கள்

## காட்சி — 1

பாத்திரங்கள் : நூர்தீன், மஸீனா, ரியாஸ், கரீமா, தாஸிம்
இடம் : வீடு

நூர்தீன் – அப்பாடா (பெருமூச்சு) இன்னும் ஒரே யொரு நாள்... ம்.. அதுக்குள்ள எல்லா ஏற்பாடுகளயும் செய்யவேண்டியிருக்கு... நினைக்கவே அதிசயம்... எத்தனயோ பேர் பணத்த கட்டிட்டு வருஷக்கணக்கா அலையிறாங்க. எனக்கென்னா அல்லாட கிருபயால ஒரே வாரத்தில காரியம் கைகூடிட்டுது.

மஸீனா – (மெதுவாக) தம்பி நூர்தீன்

நூர்தீன் – ஆ.. மஸீன தாத்தவா வாங்க.. நானும் வீட்டுப்பக்கம் வரன்னுதான் இருந்தன்.. அதுக்குள்ள...

மஸீனா - கேள்விப்பட்டதும் ஓடோடி வந்திட்டன்.. ம்.. ரெண்டு வருஷத்துக்கு எப்பிடித்தம்பி உன்னக் காணாம இருக்கமுடியும்... அத நினைக்கும் போதுதான்...

நூர்தீன் - (சிரிப்பு) இந்தக் காலத்தில கண்ண மூடித்திறக்கிறதுக்குள்ள ரெண்டு வருஷம் பறந்திடும்.

மஸீனா - அதுசரி நாளக்கி எயா்.போட்டுக்கு போறதுக்கு...

நூர்தீன் - ஒன்னும் தேவயில்ல தாத்தா... பஸ்ஸில ஏறினா ரெண்டு மணித்தியாலத்தில போய்ச் சேர்ந்திடலாம் தானே...

மஸீனா - அதெல்லாம் முடியாது... கூட்டம் குடும்பமா எல்லாருமாப் போய் வழியனுப்பினால்தான் பாக்கிறவங்களுக்கும் பஸிந்தா இருக்கும்...

நூர்தீன் - சும்மா ஒரு வீண்செலவு பாருங்கொ

மஸீனா - அதுக்கெல்லாம் நீ கவலப்படாதே.. என்ற கணக்கில எல்லாம் செய்றன்.. சரி தானே... கேள்விப்பட்டதுமே மச்சான் சொல்லிட்டார்.

நூர்தீன் - எப்பிடியும் ஒரு..

மஸீனா - எவ்வளவு வந்தாலும் பரவாயில்ல நான் முடிவு பண்ணிட்டன்.. நீ மற்ற விஷயங்களக் கவனி... சரி (திரும்பி) நான் உள்ள நிக்கிறன்

நூர்தீன் - (தனக்குள்) அன்னக்கி ஏஜன்ஸிக்கு பணம் தேவப்பட்டு போய்க் கேட்டபோது..

## -முன்நினைவு -

மஸீனா - என்ன நூர்தீன் முகமெல்லாம் வாடிப் போயிருக்கு...

நூர்தீன் - ஒன்னுமில்ல தாத்தா.. அவசரமா கொஞ்சப் பணம்..

மஸீனா - அப்டீன்னா..

நூர்தீன் - (தயங்கி) வெளிநாட்டுக்கு போற விஷயமா ஒரு முயற்சி

மஸீனா - பதினஞ்சி இருபதென்னு கேப்பாங்களே..

நூர்தீன் - இல்ல தாத்தா... ஒரு பத்து இருந்தா சமாளிச்சிக்கலாம். முடியுமாயிருந்தா..

மஸீனா - ம்... பத்தாயிரமென்னா லேசா... ம்.. கைல மடீல இருந்தா சகோதரத்துக்கு உதவாம வேற யாருக்கு உதவுகிறது.. ம்.. (யோசித்து) ஒரு வழியிருக்கு தம்பி...

நூர்தீன் - (மகிழ்ந்து) அப்படியா சொல்லுங்க... நான் போனதும் முதல் வேலையா உங்க பணத்த அனுப்பிடுறன்.

மஸீனா - இங்க பாரு... உனக்கிப்ப கல்யாணம் கட்டிற வயஸு... பல இடங்களாலயும் பேசிப் பேசி வாறாங்க.. அதில நல்ல விஷயமாப் பாத்து...

நூர்தீன் - கல்யாணம் செய்து மனைவிய இங்க விட் டிட்டு எனக்கு வெளிநாடு போகச் சொல்றீங் களா..

மஸீனா - இல்ல நூர்தீன்... என்னத்துக்கு அவசரம்... ரெஜிஸ்ரேஷன் பண்ணி பணத்த எடுக்கி றது... அந்தப்...

நூர்தீன் - இங்க இங்க இதெல்லம் நடக்கிற விஷயமா தாத்தா... இதப் பேசிறதில ஒருவிதமான அர்த்தமுமில்ல (திரும்பி) நான் வேறேதும் வழியப் பாக்கிறன்.

மஸீனா - (தனக்குள்) ம்... பத்தாயிரம் கொடுக்கலாந் தான்... ஏஜென்ஸிக்காரன் அனுப்புவானா இல்லயா... யாருக்குத் தெரியும்.. பணத்தக் கட்டிட்டு ஊர்சுத்தத் தொடங்கிட்டா னென்னா.. அப்புறம் என்னசெய்றது...

- நினைவு நிறைவு -

நூர்தீன் - (நையாண்டிச் சிரிப்பு) அன்னக்கி அப்பிடிச் சொன்ன மஸீன தாத்தாதான் இன்னக்கி எவ்வளவு அக்கறையா இயங்கிறா.. வேன் பிடித்து எல்லோரயும் கூட்டி வழியனுப்பி எனக்கு ஐஸ் வைக்கப் பாக்கிறா... (சிரிப்பு)

ரியாஸ் - ஆ.. நூர்தீன் என்னடாப்பா..

நூர்தீன் - வாங்க ரியாஸ் நானா.

ரியாஸ் - ஒன்னும் ஏற்பாடு செய்யக்கூட நேரம் காணாதே.

நூர்தீன் - அப்பிடி என்னதான் ஏற்பாடு.. உடுப்பு சாமான்களோட பெட்டியத் தூக்கிறது தானே...

ரியாஸ் - நல்ல நேரம் ஞாபகம் வந்தது... பொட்டி கிட்டியெல்லம் வாங்கிக் கடன் படாதே... நான் சிங்கப்பூருக்கு போனப்போ கொண்டு வந்த சூட்கேஸிருக்கு

நூர்தீன் - அதெல்லம் என்னத்துக்கு நானா...

ரியாஸ் - இல்ல.. நமக்குப் பக்கத்திலயா வெச்சிக்கப் போறம்.. லகேஜ் பண்றதால பாதுகாப்பா இருக்கணுமே... அதோட பாஸ் போட், டிக்கட்டெல்லாம் வைத்துக் கொள்ள கைப்பையும் என்னிட்ட இருக்கு.

நூர்தீன் - இதெல்லாம் எனக்குத் தந்திட்டா நீங்க வேறயா வாங்க வேண்டியிருக்குமே.

ரியாஸ் - இப்பிடியெல்லாம் பாக்க முடியுமா தம்பி (மெதுவாக) அதோட உடுப்புக்கள் வேணு மென்னாலும் வந்து பாத்து எடுத்துக்க. (திரும்பி) சரி... அங்கால போயிட்டு வாரன்.

நூர்தீன் - (சிரிப்பு) ம்... நானாக்கு என்மேல எவ்வளவு அன்பு... ம்.. அன்னக்கி..

## - முன்நினைவு -

ரியாஸ் - நூர்தீன்.. பத்தாயிரமென்னா வேசான தொகையில்ல. யாரிட்ட எடுத்தாலும் கடன் தானே... ம்... கடனுக்கு காசு வாங்கி ஒரு நல்ல நோக்கத்துக்காகப் போறது அவ்வளவு பரக்கத்தா இருக்குமென்னு நான் நம்பல்ல.

நூர்தீன் - வேற என்னதான் செய்றது நானா.. நீங்க எப்பிடியாவது ஒழுங்கு பண்ணித் தருவீங் கென்னா நான் போனதும் முதல் வேலயா..

ரியாஸ் - அனுப்பாட்டியும் பிரச்சினயில்ல.. ம்... என்னிட்ட இருந்ததெல்லாம் பிஸ்னஸில புளொக்காயிட்டுது.. யாரிட்டயும் மாறித் தான் தரவேணும்.. எதுக்கும்...

நூர்தீன் - சொல்லுங்க நானா..

ரியாஸ் - (செருமி) ம்.. எங்க ரெண்டு பேருக்குமா வாப்பா எழுதின காணி இருக்கில்லயா.. அத என்ற பேருக்கே எழுதித்தாவன்.. ம்.. அப்புறம் வந்த பிறகு திருப்பிக்கலாம்... ம்..

நூர்தீன் - எனக்கென்னு இருக்கிறதே அது ஒன்னு தான்.. (பெருமூச்சு) ம்... (திரும்பி) நான் ஏதும் வேற வழியப் பாக்கிறன்..

ரியாஸ் - (தனக்குள்) ம்... காசும் தேவ காணியும்

தேவ.. ஆ.. தம்பிதான் இருந்தாலும் கவனமா இருக்கிறது நல்லதுதானே..

- நினைவு நிறைவு -

நூர்தீன் - (ஏளனச் சிரிப்பு) அன்னக்கி என்ன நம்பிக்கையில்ல... காணி பூமியென்றெல் லாம் சொன்னவர்... ம்.. இன்னக்கி சூட் கேஸ்... உடுப்பெல்லாம் தர வந்திருக்கார் (சிரிப்பு)

கரீமா - நானா... என்ன இவ்வளவு பெரிய யோசின...

நூர்தீன் - ஆ தங்கச்சா வாவா... வீட்டுப்பக்கம் வரத் தான் யோசிச்சிட்டிருந்தன்.

கரீமா - அப்பிடியா... இரவைக்கு எல்லாருமா வந்திட்டீங்கென்னா சரி.

நூர்தீன் - கரீமா என்ன சொல்றீங்க?

கரீமா - சாப்பாட்டுக்கு சொல்றன்... கையோட சாமானெல்லாம் எடுத்தனுப்பிட்டன்.. ஹஸ்ரத்துக்கும் லெப்பைக்கும் சொல்ற துக்கு மச்சான் போயிட்டார்.

நூர்தீன் - அனாவசியமான வேலயில்லயா..

கரீமா - என்ன சொன்னீங்க... வீடுகளுக்கு வேலைக்குப் போறதுகளே ஊரக்கூட்டி சாப்பாடு போடுறாங்க. ..இப்பிடியொன்னு செய்யாட்டா நம்ம யாரு கணக்கெடுக்கப் போறாங்க.

நூர்தீன் - எல்லாரும் செய்றதுக்காக நாங்களுமா...

கரீமா - ஏன் செய்யக்கூடாதென்னு கேக்கிறன்... (திரும்பி) சரி சொல்லிட்டன்.

நூர்தீன் - (சிரிப்பு) விந்தையான உறவும் உலகமு மப்பா... ம்... இன்னக்கிப்போல எனக்கு ஞாபகம்...

-முன்நினைவு -

கரீமா - ம்.. உங்களுக்கு செய்யாத உதவியா நானா.. என்னிட்ட இருந்தா இந்த நிமிஷமே..

நூர்தீன் - தந்திருவீங்க.. உண்மதான். உங்களிட்ட எங்க இருக்கப் போகுது. மச்சான்ட காதில போடுங்களன்.

கரீமா - எப்படிச் சொல்றது.. இந்த நாளயில யாவாரம் ரொம்ப மோசம்.. அதெல்லாம் தெரிந்துகொண்டு எப்பிடிக் கேக்க முடியும்.

நூர்தீன் - ம்... இங்கயும் அதே கததான் (திரும்பி) சரி வாரன்

கரீமா - (தனக்குள்) பத்தாயிரம்.. மச்சானிட்டச் சொல்லி எடுத்துக் கொடுக்கலாம்... அப்புறம் திருப்பிக் கிடைக்கவா போகுது...

-நினைவு நிறைவு -

நூர்தீன் - (சிரிப்பு) அன்னக்கி கஷ்டம்... இன்னக்கி சாப்பாடு.. (மீண்டும் சிரிப்பு) இதெல்லாம் நெனச்சிப் பாக்கிறப்போ அழுவதா சிரிப் பதான்னு தெரியல்ல.. யார் யாரிட்ட வாய் திறந்து கைநீட்ட முடியுமோ... அவங்க எல் லாரிட்டயும் ஏமாற்றத்த சுமந்து கொண்டு வந்து.. வெளிநாட்டு யோசினய மனதால கிள்ளிக் கொண்டிருந்த வேளையில்தான்...

## - முன்நினைவு -

தாஸிம் - என்ன மசான்... தொழுதிட்டு வாரியா..

நூர்தீன் - ஆமா தாஸிம் சுகமா இருக்கிறியா?

தாஸிம் - இருக்கிறன்... ஏதோ வெளிநாட்டுக்கு போறதாக

நூர்தீன் - சும்மாவா அனுப்புறாங்க.. ஆயிரமாக் கொடுக்கணுமே

தாஸிம் - உனக்கென்னடாப்பா.. மச்சான்மாரெல்லம் இருக்காங்க... லட்சக்கணக்கிலயென்டாலும்...

நூர்தீன் - (சிரிப்பு) எல்லாரிட்டயும் கைநீட்டிட்டுத் தான் இப்படி இருக்கிறன்.

தாஸிம் - (வியப்போடு) உண்மையாகவா?

நூர்தீன் - வேறென்ன..

தாஸிம் - சரி நீ என்னிட்ட வாய் திறக்கல்லியே..

நூர்தீன் - தாஸிம் நீ என்னடாப்பா சொல்றாய்...

தாஸிம் - இவ்வளவு நட்பாக இருந்தும் என்னிட்ட ஒரு வார்த்த.

நூர்தீன் - என்ன பதில் சொல்வேன்னு எனக்குப் புரியல்ல.

தாஸிம் - சரிசரி வா வீட்டுக்கு.. நட்ப பலப்படுத்திக் கொள்ள இதுதானே சந்தர்ப்பம்..

## - நினைவு நிறைவு -

நூர்தீன் - (சிரிப்பு) உறவுகளெல்லாம் கைவிரித்து விட்ட போது அந்த நட்புத்தான் என்னை வீடுவரை அழைத்துச்சென்று... பத்தாயிரம் ரூபாவை மொத்தமாகத் தந்தது.. அல்ஹம்துலில்லா... ஆ... நேரம் போய்க் கிட்டிருக்கு.. இப்பொழுதெல்லாம் தாஸிம்

வந்திருப்பார்... போய்ச் சந்திக்க வேண்டும்... (திரும்பி) நான் வெளிய போயிட்டுவாரன். (நேர இடைவெளி)

கரீமா - தாத்தா.. இவ்வளவு சீக்கிரமா சவூதி போறதுக்கு கிடைக்குமென்றிருந்தா பத்தா யிரம் ரூபா எப்பிடியாவது கொடுத் திருப்பன்.

மஸீனா - அதத்தான் மஸீனா நானும் கூட யோசிக் கிறன்.

கரீமா - கூடப் பொறந்தவங்க யாரும் உதவி செய் யல்ல... ஊரான்தான் உதவிட்டதென்னு இப்ப கதக்கப்போறாங்க.

மஸீனா - வேறென்ன கதைப்பாங்க.

கரீமா - ம்... அந்த தாஸீமும் லேசுப்பட்டவனில்ல... ஏதாவது நோக்கத்தோடதான்.

மஸீனா - அதத்தான் கரீமா நானும் நெனச்சன்..ம்..

கரீமா - ம்.. ம்... இவன் போய் மாட்டிக்கிட்டான் போலத்தான் தெரியுது.

மஸீனா - இல்லேன்னா இப்பிடி பத்தாயிரத்த யார் தான் தூக்கி கொடுக்கப் போறாங்க.

ரியாஸ் - (வந்தபடி) என்ன என்ன தாத்தாவும் தங்கச்சியும் பெரிய கதையா இருக்கே.

மஸீனா - ஆ... வாங்க வாங்க நானா.. தம்பியிட விஷயந்தான்.

ரியாஸ் - ஓ.. வழியனுப்புற ஏற்பாடுகளா... இல்ல...

கரீமா - என்ன நீங்க அப்பிடி ஒரு மாதிரியா இழுக்கிறீங்க.

ரியாஸ் - அதாவது வந்து (தடுமாற்றம்) பலமாதிரியா ஊருக்குள்ள...

மஸீனா - அப்பிடியா.. நாங்க நெனச்சதும் சரிதான் போல கரீமா...

ரியாஸ் - நீங்க நெனச்சதென்னா...

கரீமா - இல்ல.. வந்து.. ஒன்னுமில்ல...

ரியாஸ் - சரிசரி நானே சொல்றன்... நம்ம நூர்தீன் கொஞ்சகாலமா அங்க போறவாரதாம்... தாஸீமும் ஏதோ மனதில வைத்துக் கொண்டுதானாம் உதவி செய்திருக்காம்... வந்து அவங்க தங்கச்சிய...

கரீமா - அல்லாவே.. (உணர்ச்சிவசமாக) இதுக் கெல்லாம் இடம் கொடுக்க முடியுமா.. ஆ... யாருமில்லாத அனாதயா... எங்களோட ஒரு வார்த்த...

மஸீனா - விடப்படாது... இதவிட நல்ல இடத்திலெல் லாம்...

ரியாஸ் - சரிசரி பொறுமயா இருங்க.. நாளக்கி அவன் போகப்போறான் சந்தோஷமா அனுப்புவம்.. அப்புறம் ரெண்டு வருஷத்துக் குப் பின்னாலதானே மற்றதெல்லாம்... இந்த விஷயத்தில யார் விட்டுக் கொடுத்தாலும் நான் விடமாட்டன்..

கரீமா - (பதட்டமாக) என்ன இருந்தாலும் அவளிட்ட நாலு கேள்வி கேக்காம விடக்கூடாது.

மஸீனா - ஆமா ஆமா மாப்பிள பிடிக்கிற லட்சணம் இது. ஒழுங்கான மனிதனென்னா இப்பிடி யெல்லாம் செய்வாங்களா ஆ..

ரியாஸ் - ம்.. சந்தர்ப்பம் வரும் அப்ப பார்த்துக் கொள் ளுவம். இப்ப செய்ய வேண்டிய ஏற்பாடுகள கவனிங்க.

## காட்சி — 2

பாத்திரங்கள் : நூர்தீன், மஸீனா, ரியாஸ், கரீமா
இடம் : வீடு

நூர்தீன் - அப்பாடா சவூதிக்கு வந்து மூனு மாதங்கள் உருண்டு போயிட்டு.. இனிமேல் ஒரு பிரச்சினயுமில்ல.. எல்லாம் பழகியாச்சு... என்ன இருந்தாலும் ஊர்போல சரிவருமா... அடடா நாலு கடிதங்கள் வந்திருக்கு... இந்தக் கடிதங்கள்தானே எங்கட ஒரே எதிர்பார்ப்பு. மஸீனா தாத்தாட கடிதம்தான் கனமாயிருக்கு... அதத்தான் முதல்ல பார்க்கணும்.. (பிரித்தல்)

மஸீனா - அன்புள்ள தம்பி அறிய... கடிதங்கள் கிடைத்தன. எல்லோரும் சுகமாக இருக்கிறோம். உன்னைக் காணாமல் கண்கள் பூத்துவிட்டன. எப்பொழுதும் உனது நினைவிலேயே இருக்கிறேன். நீ விருப்பத்தோடு சாப்பிடும் உணவுகளை இங்கே காணும் போதெல்லாம் அனேகமாக நான் சாப்பிடாமலேயே எழுந்து விடுகிறேன். வேளைக்குச் சாப்பிடு, உடம்பைக் கவனித்துக்கொள். அத்தோடு சம்பளத்தை வீணாக்காமல் எனது பெயருக்கு அனுப்பிவைத்தால் நான் சேமித்துவைப்பேன். நீ இங்கு வந்ததும் பிரயோசனமாக ஏதாவது தொழில் செய்ய உதவுமல்லவா? நீ கஷ்டப்பட்டு உழைக்கும் பணம் வீண்போகக்கூடாது என்பதால்தான் இப்படிச் சொல்கிறேன். மறக்காமல் பதில் போடு - அன்பின் சகோதரி மஸீனா.

நூர்தீன் - (சிரிப்பு) தாத்தாவுக்குத்தான் எவ்வளவு இரக்கம். எனது பணத்தைப் பாதுகாப்பதில் எவ்வளவு அக்கறை (சிரிப்பு) ம்.. அடுத்த கடிதம் நானா என்ன எழுதியிருக்கிறாரோ (பிரித்தல்)

ரியாஸ் - அன்புள்ள தம்பி... கடிதம் கிடைத்தது. சுகமாக இருக்கிறோம். முக்கியமான ஒரு விடயம். உனக்குத் தெரியுந்தானே எனது வியாபாரம் இப்பொழுது படிப்படியாக முன்னேறி வருகிறது. முதலீடு எவ்வளவோ அந்தளவுக்கு சம்பாதிக்கலாம். உனது சம்பளப் பணத்தை மாதாந்தம் எனக்கனுப்பினால் வியாபாரத்தில் முதலீடு செய்யலாம். நீ வந்ததும் லாபப் பங்கையும் சேர்த்து தந்து விடலாம். நீ அங்கே உழைத்துக் கொண்டிருக்கும் போது, உனது பணம் இங்கே உழைத்துக் கொண்டிருக்குமல்லவா? பதில் போடு. அன்புள்ள சகோதரன் ரியாஸ்.

நூர்தீன் - (சிரிப்பு) அன்னக்கி காணிய எழுதாம காசு தரமறுத்தார்.. ம்.. இன்னக்கி பிஸ்னஸுக்கு என் பணம் தேவப்படுது. (சிரிப்பு) சரி.. கரீமா என்னதான் எழுதியிருக்காளோ தெரியல்ல (பிரித்தல்)

கரீமா - அன்பு மறவா நானா.. சுகமாயுள்ளோம். மாமா எப்போது கலர்டீவீ கொண்டு வருவார் என்று மகள் அடிக்கடி கேட்கி றாள். வரும்போது கொண்டுவந்து தருவாரென்று சொல்லிக் கொண்டிருக்கிறேன். வேலை லேசாக அமைந்தது மகிழ்ச்சி. மற்றும் மச்சானின் வியாபாரம் பெரிதும் பாதிக்கப் பட்டு விட்டது. பெரிதும் கஷ்டத்துக்குள்

ளாகிவிட்டார். ஏதாவது உதவிசெய்தால் நல்லது – அன்புத் தங்கை கரீமா.

நூர்தீன் – (சிரிப்பு) ம்... எல்லோருக்கும் இப்ப என்னில தான் கண்ணில்லயா... எல்லோருக்குமே நான் நெறைய நெறைய உதவி செய்திருக்கன்... ஆனா எனக்கு உதவி தேவைப் பட்ட நேரத்தில... (பெருமூச்சு) இனி மேலும் உதவிசெய்வன்... எப்போது யார்யாருக்கு செய்யணுமென்னு எனக்குத் தெரியும். சரிசரி... தாஸிம்ற கடிதமும் கிடக்கு (பிரித்தல்)

தாஸிம் – அன்பின் நண்பா... உனது எதிர்கால முன்னேற்றத்தை மையமாக வைத்துத் தானே சவூதிக்குச் சென்றாய். அங்கு நீ உழைக்கும் ஒவ்வொரு சதமும் உனது வியர்வையின் பிரதிபலிப்பு. இங்கிருந்து சென்ற பலர் ஆடம்பர நாட்டத்தில் தங்களை அழித்துக் கொள்கின்றனர். உனது உழைப்பின் ஒரு துளியையும் வீணாக்காதே. வங்கிக் கணக்கொன்றை ஆரம்பித்து சேமிப்பை மேற் கொள். நண்பன் தாஸிம்

நூர்தீன் – (பெருமூச்சு) வீதியில நின்றவன வீட்டுக் கழைத்து உதவினான். உழைப்பை பாதுகாக்கும்படி புத்திவேறு சொல்கிறான். நட்பின் வலிமையை ஒவ்வொரு கணமும் உணர்த்திக் கொண்டிருக்கிறான். யா அல்லா.. இந்தப் புனித மண்ணில் நின்று கேட்கிறேன் அவனுக்கு வாழ்வையும் வளத்தையும் கொடுத்தருள்வாயாக.

## காட்சி — 3

பாத்திரங்கள் : கரீமா, மஸீனா ரியாஸ் தாஸிம்
இடம் : வீடு

கரீமா - நானா போய் ஆறு மாதமாகுது. உங்கட அல்லது நானாட பேருக்குத்தான் பணம் அனுப்புறாரென்னு நெனச்சிருந்தன்.. ஆனா...

மஸீனா - நானும் அப்பிடித்தானே.. கரீமாக்கு இல்லேன்னா நானாக்கென்னு நெனச்சன்.

கரீமா - ம்.. எனக்குமில்ல உங்களுக்குமில்ல... நானாக்கும் இல்லபோலத்தான் தெரியுது.

மஸீனா - அனுப்பினா நானா சொல்லாமலிருப்பாரா என்ன..

கரீமா - கொஞ்சம் பொறுங்களன்.. இப்ப நானா வருவார்தானே...

மஸீனா - எல்லாம் அந்த தாஸிம் போட்டிருக்கிற திட்டம்தான். பொறவிகளவிட ஊரான் பெரிசாப் போயிட்டு.

மஸீனா - தாஸிம்மும் அவன் தங்கச்சியும் நல்லாத் தான் வளச்சிப் போட்டிருக்காங்க... ஒரு வேள அவங்களுக்குத்தான்...

கரீமா - அப்பிடித்தான் நானும் நெனக்கிறன்.

மஸீனா - (கோபமாக) விடக்கூடாது... கள்ளக் கல்யா ணம் பேசிக்கொண்டு காசெல்லாம் கைக் காக்கிறதென்னா...

கரீமா - நல்ல மனிசங்க இப்பிடி வேல பார்ப்பாங்களான்னு கேக்கிறன்.

மஸீனா - (கோபமாக) அன்னக்கே நாலு கேள்வி கேட்டிருக்கணும்... கேட்டிருந்தா இப்பிடி யொன்னும் நடந்திருக்காது. நானாதான் சந்தர்ப்பம் வரட்டுமென்னு எங்கள விடல்ல.

ரியாஸ் - (வந்தபடி) ஆ... என்ன பெரிய சத்தமா இருக்கே..

கரீமா - ஆமா உங்க தம்பியின்ற விஷயந்தான்.

ரியாஸ் - பாருங்க ஆறுமாதமாகுது. யாருக்குமே ஒரு அரைக்காசு கூட அனுப்பல்லியே...

மஸீனா - ஓ.. நூர்தீனுக்கு தாஸிமும் அவன்ற தங்கச் சியும் தான் பெரிதாப் போயிருக்கு... எங்கள நம்பிக்கயில்லயே.

ரியாஸ் - அதுதானே பார்த்தன். கொஞ்சநாளா தாஸிம் வீடு ஒரே கலகலப்பாத்தானிருக்கு... முன்பின்னெல்லாம் உடச்சிக் கட்டுறாங்க.. பெயின்ட பண்றாங்க... ஆ.. இப்பதானே விஷயம் வெளங்கிது.

கரீமா - ஓ.. பேங்க்லயும் அடிக்கடி காண்றதா மச்சானும் சொல்றார்.

ரியாஸ் - இனியென்ன செய்றது (நையாண்டி) தலைக்கு மேலவெள்ளம் போய்க்கொண் டிருக்கில்லயா.. நல்லொரு நேரமாப் பாத்து... தாத்தாவும் தங்கச்சியும் போய் பெண்ணப் பார்த்து மாலய போட்டிட்டு வாங்களன்.

கரீமா - உங்களுக்கு பகிடி... எங்க குடும்பத்திலயே நடக்காத காரியம்.. எவ்வளவு அழகா எங்க கல்யாணமெல்லாம் நடந்திச்சி.

மஸீனா - இந்த விஷயம் ஊருக்கு அம்பலமாயிட் டென்னா எல்லாருக்குந்தான் அவமானம்.

கரீமா - என்ன நடந்தாலும் போய்க் கேட்கத்தான் மனம் சொல்லுது.

ரியாஸ் - ஆ.. பொம்புளைங்க இப்படி விஷயங்களுக் குப் போனா சும்மா சத்தம்தான் மிஞ்சும்.

மஸீனா - அப்டீன்னா நீங்க போகப்போறீங்களா.. போங்க... கேட்கவேண்டியத கேட்டிட்டுத் தான் திரும்பிவரணும்.

ரியாஸ் - வேறென்ன..

மஸீனா - ஊராப் பணத்தால உண்டு கொழுக்க வெட்கமில்லயான்னு கேளுங்க.

கரீமா - கண்டபடி கல்யாணம் பேசிக்கொள்ள அகதி களான்னு கேளுங்க.

ரியாஸ் - (சிரிப்பு) இதுக்குமேல மொகம்பாக்க வழிவைக்க மாட்டான்...

கரீமா - (வியப்போடு) அங்க அங்க யாரது?

மஸீனா - ஆ (மெதுவாக) தாஸிம்போலில்லயா இருக்கு.

ரியாஸ் - ஆமா ஆமா தாஸிம் தான்.

கரீமா - (மெதுவா) கையில கவர்களெல்லாம் இருக்கே

மஸீனா - அப்டீன்னா நூர்தீன் நமக்குத் தரச் சொல்லி ஏதாவது அனுப்பியிருக்கிறானோ.. எதுக்கும் கொஞ்சம் நிதானமா கதையுங்க

ரியாஸ் - ஆ.. (சந்தோஷமாக) ஆ... வாங்க வாங்க ரொம்ப நாளக்கிப் பிறகு இந்தப் பக்கம்.

தாஸிம் - (இதமாக) தேவப்பட்டா வரத்தானே வேணும்.

ரியாஸ் - ஆமா ஆமா.

தாஸிம் - எல்லாரும் இங்கதான் இருக்காங்க போலி ருக்கே.. நமக்கும் அலைச்சல் குறைவு... ம்... இந்த நூர்தீன் இல்லாதது எனக்குப் பெரிய சங்கடமாயிருக்கு.

கரீமா - எங்களுக்கும்தான் கண்ணெல்லாம் இருட் டினாப் போல...

மஸீனா - இன்னும் ஒன்றரை வருஷம் எப்பிடி இருப் போமோ தெரியல்ல.

தாஸிம் - ம்... நான் பல இடங்களுக்கும் போகணும்.. இந்தாங்க இன்விடேஷன் காட்.

ரியாஸ் - ஆ என்ன..

தாஸிம் - தங்கச்சிக்கு கல்யாணம்.. ஒரு வருஷத் துக்கு முந்தியே பேசிவைத்ததுதான்.. இப்பதான் நேரம் வந்திருக்கு.. எல்லாரும் நேரகாலத்தோட வாங்க... என்ன சரி தானே..

☑

# பைத்தியம்

## காட்சி — 1

பாத்திரங்கள் : நஸீமா, மரியம், காஸிம்
இடம் : வீடு

நஸீமா – (உள்ளேயிருந்து மனநோயின் வெளிப் பாடான சிரிப்பு) நான்.. நான்... நான்.. கெட்டவளாம்... கூடாதவளாம் (சிரிப்பு) ஆமா எல்லோரும் சொல்றாங்க... நான் கெட்டவளாம் (சிரிப்பு)

மரியம் – (பதட்டத்தோடு) அது அது நம்ம நஸீமா தானே...

காஸிம் – (வியப்போடு) ஆ.. நம்ம நஸீமாவா.. ஏ.. ஏன்..

நஸீமா – (சிரிப்பு) நான் மோசமானவள்... ஆமா கெட்டவள் எல்லாருமே என்ன வெறுக் கிறாங்க... ஆமா (சிரிப்பு)

மரியம் - மகள்.. மகள்.. என்னம்மா உனக்கு நடந்தது... ஏதும் கெட்ட கனவுகள் கண்டியா..

காஸிம் - கனவா... இந்தப் பட்டப் பகல்லயா... யா அல்லா இதென்ன சோதின.

நஸீமா - (சிரிப்பு) என்ன பாக்கிறீங்க.. நான் மோசமானவள்... ஆமா என்ன என்னத்துக்கு பாக்கிறீங்க (சிரிப்பு)

காஸிம் - மரியம்.. மரியம்.. என்னவோ தவறு நடந்திட்டுது.. அக்கம் பக்கச் சனமெல்லாம் வந்து நெறயப் போறாங்க

மரியம் - ஆமா நெறயத்தானே செய்வாங்க... எனக்கென்னா ஒன்னுமே விளங்கல்ல

காஸிம் - வேறென்ன செய்ய மரியம்... டொக்டரிட்டத்தான் கூட்டிட்டுப் போகணும்.

நஸீமா - (சிரிப்பு) என்னம்மா.. டொக்டரிட்டயா... நான் கெட்டவள்... இந்த வீட்டவிட்டுப் போகமாட்டன்... வெளிய போனா கெட்டவள் ஆமா (சிரிப்பு)

காஸிம் - மரியம்... இனி யோசிட்டிருக்கிறதில பிரயோசனமில்ல... அவசரமா ஆக வேண்டியதப் பாக்கணும்.. நஸீமா உள்ள போங்க...

மரியம் - வாப்பா சொல்றத கேளுங்க... போங்க உள்ள...

நஸீமா - (சிரிப்பு)

மரியம் - இங்க நீங்க அவசரமாப்போய் எங்க

தம்பியேம் கூட்டிக்கிட்டு காரெடுத்திட்டு வாங்க.

காஸிம் – சரி நான் போய் சீக்கிரமா வாரன்.. நீங்க கொஞ்சம் வாரீங்களா...

மரியம் – என்ன சங்கதி?

காஸிம் – (மெதுவாக) எதுக்கும் வெளிப்பக்க கதவப் பூட்டிக் கொள்ளுங்க.

மரியம் – சரி நீங்க போங்க.

நஸீமா – (உள்ளே) சிரிப்பு.

## காட்சி — 2

பாத்திரங்கள் : நஸீமா, டாக்டர் மரியம், காஸிம்
இடம் : மருத்துவ நிலையம், வீடு

நஸீமா – (சிரிப்பு) ம்... டொக்டர்... மருந்து.. எனக்கா (சிரிப்பு) மருந்து செய்ததும் நான் நல்லவள்...ஆமா...

டாக்டர் – நேர்ஸ் அந்த இஞ்ஜெக்சன கொண்டு வாங்க.

நஸீமா – டொக்டர்... டொக்டர்... நான்.. நான் (மருந்தேற்றல்) ஆ..

டாக்டர் – தூக்கம் வரும்... அப்புறம் ஆறுமணித்தி யாலத்துக்கு பிறகுதான்..

மரியம் - (கவலையோடு) டொக்டர்.. என்ன டொக்டர்... எங்க மகளுக்கு நடந்திருக்கு... சொல்லுங்க..

காஸிம் - காலயில கூட நல்லாத்தான் இருந்தா டாக்டர்

டாக்டர் - இதொரு சாதாரண கேஸ்.. உடலில நோய்கள் வாரதுபோல மனசிலயும் வரும்... லேசாக குணமாக்கலாம்.

காஸிம் - அப்படியா டொக்டர்.. இனி உங்க பொறுப்புத்தான்

டாக்டர் - ஒரு நாலைந்து நாள் இங்க தங்க வேண்டியிருக்கும்... அவ்வளவுதான்... மற்றது உங்களிடமிருந்து கொஞ்ச விபரம் அறிய வேண்டியிருக்கு.

மரியம் - நாங்க என்ன சொல்லணும் டொக்டர்

டாக்டர் - ம்... உங்களுக்கு எத்தின பிள்ளைகள்?

காஸிம் - இரண்டே இரண்டுதான் டொக்டர்

டாக்டர் - நஸீமாதான் மூத்த பிள்ளையா?

காஸிம் - ஆமா டொக்டர்.

டாக்டர் - பதினெட்டு வயதிருக்குமா இரண்டாவது பிள்ளைக்கு.

மரியம் - எட்டு வயதுதான் டொக்டர்

டாக்டர் - ஓ... நஸீமாவ ரொம்ப செல்லமா வளர்த்திருப்பீங்களென்ன..?

மரியம் - ஆமா டொக்டர் கல்யாணம் செய்து ஐந்து வருஷத்துக்குப் பிறகுதானே அவ கிடச்சா.

டாக்டர் - ம்.. ரொம்ப ஆவலோட காத்திருந்து கிடச்ச குழந்த... அடுத்த குழந்த அதுக்கு பத்து வருஷத்துக்குப் பின்னால கிடச்சதால ரொம்பச் செல்லமா வளர்த்த பிள்ள... அப்படித்தானே..

காஸிம் - ஆமா டொக்டர்

டாக்டர் - சரி.. செல்லமா வளர்த்த பிள்ள... திடீரென்னு அந்தப் பிள்ளயால தாங்கிக்க முடியாதபடி ஏதோ நடந்திருக்கு... என்ன மௌனமா இருக்கிறீங்க... உள்ளதச் சொன்னால்தானே நான் சரியா ட்ரீட்மென்ட் கொடுக்கலாம்

காஸிம் - (கவலையோடு) எப்பிடி டொக்டர் மறைக்க முடியும்.

## - நினைவுக் காட்சி -

(டேப் ரகோடரில் ஆங்கிலப் பாடல் ஒலித்தல்)

மரியம் - நஸீமா என்னம்மா ஒன்பது மணியாகிட்டில்ல?

நஸீமா - (பாடல் நிற்றல்) இந்த கெஸட் பீஸக் கேட்டுக் கொண்டிருந்ததில நேரம் விளங்கல்ல.. சே... டியூட்டரிக்கு போற நேரமாச்சு.

மரியம் - சாப்பாடு தயார் பண்ணி வெச்சிருக்கன்.

நஸீமா - உம்மா.

மரியம் - என்னம்மா?

நஸீமா - (செல்லமாக) உம்மா நம்ம ஃபிரன்ஸெல்லாம் ஒரு ட்ரிப் போகப் போறாங்கம்மா.

மரியம் - எங்க போகப் போறாங்களாம்.

நஸீமா - கண்டியில ஒரு எக்ஸிபிஷன்... முக்கியமா அதுக்காகத்தான்... காலையில போய் பின்னேரம் வந்திருவோம்மா.

மரியம் - அதுக்கென்ன வாப்பாட்டச் சொல்லிட்டுப் போறதுதானே.

நஸீமா - ஆமா... வாப்பாட்டச் சொன்னாத்தான் காசு கிடைக்கும். (திரும்பி) வாப்பா... வாப்பா...

காஸிம் - என்ன நஸீமா.

நஸீமா - ட்ரிப் போக காசுவேணும் வாப்பா.

காஸிம் - ரொம்ப கவனமா போய்வரணும்.. சரி எவ்வளவு வேணும்.. ஒரு இருநூறு ரூபா.

நஸீமா - பஸ்ஸுக்கு நூறு ரூபா.

காஸிம் - (சிரிப்பு) சரி தேவயானத உம்மாட்டக் கேட்டு வாங்கிட்டுப் போங்க.

மரியம் - ம்.. நீங்க என்ற தலையில போட்டிட்டீங்க.

நஸீமா - சரிம்மா நான் டியூட்டரிக்கு போயிட்டு வாரன் (திரும்பி) வாரேம்மா

மரியம் - எவ்வளவு கேட்பாளோ தெரியல்ல

காஸிம் - அதுக்கென்ன... அவங்க ஆசைகளுக்கு நாங்க குறுக்கிடக்கூடாது... நாம சம்பாதிக்கிறது பிள்ளைகளுக்காகத்தானே.

மரியம் - பின்ன யாரில்லேன்னது (சிரிப்பு)

## காட்சி — 3

பாத்திரங்கள் : நிஸ்தார், நஸீமா, மரியம், காஸிம், டாக்டர்
இடம் : வீடு

நிஸ்தார் – (அழைப்பு) நஸீமா... நஸீமா

நஸீமா – ஆ... நீங்களா வாங்க வாங்க... (உள்ளே திரும்பி) உம்மா நிஸ்தார் மச்சான் வந்திருக்கார்

மரியம் – வாங்க மருமகன்

நிஸ்தார் – (நையாண்டியாக) ஆ... ட்ரிப்பெல்லாம் எப்பிடி? ரொம்ப சந்தோஷமா போய்வந்த தாகக் கேள்வி

நஸீமா – (குழந்தைத்தனமாக) அப்பிடியா யார் சொன்னாங்க?

நிஸ்தார் – (கடுகடுப்பாக) வேற யார்? ஊரே சொல்லிக் கிட்டிருக்கு

நஸீமா – ஊரே சொல்லுதா.. எனக்கொன்னும் விளங்கல்லியே

நிஸ்தார் – (கோபத்தோடு) ஆமா வெளங்காது... சின்ன பொபா... உம்மாவும் வாப்பாவும் தந்திருக்கிற இடம்... கண்டநின்டவங்களோட கண் காணா இடத்துக்கு ட்ரிப் போறாவாம் ட்ரிப்.

நஸீமா – (தடுமாறி) நீங்க... நீங்க.. ரொம்பக் கோபமா...

நிஸ்தார் – கோபம் வராமலிருக்குமான்னு கேக்கிறன்...

நாலு பேர்கூடி நடுத்தெருவில கதைக்கிற நேரம் நமக்கும் ரோஷம் வரத்தானே செய்யும்.. இவ்வளவு காலமும் நம்ம குடும்பத்த யாரும் நடுத்தெருவுக்கு இழுத் ததில்ல.. ஆமா நம்மவங்க அதுக்கு இடம் வைக்கல.

நஸீமா - யாரோ தவறாச் சொல்லிட்டாங்க... அப்பிடி என்ன நான் நடந்திச்சென்னு எனக்கு புரியமாட்டேங்குது.

நிஸ்தார் - புரியாது.. மானம் கௌரவம் குடும்ப அந்தஸ்து... இதயெல்லாம் சிந்திக்காதவங் களுக்கு புரியாதுதான்.

காஸிம் - (செருமல்) ம்... போன பயணத்த போக முடியாம திரும்பி வந்தன்... அங்க தங்கச்சி யும் கூப்பிட்டுச் சொன்னா.. ம்.. மருமகன் சொன்னதயும் கேட்டுக்கிட்டிருந்தன்.. எல் லாம் அளவு கடந்து போயிட்டு.. நம்ம புள்ள நம்ம கௌரவத்த பாதுகாக்குமென்னு பார்த்தா... சேச்சே..

மரியம் - எனக்குக்கூட அந்தப் பயணம் அவ்வளவா பிடிக்கல்ல.

நிஸ்தார் - பிடித்ததோ... பிடிக்கல்லயோ... காற்றில பறந்த மானத்த கயிறுகட்டி இழுக்க முடியாது (திரும்பி) சொல்ல வேண்டியத சொல்லிட்டன்

காஸிம் - கண்டநின்ட காவாலிப் பயல்களெல்லாம் போயிருக்கானுகள்.

மரியம் - அப்பிடியா விஷயம்... அல்லாவே...

தாஸிம் - ம்.. வந்து சும்மா இருப்பானுகளா... என்னென்ன மாதிரி கதைகள கட்டிவிடுவானுகள்..

மரியம் - ஆமா ரொம்பப் பாரதூரமான விஷயமாப் போயிட்டு நஸீமா...

நஸீமா - (கவலையோடு) ஏம்மா எல்லாரும் சேர்ந்து என்ன வாட்டி வதைக்கிறீங்க.. ஏதோ நான் திட்டமிட்டு இப்படியெல்லம் நடந்துக்கிட்டது போல...

காஸிம் - (கண்டிப்போடு) எப்படியிருந்தாலும் நீ சின்னப்பிள்ளயான்னு கேக்கிறன். பொருத்தமில்லாத இடத்தில விலகி நடந்திருக்கலாம்... ம்... அதுதானே புத்திசாலித்தனம்..

நஸீமா - (அழுகையோடு) ஏதோ நடந்தது நடந்து போச்சும்மா... இனி அப்பிடி எதுவுமே நடக்காது... இனி நான் வீட்டவிட்டு வெளியிறங்க மாட்டன் ஆமா...

காஸிம் - அழுது கத்தி ஊரக் கூட்டாம உள்ள போ... ம்.. (நேர இடைவெளி)

மரியம் - (மெதுவாக) உண்மையாகவே ஊரெல்லம் இதப்பத்தி கதைக்கிறாங்களா...

காஸிம் - அப்பிடி யாரும் கதைக்கிறதா தெரியல்ல.. தங்கச்சிதான் கூப்பிட்டு காதில ஊதினா... மருமகன் ரொம்பத்தான் கொதித்துக் கொண்டிருக்காரு..

மரியம் - ஏதோ அவங்க விரும்பல்லேன்னா நாம இடங்கொடுக்கக் கூடாதில்லயா...

காஸிம் - ஆமா அதத்தான் நானும் யோசித்தன்...ம்.. நாளக்கி அவளக் கட்டிக்கப் போறவங்க... அதனாலதான் மருமகன் முன்னால நானும் ஒரு சத்தம் போட்டன்.

மரியம் - நீங்களும் புத்தியாத்தான் வேல பாத்திருக் கிறீங்க.

காஸிம் - இல்லயா... அப்பதானே அவருக்கு சந்தோ சமா இருக்கும்.

## - நினைவு நிறைவு -

டாக்டர் - சரி... இனி நான் கேள்வி கேட்கலாம் தானே?

காஸிம் - கேளுங்க டொக்டர்

டாக்டர் - மருமகன்னு சொன்னீங்களே... அவருக்கு உங்க மகள கல்யாணம் செய்து கொடுக் கிறதா முடிவு பண்ணிட்டீங்க அப்படித் தானே...

மரியம் - ஆமா... முற மருமகன்... வசதியுள்ளவங்க.

டாக்டர் - ம்... எந்த அளவுக்கு அவர் படித்திருக்கார்.

காஸிம் - சின்ன வயதிலயே பிஸ்னஸ்ல இறங் கிட்டாங்க...

மரியம் - எப்பிடியும் ஏழெட்டு படித்திருப்பாங்க.

டாக்டர் - நஸீமா..

காஸிம் - (சிரித்து) அவள் எட்வான்ஸ் லெவல் பாஸ் பண்ணிட்டு இப்ப பிரைவட்டா ஏதோ கோஸ் செய்றா...

மரியம் - இங்கிலிஷ்கூட கதைப்பா டொக்டர்

டாக்டர் - ம்... நீங்க சொன்ன விஷயங்களயெல்லாம் தொகுத்துப் பாக்கிறப்போ...

இருவரும் - சொல்லுங்க டொக்டர்.

டாக்டர் - உங்க மருமகன் உங்க மகள விரும்புறாரே தவிர... உங்க மகளுக்கு அவரில விருப்பம் கிடையாது.. அவளின்ற அழகு... பண்பு... படிப்பு இதனால வேற யாரும் கவரப் படுவாங்களோன்னு மருமகன் ரொம்பத் தான் பயப்படுறார்... அதனாலதான் அந்தப் பாய்ச்சல்... நீங்க வேற அதுக்கு ஸபோட் பண்ணியிருக்கீங்க... இதயெல்லாம் விளங் கிக்க முடியாத குழந்தை உள்ளம் அவ ளுக்கு... குழம்பிப் போயிட்டா...

காஸிம் - நீங்க சொல்றது சரி டொக்டர்

மரியம் - எப்பிடியாவது மகள குணமாக்கித் தாங்க டொக்டர்.

டாக்டர் - (சிரிப்பு) ஏன் இப்படி பயப்படுறீங்க? இது ரொம்ப சின்ன கேஸ்... மூனு நாளக்கி நேர்ஸிங் ஹோமில இருக்கட்டும்..

காஸிம் - உங்க பொறுப்பு டொக்டர்.

டாக்டர் - ஓல் ரைட்.

## காட்சி — 4

பாத்திரங்கள் : காஸிம், டாக்டர், மரியம், நஸீமா
இடம் : மருத்துவமனை.

காஸிம் – நஸீமா எப்பிடி?

நஸீமா – ஆ... வாங்க வாங்க (அன்பாக) ஏம்மா அழுறீங்க? நான் சுகமாத்தானே இருக்கேன்

டாக்டர் – (வந்தபடி) ம்... எப்பிடி இப்பதான் வந்தீங்களா?

காஸிம் – ரொம்ப சந்தோஷம் டொக்டர்

டாக்டர் – சரி நஸீமாவ கூட்டிட்டுப் போகலாம்... இங்க கொஞ்சம் வாரீங்களா? (நேர இடைவெளி)

காஸிம் – என்ன டொக்டர்?

டாக்டர் – முக்கியமான சில விஷயங்கள் சொல்ல வேண்டியிருக்கு.

மரியம் – அதத்தான் எதிர்பார்க்கிறம் டொக்டர்

டாக்டர் – நஸீமா இப்ப பூரணமா குணமாகிட்டா.. அதப் பாதுகாத்துக் கொள்றது உங்க பொறுப்பு.

மரியம் – ஆமா நம்ம பொறுப்புத்தானே..

டாக்டர் – இதுதான் விஷயம்... நம்ம உடம்பில எத்தினயோ நோய்கள் வரும்... ட்ரீட்மென்ட் செய்ய குணமாகும்... அப்புறம் யாரும் அதப் பற்றிக் கவலப்பட மாட்டாங்க... அதேபோல நம்ம மனசிலயும் நோய்கள் வரும்... குணமாகும்.. ஆனா இந்த சமுதாயம் அவங்கள

விட்டுவைக்காது... பைத்தியமின்னு சொல் லிக் கொண்டிருக்கும்..

காஸிம் - உண்மதான் டொக்டர்.. சரியாச் சொன் னீங்க...

டாக்டர் - இப்படியான தவறான கண்ணோட்டத் தால... பல சந்தர்ப்பங்களில சம்பந்தப்பட் டவங்க... அதத் தாங்கிக்க முடியாம நிரந்தர நோயாளியாகிப் போனது நான் அனுபவத் தில கண்டிருக்கன்...

மரியம் - ஆமா இப்படியெல்லாம் நடவாம எங்க பிள்ளய நாம பாதுகாத்துக்குவம் டொக்டர்.

டாக்டர் - தஸ் ரைட் அதத்தான் நானும் சொல்ல வந்தன்... அதோட...

காஸிம் - சொல்லுங்க டொக்டர்.

டாக்டர் - இப்படியான ஒரு தாக்கம் எதனால ஏற்பட் டதென்னு நஸீமாக்குத் தெரியும்... அதனால அவவெளியால போக விரும்ப மாட்டா... எப்பவும் வீட்டோடதான் இருப் பா... அப்பிடி தனிமயா இருக்கிறதும் ஒரு வகையில நல்லதாப் படயில்ல.. அதாவது ரொம்ப சீக்கிரமா கல்யாணம் செய்து வைத் தீங்கென்னா...

காஸிம் - அப்பிடியா டொக்டர்... அப்பிடியே செய்து வைக்கிறம் டொக்கடர்

மரியம் - முற மருமகனுக்குத்தான் செய்து வைக்க தீர்மானித்திருக்கோம்.

காஸிம் - வேற ஏதாவது டெப்லட்ஸ்..

டாக்டர் - எதுவுமே அவசியமில்ல..

## காட்சி — 5

பாத்திரங்கள் : நிஸ்தார், காஸிம்
இடம் : வீடு

(டக் டக்... கதவில் தட்டும் சத்தம்)

நிஸ்தார் - ஆ.. மாமாவா வாங்க வாங்க...

காஸிம் - எங்க... உம்மா இருக்காங்களா?

நிஸ்தார் - இப்பதான் வெளிய போனாங்க மாமா.

காஸிம் - சரி... பரவால்ல... நான் வந்தது மருமகனக் காணத் தான்.. ம்.. நேற்று உம்மாவோட எல்லாம் கதச்சிட்டன்.

நிஸ்தார் - அப்பிடி என்ன விஷயம்?

காஸிம் - புதிய விஷயமொன்னுமில்ல.. அதுசரி நஸீமா சுகமில்லாமலிருந்தா... அந்தப் பக்கமே காணமே...

நிஸ்தார் - அ... உண்மதான் பிஸ்னஸ் ரொம்ப பிஸி யான நேரமாச்சே... அதனாலதான் வர முடியல்ல..

காஸிம் - என்ன இருந்தாலும் ஒரு கண் வந்து பார்த் திருந்தா... மகளுக்கு ரொம்ப சந்தோஷமா இருந்திருக்கும்.

நிஸ்தார் - அதனால தான் உம்மாவ அனுப்பி வெச்சன் மாமா...

காஸிம் - வந்தாங்க... பரவால்ல அப்படியொன்னும் குறைவாச் சொல்லல்ல.. சரி இப்ப என்ன சொல்றீங்க?

நிஸ்தார் – (இழுத்து) என்ன கேக்கிறீங்கென்னு...

காஸிம் – புரியல்லயா (சிரிப்பு) வந்து கல்யாண விஷயத்த எப்ப வெச்சிக்கலாமென்னு தான் கேக்கிறன்...

நிஸ்தார் – நஸீமாவின்ற கல்யாணத்தத்தானே சொல் றீங்க...

காஸிம் – ஆமா..

நிஸ்தார் – உங்க இஷ்டம் போல எப்பவும் வெச்சிக் கலாம்..

காஸிம் – (சிரித்து) எப்பவும் மருமகன் ரெடீன்னு சொல்றீங்க...

நிஸ்தார் – ஆமா என்னால முடிந்த உதவியச் செய்றன். (அதிர்ச்சி இசை)

காஸிம் – (வியந்து) ஆ... என்ன சொன்னீங்க? உங்க ளால முடிந்தத.. ஆ.. அப்டீன்னா நஸீமா கட்டிக்க நீங்க விரும்பல்லியா?

நிஸ்தார் – (அழுத்தமாக) கட்டிக்கிறதா சம்மதித்தது உண்மதான்... இப்ப இருக்கிற நிலம வேற... அதனாலதான் இப்பிடிச் சொல்ல வேண்டி யிருக்கு.

காஸிம் – (கோபத்தோடு) என்ன... என்ன கதை கதைக்கிறீங்க... இவ்வளவு காலமா எங்கள நம்பவைத்து... ம்... இப்பிடிச் சொல் லறீங்கென்னா...

நிஸ்தார் – வேறெப்படிச் சொல்றது... சரி எங்கள நம்பவைத்து அதுக்கேற்றாப்போல நீங்க நடந்துக்கிட்டீங்களா..

காஸிம் - சரி இப்ப முடிவா என்னதான் சொல்றீங்க...

நிஸ்தார் - பைத்தியங்கள என் தலையில கட்டிக் கொள்றதுக்கு நான் ஒன்னும் இன்னொரு பைத்தியமில்ல.

காஸிம் - (கோபமாக) முறைதவறிப் பேசுறீங்க... என் மகளப் பைத்தியமாக்கினதே நீதானப்பா.. இப்ப இப்பிடிச் சொல்றீங்க... ம்... நீங்கெல்லாம் மனிச ஜென்மங்களா?

நிஸ்தார் - நான் ஒன்னும் முறைதவறிப் பேசயில்ல.. முறை தவறி நடந்துக்கிட்டதாலதான் பைத்தியமாக்கிட்டாங்க.

காஸிம் - இதுக்குமேல இங்க இருக்கிறதில அர்த்தமில்ல.. (திரும்பி) எங்க வாயில நாங்களே மண்ண அள்ளிப் போட்டுக்கிட்டம்.

## காட்சி — 6

பாத்திரங்கள் : மரியம், காஸிம், நஸீமா, டாக்டர்
இடம் : வீடு

மரியம் - என்ன... ம்.. ஒரே யோசினயா இருக்கீங்க..?

காஸிம் - பைத்தியம் பிடித்தாலும் பிடிக்கும் போலிருக்கு..

மரியம் - அல்லாதான் காப்பாத்தணும்.. ம்... அபு நானா வந்ததக் கண்டன்.. என்னதான் அப்பிடிச் சொல்லிட்டுப் போறார்?

காஸிம் - வேறென்ன சொல்ல இருக்கு.. அந்த விஷயமும் சரிப்பட்டு வராதாம்.

மரியம் - (அதிர்ந்து) ஆ.. என்ன சொன்னாங்களாம்?

காஸிம் - வேறென்ன சொல்ல.. பைத்தியக்காரப் பொண்ண நம்ம தலையில கட்டப் போறீங்களான்னு கேட்டாங்களாம்.

மரியம் - அப்பிடியா... (கவலை) இது மூன்றாவது இடம்.

காஸிம் - நம்மல தெரிந்தவன்... பழகியவன்.. சொந்தக்காரன்... அவனே அப்பிடிக் கேட்டதுக்கப்புறம் வேற யார்தான் கேட்க மாட்டாங்க.

மரியம் - ம்.. இப்பிடியே போனால்..

காஸிம் - அதத்தான் மரியம் நானும் யோசிக்கிறன்.

மரியம் - ம்.. தனிமையில யோசிக்க விடாம... சீக்கிரமா கல்யாணம் செய்துவைக்கச் சொன்னாங்க... ம்.. இந்த விஷயங்களெல்லாம் அவள் காதிலயும் விழத்தானே செய்யும்.

காஸிம் - அப்புறம் நினைக்கவே பயமா இருக்கு... முடிந்தளவு ரகசியமா இருக்கணும்

மரியம் - ம்... அவள் என்ன சின்னப் பிள்ளயா.. புரோக்கர்மார் வாறது போறதெல்லாம் காண்றாள்.. ரகசியமா கதைக்கிறதெல்லாம் அவதானிக்கிறாள்.

காஸிம் - காலத்தக் கடத்தாம எப்படியாவது காரி யத்த முடிக்கத்தானே நானும் பாக்கிறன்.. பேசிற இடங்களுக்கெல்லாம் எப்பிடியோ அந்த விஷயமும் போய்ச் சேருது பாருங்க.

மரியம் - போகாமலிருக்குமான்னு கேக்கிறன். எல் லாம் உங்க புத்தி கெட்டதனத்தால தான்.

காஸிம் - என்ன மரியம் கடைசியில நீங்களும் எனக்கா குத்தம் சொல்றீங்க.

மரியம் - வேற யாருக்குச் சொல்றது... தங்கச்சி தங்கச்சி... மருமகன் மருமகன்னு கடை சீல...

காஸிம் - எல்லாம் அல்லா எழுதின எழுத்துத்தான் (பெருமூச்சு)

மரியம் - குடும்பம் குடும்பமென்னு செத்தீங்க...

காஸிம் - இப்பிடி நடக்குமென்னு யார் நம்பினது...

மரியம் - குடும்பம் கோத்திரம் சொத்துப் பத்தென் னுதான் பாத்தீங்க.. உங்க மகளுக்கேத்த மாப்பிளயான்னு கொஞ்சமாவது யோசித் தீங்களா...

காஸிம் - (கோபம்) மரியம் இப்ப எனக்கென்ன செய்யச் சொல்றாய்.

மரியம் - நீங்க சத்தம் போட்டாப் போல நான் வாய மூடப்போறதில்ல... உங்களுக்கிருக்கிற ஆத்திரம் எனக்கும் இருக்கத்தான் செய் யிது. படித்தவள்... அழகான பிள்ளய அந்த

அறிவுகெட்ட முண்டத்துக்கு கொடுக்க முடிவுசெய்தீர்களே... இப்ப என்னா நடந்திச்சி..

காஸிம் - (இதமாக) அவன் அறிவுகெட்ட புத்தியக் காட்டிப் போட்டான்... இப்ப அதையே கதச்சிட்டிருக்கிறதில என்ன அர்த்தமிருக்கு.

மரியம் - ஆகவேண்டியத அவசரமா பார்க்கச் சொல்லித்தானே சொல்றன்.

காஸிம் - பாவம்... கவல துன்பம் தெரியாம வளர்ந்த பிள்ள... சந்தோஷமா வாழவேண்டிய வயதில...

மரியம் - அதத்தானே டொக்டரும் சொன்னா..

காஸிம் - பழைய கதைகள விடுங்க... இப்ப நடக்கிற விஷயங்களப் பார்ப்பம்...

மரியம் - ஆமா அதுதான் எனக்கும் கவலயா இருக்கு... (கவலை) எப்ப பார்த்தாலும் யோசித்துக்கொண்டில்லயா இருக்காள்.. வெளிய போறதையும் நிறுத்திட்டாள்.

காஸிம் - கூட்டாளிமார் வந்தாக்கூட இதுதான் கதை.

மரியம் - வேறென்ன கதைக்க இருக்கு... படிப்பயும் விட்டிட்டாள்..

காஸிம் - அப்போதெல்லாம் ரேடியோ... டீவீ.. புத்தகங்கள் இல்லேன்னா அவளுக்கு நேரமே போகாது.

மரியம் - எனக்கென்னா பயமா இருக்கு... அவசரமா விஷயமொன்னப் பாருங்க... ரெண்டு வருஷத்துக்கு முன்னால முகம்மது ஹாஜி யார்ட மகன் வாயால கேட்ட நேரத்தில குடுத்திருந்தா பிரச்சினயே இல்ல... எவளவு நல்ல பொடியனன்.

நஸீமா - (மனநோயின் வெளிப்பாடாக) நான்.. நான்... பைத்தியக்காரி (சிரிப்பு).. நான் பைத்தியக்காரி.. (சிரிப்பு)

காஸிம் - நஸீமா.. என்னம்மா நடந்தது.. ஏம்மா இப்பிடிச் சிரிக்கிறாய்... நஸீமா...

மரியம் - (கதறி) எங்க தலையில இடி விழுந் திட்டுதே... எம்புள்ளேட மனதக் குழப்பிப் போட்டிட்டாங்களே...

நஸீமா - (சிரிப்பு) எனக்கு... எனக்கு... பைத்தியமாம்... (சிரிப்பு) நான் நான் பைத்தியக்காரி... ஓ (சிரிப்பு) எனக்கு கல்யாணமாம்..

காஸிம் - ம்.. இப்ப அழுதுகொண்டிருக்கிறதில அர்த் தமில்ல... உடனடியா டொக்டரிட்டப் போவம்.

மரியம் - (அழுகையோடு) வேறென்ன செய்றது... அன்னக்கி டொக்டர் சொன்னது அப்பி டியே நடந்திட்டுது.

டாக்டர் – (எதிரொலியாக) நம்ம உடல்ல நோய்கள் வரும்... குணமாகும்... அப்புறம் யாருமே அதைப்பற்றிக் கவலப்படமாட்டாங்க... நம்ம மனசிலயும் நோய்கள் வரும்... குணமாகும்... எங்க சமுதாயம் சம்பந்தப் பட்டவங்கள விட்டுவிடப் போறதில்ல... இதனால பழைய நிலைக்கே மாறிப்போன பலரை எனது அனுபவத்தில் கண்டிருக்கிறன்.

நஸீமா – (சிரிப்பு) நான் நான்... பைத்தியக்காரி... (சிரிப்பு)



பல்துறை ஆக்க இலக்கிய வாதியான திக்குவல்லைகமாலின் இன்னொரு படைப்பாக "நிராசை" வெளிவருகிறது.

ஏற்கனவே "புகையில் கருகிய பூ" என்ற தொகுதி வெளிவந்துள்ளதை இரகசிகர்கள் அறிவார்கள்.

வானொலி நாடகம் சமூகத்தின் மத்தியில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்திய காலகட்ட மொன்றிருந்தது.

நாடகங்களுக்கூடாக சமூகப் பிரச்சி-னைகளை, வானொலிக் கென்று வகுக்கப்பட்டுள்ள எல்லைக்குள் நின்று கொண்டு தைரியமாகவும் அழுத்தமாகவும் வெளிப் படுத்தியவர்களில் கமால் முதன்மை வகித்தார் என்பதை எவரும் மறுப்பதற்-கில்லை.

ஒலிநாடகங்கள் மூலம் எப்படி சமூகச் சிந்தனைகளை முன்னெடுக்கலாமென்பதற்கு இந்நாடகங்கள் சாட்சியாக மட்டுமல்ல ஆவணமாகவும் திகழ்கின்றன.

கமாலின் எழுத்துப்பணி என்றும் வாழும் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை.

**ஏ. எம். முகைதீன்** (அதிபர்)

**தொக்ஸ் வீதி,**
**மூதூர்.**

**ISBN : 955-95926-8-8**